# ஆண்நிலை இயல்பு பற்றிய ஆழமான தேடல்

கம்லா பஹாசின்

SSA

சமூக விஞ்ஞானிகள் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்நிலை இயல்பு பற்றிய ஆழமான தேடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்நிலை இயல்பு பற்றிய ஆழமான தேடல்

கம்லா பஹாசின்

விளக்கப் படங்கள்
பிந்தியா தாபர்

சமூக விஞ்ஞானிகள் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்லா பஹாசின் எழுதிய
"ஆண்நிலை இயல்பு பற்றிய ஆழமான தேடல்" இன்
ஆங்கில மூல நூலான
***Exploring Masculinity***
2004ம் ஆண்டு வெளியிடப்பட்டது

தமிழில் :
மு.பொன்னம்பலம்


| | | |
|---|---|---|
| Copyright | : | Social Scientists Association © |
| Translator | : | M. Ponnambalam |
| I S B N | : | 955-9102-81-8 |
| First Edition | : | August 2005 |
| Publisher | : | Social Scientists Association,<br>12, Sulaiman Terrace,<br>Colombo - 05, Sri Lanka. |
| Printer | : | Techno Print,<br>55, Dr. E.A. Cooray Mawatha,<br>Colombo - 6 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



***ஏன் இன்று அனேகமானோர் ஆண் நிலை இயல்பு பற்றி திடீரென பேசத் தொடங்கியுள்ளனர்?***

தெற்காசியப் பெண்களின் இயக்க நடப்பு நிலையில் கடந்த 30 வருடங்களாகக் குவிமுகப்பட்டு நிற்பது எமது தந்தை வழி ஆதிக்க சமூகங்களால் பெண்களும் சிறுமியரும் மோசமாக நடத்தப்பட்டமையே. எல்லா வர்க்கங்களையும் சாதிகளையும் சேர்ந்த அதிக தொகையினரான பெண்களதும் சில ஆண்களதும் சோர்வுறாத முயற்சியாலும் தூண்டுதல்களாலும் பெண்களுக்கு எதிரான பரவலான கடுஞ் சேதமேற்படுத்தும் வன்முறை தற்போது பாரிய சமூகப் பிரச்சினையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிறுமியர், பெண்கள் ஆகியோருக்கு நேர்ந்த தொடர்ச்சியான இழப்புகள் சுரண்டல்கள் பாரபட்சம் இன்னும் இவற்றோடு பொருளாதார, அரசியல், சமயம், கலாசாரம் என்று தீர்வெடுக்கும் செயற்பாடுகளில் இருந்து இவர்கள் ஓரங்கட்டப்பட்டமை ஆகியவை பற்றி, தீர்வு எடுப்போருக்கும் சமூகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பால்நிலை சார்பானவற்றை பிரதான நீரோட்டத்தோடு இணைய வைத்ததில் பெண்கள் இயக்கம் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது வெற்றி பெற்றுள்ளது என்றே கூற வேண்டும். தொழிலாள வர்க்கப் பெண்களையும் மத்தியதரவர்க்கப் பெண்களையும் தந்தைவழி ஆதிக்க சமூக அநீதி பற்றிச் சிந்திக்கவும் தம்பால் நம்பிக்கையை மீட்டெடுக்கவும் தந்தைவழி ஆதிக்க சமூகத்தின் பல்வகை உருவங்களையும் முகங்களையும் எதிர்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால்விடுவதற்கு ஒன்று திரளவும் ஏராளமான பெண்கள் குழுக்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் உதவி புரிந்துள்ளன.

எங்களில் அனேகமானவர்கள் பலரும் எங்களுக்குள்ளேயே புரையோடியுள்ள தந்தைவழி ஆதிக்க சமூகச் சாய்வுகளையும் விளங்கிக் கொள்ள முயற்சித்துக் கொண்டே எங்களையும் மாற்றிக் கொண்டு ஏனைய மற்றப் பெண்களையும் மாற்றுவதற்கு உதவி புரிய வேண்டும். பெண்கள் பிரிவினர் பால்நிலை சார்பான விழிப்பு பட்டறைகளையும் பயிற்சிகளையும் அமைத்து செயற்பாட்டாளர்களாக பெண்கள் மாறுவதற்கும் பால்நிலை சமத்துவத்தை சாதிப்பதற்கும் பெண்களை ஆற்றல்மயப்படுத்துகின்ற வழிமுறைகளை ஆரம்பித்து வைக்கின்றனர். இதனோடு பால்நிலை பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்வதற்கனுசரணையாக பெண்கள் ஆய்வானது பல்கற்கைநெறிவழிமுறை அணுகுமுறையாக வெளிவந்திருக்கிறது.

சமத்துவம் பற்றிய விவாதங்களும் அதை சாதிப்பதற்காகத் தேவைப்படும் நடவடிக்கை வகையும் பெண்களின் மாற்றமுறும் வகிபாகம், நிலைப்பாடு பெண்களின் அந்தஸ்து ஆகியவற்றை பிரதான நோக்காக கொண்டிருக்கும். அதிர்ச்சியூட்டாத வகையில் பெண்களே இந்தப் போராட்டத்தில் தலைமைவகிபாகத்தை எடுத்துள்ளனர். ஆதனால் பெண்களும் பெண்களின் வாழ்க்கையும் மாற்றமுறத் தொடங்கியுள்ளன. எவ்வாறாயினும் இதற்கிணையாக ஆண்கள் வாழ்க்கையில் எந்தமாற்றமும் ஏற்படவில்லை. பெண்கள் மாற்றத்திற்காக ஒழுங்குகள் செய்து கொண்டிருக்கும் அதே நேரத்தில் அனேகமான ஆண்கள் சிறிது முயற்சியும் அல்லது எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. உண்மையில் அவர்கள் மாற்றத்தை பொதுவாக எதிர்த்துள்ளார்கள். சிலவேளை வன்முறையோடு அதைச் செய்துள்ளார்கள்.

இது ஏறத்தாள பால்நிலை அசமத்துவத்திற்கு சவால்விடுக்கும் முகவர்களாக இயங்கும் பெண்கள் பற்றிய தேவையான பிரத்தியேக குவிமுகப்படுத்தலாகும். ஏனென்றால் பெண்களே அன்றும் இன்றும் தந்தைவழி ஆதிக்க சமூக அமைப்புகளால் கீழ்மைப்படுத்தப்பட்டவர்களாவர். ஆனால் எங்களில் பலர் இப்போது தாமும் ஆண்களிலும் ஆண் நிலை இயல்பிலும் கவனிப்பைச் செலுத்த வேண்டும் என்று உணர்கின்றனர். பால்நிலை உறவுகள் மேலும் சமமாகவும் நீதியாகவும் அமைய வேண்டுமானால் ஆண் - பெண் இருசாராரும் மாறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உறவுகளின் ஒரு உருமாற்றம் என்பது ஆண்நிலை இயல்பு என்னும் கருத்தை நாடி விளங்கி கொள்ள வேண்டும் என்பதையும் அது ஆண்களுக்கும் பெண்களுக்கும் என்ன செய்கிறது என்பதையும் தேவையான நேரத்தில் அதை மாற்றுவதையும் தேவையாக்குகிறது.

ஆண்கள், தந்தைவழி ஆதிக்க சமூகத்திற்கு சவால்விடும் இயக்கத்தின் பங்காளிகளாவதும் முக்கியமானது. ஏனெனில் அது பெண்களுக்கு மட்டும் கெடுதல் செய்யவில்லை. அது ஆண்களுக்கும் அவர்கள் தெரிவுகளைக் குறைத்து, அவர்களை இறுக்க நிலைக்குள் திணித்து மனிதத்தன்மையற்றவர்களாக்கி விடுகிறது. சுவீடன் போன்ற நாடுகளில், பெண்கள் இயக்கத்திற்கும் பொருளாதார, அரசியல் மாற்றத்திற்கும் பதில் அளிக்கும் வகையில், 1970 களிலேயே ஆண்கள், ஆண்நிலை இயல்பு தொடர்பான விவாதங்கள் தொடங்கிவிட்டன. அத்தகைய விவாதங்கள் கொள்கைகள் நிகழ்ச்சிகள் தெற்காசியாவில் கனகாலமாக இல்லாதிருந்தது.

பின்வரும் காரணங்களுக்காக, ஆண்களும் ஆண்நிலை இயல்பு பற்றிய கருத்தும் விளங்கிக் கொள்ளப்படுவது தேவையாகும் என்று உணர்கிறேன்.

- பால்நிலைப் பிரச்சினைகள் பெண்களின் பிரச்சினைகள் மாத்திரமல்ல. "பெண்நிலை இயல்பு" என்பது "ஆண்நிலை இயல்பிலிருந்து தனிமைப்பட்டு இருப்பதல்ல என்று நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஒன்றினது படிமமும் ஆற்றலும் மற்றதினது படிமத்தையும் ஆற்றலையும் தீர்மானிக்கிறது. ஆண்கள் "மேன்மையானவர்கள் எனக்கருதப்பட்டால் மாத்திரமே பெண்கள் "கீழ்மையான"வர்கள் எனக் கொள்ளப்படலாம். ஆண்கள் பெண்களை கீழ்மைப்படுத்த விருப்பமுடையவர்களாகவும் அதற்கு இயலுமானவர்களாகவும் இருந்தால் மாத்திரமே பெண்கள் கீழ்மைப்படுத்தப்படக் கூடியவர்களாகவும் கீழ்மையானவர்களாகவும் இருக்கலாம்.



- பெண்களின் அமைப்புகள் பலகாலமாக பெண்களுக்கெதிரான வன்முறை சம்பந்தமாக, ஆண்களுக்கு இதில் எந்தவித பாத்தியத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்பது போல், முழுப் பொறுப்பையும் தாமே எடுத்திருந்தன. இது மாறவேண்டும். ஆண்கள் தங்கள் பொறுப்பின் பங்களிப்பையும் ஏற்றுக் கொண்டு இதற்கெதிரான பெண்கள் போராட்டத்திலும் மற்றய சமூகப் பிரச்சினைகளிலும் சேர்ந்து கொள்ள வேண்டும்.

- தந்தைவழி ஆதிக்க கலாசாரத்தில் நிலவும் ஒரேவகைப்பட்ட மாறாத் தன்மையால் சிறுவர்களும் ஆண்களும் பாதிப்படைகின்றனர். உணர்ச்சி பூர்வமானவராய் நற்பண்புடையவராய், கவனிப்பவராய் பலவீனத்தை அல்லது பயங்கரமாய் இருந்ததை ஒப்புக் கொள்ளுவோராய் இருத்தல் ஆகிய யாவும் ஊக்குவிக்கப்படுவதில்லை. குடும்பத்தை பார்க்க வேண்டிய பாதுகாக்க வேண்டிய, போர்வீரரான வகிபாகங்களுக்குள் இவர்கள் திணிக்கப்படுகின்றனர். ஆகவே ஆண்நிலை இயல்பு பற்றிய நுணுகிய கவனம் எடுப்பதோடு அது சிறுவர்களுக்கும் ஆண்களுக்கும் என்ன செய்கிறது என்பதையும் பார்க்கவேண்டும் என்பதும் முக்கியமாகும்.

- அதிகமான ஆண்களால் மேலோங்கிய ஆண்நிலை இயல்புக் கருத்துக்கு ஏற்ப வாழமுடியாமல் இருக்கிறது. அவர்கள் ஆக்கிரமிப்புத் தன்மை இல்லாது இருக்கும் பட்சத்தில் பெண்தன்மை உடையோராய் இருப்பதாக நகைக்கப்படுகின்றனர். மென்தன்மையுடைய சிறுவர்கள், பலம்வாய்ந்த ஆண்களால் பால்ரீதியாகச் சுரண்டப்படுகின்றனர். வீரியம், ஆண்பாலரின் பாலியல் ஆற்றல் அதன் வெளிக்காட்டல் ஆகியவை தொடர்பான மிதமிஞ்சிய அழுத்தம் என்பன ஆண்களிடையே பாரிய பாதுகாப்பின்மையையும் கவலையையும் ஏற்படுத்துகிறது. இப்பிரச்சினைகள் பற்றிய உணர்வுபூர்வமான விளக்கமும் கலந்துரையாடலும் கனகாலமாக தேவைப்படும் ஒன்றாகவே இருக்கிறது.

- ஆண்கள், எவ்வாறு ஆண்நிலை இயல்பு என்பது அவர்களது ஆபத்தான நடத்தைகளோடு குறிப்பாக எச் ஐ.வி / எயிட்ஸ் போதைவஸ்து துஷ்பிரயோகம், மதுபாவனை இன்னும் ஆபத்தான நடத்தைகளின் பின்னணியோடு தொடர்புடையதாய் இருக்கிறது என்பதை உணரவேண்டும். இத்தகைய நடத்தைகள் அதில் ஈடுபடும் ஆண்களை மாத்திரமல்ல இன்னும் அனேகமானோரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக பெண்களையும் ஆபத்துக்-குள்ளாகிறது என்பதையும் உணர வேண்டும்.



- இனப்பெருக்கம், எச் ஐ.வி, எயிட்ஸ், பாலியல் நடத்தை ஆகியவை தொடர்பான ஆய்வு, பெண்களுக்கு இவ்விடயங்களில் தெரிவுகள் என்பது மட்டுப்படுத்தப்பட்டதாய் உள்ளதென்றும் பாலியல் ரீதியாகக் கடத்தப்படும் நோய்களாலும் எச்.ஐ.வீ எயிட்ஸினாலும் இவர்தாக்கப்படுவதும் சாத்தியம் என்றும் வெளிக்கொணர்ந்துள்ளது. இதற்கு பிரதான காரணம் அசமத்துவமான பால்நிலை உறவுகளே.

- பெண்ணியக் கருத்தாளர்களும் பெண்களின் இயக்கமும் தந்தை வழி ஆதிக்க ஆட்சியை சமூக முறைமையாக விளங்கிக் கொள்ள முயல்கிறது. பெண்ணியத்திற்கு எதிராக வன்முறையைக் கைக்கொள்ளாமலும், அதற்கெதிராக எதிர்பபுணர்வை கட்டவிழக்காமலும் பெண்ணியக்காரர்களால் எழுப்பப்படும் பிரச்சினைகளில் ஆண்களும் தீவிரமாகப் பங்கு பற்ற ஊக்குவிப்பதோடு அது பெண்கள் ஆண்கள் இருசாராரையும் பாதிக்கிறது என்பதை அங்கீகரிக்கவும் செய்ய வேண்டும்.

- சமூக பொருளாதார மாற்றங்கள் பால்நிலை வகிபாகங்களிலும் உறவுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. உதாரணமாக ஆண்களிடையே நிலவும் பரவலான வேலையில்லா திண்டாட்டம் அவர்கள்தான் குடும்பத்திற்கு "உணவளிப்போர்" "காப்பாற்றுவோர்" என்ற முன்னுரிமையை இல்லாமல் செய்துவிடுகிறது. இந்தியாவின் சில பகுதிகளிலும் உலகத்திலும் 40 வீதமான குடும்பங்கள் இப்போது பெண்கள் தலைமையில் இயங்குகின்றன. ஆண் அதிகாரத்துக்கும் வாழ்க்கையின் சிலதுறைகளில் அவர்கள் அனுபவித்த முன்னுரிமைகளுக்கும் நேர்ந்த தேய்வனவு, உளவியல் சமூக ரீதியான பிரச்சினைகளை அனேக ஆண்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. குடும்பத்திற்குள் சமூகத்துக்குள்ளும் ஆண்களின் பொருளாதார, சமூக ஆதிக்கத்தின் வீழ்ச்சி, பெரும் பாதகமான நிலையை ஏற்படுத்தலாம். இது சிலரை, அவர்களுக்கு ஏற்பட்ட ஆத்திரத்திற்கும் விரக்திக்கும் மாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தாக பெண்களுக்கெதிரான பெரும் வன்முறைக்கும், குடிபோதைக்கும் போதைவஸ்து துஷ்பிரயோகத்துக்கும் அல்லது கொடிய குற்றச் செயல்களுக்கும் இட்டுச் செல்லக் கூடியது.

- தெற்காசியா உட்பட உலகின் அனேக இடங்களில் விவாக விலக்கு வீதம் கூடிக்கொண்டே செல்கிறது. அமெரிக்கா, இங்கிலாந்து வட ஐரோப்பியா நாடுகளில் 100 திருமண வீதத்தில் 40 விவாக விலக்கல் நிகழ்கிறது. இப்போ பெற்றார் ஒருவரே உள்ள குடும்பங்களே பொதுவானதாகி வருகிறது. அத்தோடு பிள்ளைகளோடு தனியாக இருக்கும் பெற்றார் என்பவர் தாயாகவே இருக்கிறார். 1998ல் அமெரிக்காவில் மூன்றிலொரு குடும்பங்கள் ஒற்றைப் பெற்றார் உள்ள குடும்பங்களே. ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 13 வீதப் பிள்ளைகள் எல்லாம் ஒன்றைப்பெற்றார் குடும்பத்திலிருந்தே வருகின்றனர். ஆண்கள் பெண்களைத் தமக்கு சமதையாக ஏற்றுக் கொள்ள மறுப்பதால் அனேக குடும்பங்கள் உடைந்து போய்க் கொண்டிருக்கின்றன. இப்பொழுது சில பெண்கள் திருமணம் செய்வதற்கு மறுக்கின்றனர். காரணம் அவர்கள் முழுக் குடும்பத்தையும் சுமக்கத் தயாராய் இல்லை. இன்னும் பிள்ளைகள் வளர்ப்பது, இவற்றுக்கு மேலாக ஆண்கள் இவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்துவது எதையும் அவர்கள் விரும்பவில்லை. குறிப்பாக தொழில்மயப்படுத்தப்பட்ட சில நாடுகளில் இந்தப்போக்கு காணக்கூடியதாய் உள்ளது.

- இன்னும் ஆண்களையும் ஆண் நிலை இயல்புகளையும் விளங்கிக் கொள்வதற்கு இன்னொரு முக்கிய காரணம், இன்று உலகம் முகங்கொள்ளும் பிரச்சினைகளுக்குக் காரணமாய் இருப்பது மேலாதிக்க ஆண்நிலை இயல்பே. அனேகமான சந்தர்ப்பங்களில் ஆண்களே பெண்களுக்கெதிரான வன்முறையாளர்களாக இருக்கின்றனர். அனேகமான வன்முறைப் பொருதல்களும் யுத்தங்களும் ஆண்களாலேயே தொடக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆண்களே அனேகமான வளங்களையும் தீர்வெடுக்கும் செயற்பாட்டையும் கட்டுப்படுத்துபவர்களாகவும் இயக்குபவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த உலகத்தை வழிநடத்துபவர்களாக ஆண்களே இருக்கின்றனர். எங்களுக்கு தெரியும் இந்த உலகம் நீதியானதாகவோ அமைதியானதாகவோ இல்லை என்று. லட்சக்கணக்கான மக்கள் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தலாகவே தம் வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

- உலகப் பெண்கள் இயக்கம் சமத்துவத்தையும் அபிவிருத்தியையும் சமாதானத்தையும் தருமாறு கோரியுள்ளது. ஆண்நிலை இயல்பு வாதத்துக்கும் (இராணுவவாதத்துக்கும்) சவால்விடுக்காது. இந்த நோக்குகள் அடையப்பட வாய்ப்பில்லை. தொழில் சம்பந்தமான மீள்பிரிவு ஏற்படுத்தப்பட்டு ஆண்கள் குடும்பச் சமையல் அறைக்குள் பிரவேசித்து பிள்ளை பராமரிப்பில் ஈடுபடாத பட்சத்தில் பொது விடயங்களில் (உ+ம் உள்ளூர் ஆட்சிசபைகளில்) பெண்கள் இடம்பிடிப்பதும் பொறுப்புகளை ஏற்பதும் முடியாததாகிவிடும். இது இல்லாமல் பெண்கள் பொது வாழ்க்கையில் பங்கெடுப்பதோ பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருப்பதோ முடியாததாகிவிடும்.
- ஆண் வன்முறையின் பலிப்பொருளாய் பெண்கள் இருப்பதுபற்றி நாம் பேசிக் கொண்டிருந்தாலும் ஏன் ஆண்கள் இவ்வாறு அடிக்கடி கொடுஞ்செயல்புரிவோய் மாறுகின்றனர் என்பது பற்றி நாம் போதுமான கவனஞ் செலுத்தவில்லை. ஏன் கால்பந்தாட்ட அரங்கிலும் தெருமூலைகளிலும் அவ்வப்போது வன்முறை வெடிக்கிறது? எவ்வாறு ஆண்கள் கொலை செய்து கொண்டும் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் தீ வைத்துக் கொண்டும் போக முடிகிறது? ஏன், எவ்வாறு ஆண்கள் சிறுமிகளை அல்லது சிறுவர்களை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்துமளவுக்கும் தம் மனைவிமாரை புறந்தள்ளுமளவுக்கும் தம் சொந்த மகள்மாரையே வன்புணர்வுக்குட்படுத்துமளவுக்கும் மிலேச்சத்தனம் படைத்தவர்களாக மாறுகின்றனர்? இந்தவிதமான ஆண் நிலை இயல்பு ஆண்களுக்கு என்ன செய்துவிடுகிறது? இவ்வாறே பெண்களுக்கு தந்தைவழி ஆதிக்க ஆட்சி என்ன செய்கிறது என்பதைப் பார்ப்பது முக்கியம். இவ்வாறே ஆண்களின் மனங்களுக்கு, கற்பனைகளுக்கு, ஆன்மாவுக்கு, நடத்தைக்கு அது என்ன செய்கிறது என்பதைப் பார்ப்பது சமமான முக்கியம் வாய்ந்தது.

நாங்கள் வன்முறையை, பொருதல்களை, யுத்தத்தை குறைக்க வேண்டுமானால், எங்களுக்கு அமைதி வேண்டுமானால், எங்களுக்கு அர்த்தமுள்ள உறவுகள் வேண்டுமானால் நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடித்த அபிவிருத்தியில் உண்மையாகவே அக்கறை கொண்டிருப்போமானால் நாங்கள் ஆண்களையும் ஆண்நிலை இயல்புகளையும் விளங்கிக் கொண்டு சிறுவர்கள், ஆண்கள், சிறுமிகள், பெண்கள் ஆகியோரிடையே கூட்டுப்பங்களிப்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றைச் சாதிப்பதற்கு இந்த இயக்கத்தை பெண்கள் முன்னெடுத்துச் செல்லவேண்டும். ஆனால் ஆண்கள் இதில் பெருந்தொகையினராய் சேர்ந்து கொள்ள வேண்டும்.

**"ஆண்பால்". "ஆண்நிலை இயல்பு" என்னும் சொற்கள் உண்மையில் எதைக் கருதுகின்றன?**

ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியின்படி, ஆண்பால் என்றால் மரபு-ரீதியாக ஆண்களோடு சம்பந்தப்படுத்துகின்ற குணநலன்களை அல்-லது தோற்றத்தைக் கொண்டிருப்பது. ஆதாவது உயிரியலோடு சம்பந்-தப்படுவதைவிட ஆண்நிலை இயல்பு என்பது ஒரு குறிப்பிட்ட குணக்-கூறோடும் குணநலன்களோடும் சம்பந்தமுடையதாய் இருக்க வேண்டும். கொலின்ஸ் தெஸோறஸ் அகராதி ஆண்நிலை இயல்புக்கு பின்வரும் ஒத்தகருத்துக்களைத் தருகிறது: "ஆண், ஆண்மையுடைய ஆண் போன்ற, ஆண்மையான, ஆண்மைத்தனமுடைய, வீரியமான, தைரியமான, வீரமான, வீரத்தன்மையான, கம்பீரமான, கடுமையான, ஆண்மைமிக்க, திடகாத்திரமான ஆற்றலுள்ள, வீரபராக்கிரம, செங்குருதியான, தீர்க்கமான, விறார்ந்த, பேர்நெஞ்சுடைய, கட்டுறுதியான, பலமான, வீராப்புடைய, உடற்கட்டுமிக்க. அப்பாடா! இந்தப்பட்டியல் எங்களுடைய சமூகம் (மேற்கு, கிழக்கு) உண்மையான ஆண்கள் பற்றி என்ன நினைக்கிறது என்பதைக் காட்டுகிறது. அதனால் ஆண் நிலை இயல்பு என்பது சமூகங்களால் சிறுவர்க-ளுக்கும் ஆண்களுக்கும் வழங்கப்பட்ட சமூக வரைவிலக்கணமாகும். பால்நிலை போன்று, இது ஒரு சமூகக் கட்டமைப்பாகும். இயற்கை எங்களை ஆண் பெண் எனப் பிரித்து, உயிரியல் ரீதியான வரைவை எங்களுக்கு தருகிறது. ஆனால் சமூகமே எங்களை ஆண்பால் பெண்பால் என செயற்படவைக்கிறது. அதுவே சிறுவர், ஆண்கள் எவ்வாறு நடக்க வேண்டும், உடுக்க வேண்டும், தோற்றந்தர வேண்டும், என்ன நிலைப்பாட்டை, பண்புகளை அவர்கள் கொண்டிருக்க வேண்டும். எவ்வாறு அவர்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை வரையறை செய்கிறது. அதனால் "ஆண் நிலை இயல்பு"என்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிச் சிறப்புப் பண்பானது சமூக கலாசார மயப்பட்டது. இதனாலேயே அது சமூகத்துக்கு சமூகம் காலத்துக்கு காலம் அடிக்கடி மாற்றமுறுகிறது. ஆண் நிலை இயல்பு என்பது, பால்நிலை போன்று, நிலையான ஒன்றல்ல - அது சதா மீள்கட்டமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பொருளாதார முறைகள், இயற்கை அல்லது மனிதனால் ஏற்பட்ட அழிவுகள், யுத்தம், இடப்பெயர்வு போன்றவற்றுக்கேற்ப அவை மாற்றமுற்றுக் கொண்டிருக்கின்றன. ஏன் வெவ்வேறு வகை ஆண்நிலை இயல்புகள் இங்கு வெளிக்காட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு காரணம். தொழிலாள வர்க்க, முதலாளித்துவ, புத்தி ஜீவி ஆண்நிலை இயல்பானது மாட்டுப் பையன்களின் (Cowboy) ஆண் நிலை இயல்புக்கு மிகவும் வித்தியாசமாக இருக்கலாம். யப்பானிய ஆண் நிலை இயல்பானது ஐரோப்பிய அல்லது இந்திய ஆண் நிலை இயல்புக்கு வித்தியாசமாக இருக்கலாம். அதிகாரத்துவ ஆண்நிலை இயல்புக்கு விளிம்பு நிலை ஆண்நிலை இயல்பு வித்தியாசமாக இருக்கலாம். இதனால்தான் ஒருவகை ஆண்நிலை இயல்பு பற்றி பேசுவதைவிட ஆண்நிலை இயல்புகள் பற்றி பேசுவது நன்று.

**பால்நிலை**

*பால்நிலை என்பது ஒப்பீட்டளவில் புதிய எண்ணக்கரு. சிறுவர்களுக்கும் சிறுமியருக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கொடுக்கப்பட்ட சமூக கலாசார வரைவு இது தான். இயற்கை, உயிரியல் ரீதியாக எங்களை ஆண் அல்லது பெண் என உருவாக்க, சமூகம் எங்களை சமூக ரீதியாக பெண்பால் அல்லது ஆண்பால் என உருவாக்குகிறது. சிறுமியருக்கும் பெண்களுக்கும் சிறுவருக்கும் ஆண்களுக்குமான தோற்றம், நிலைப்பாடுகள், நடத்தை, வகிபாகங்கள், பொறுப்புகள், உரிமைகள், வளங்களை அடைதல், அவற்றின் மேல் நாம் மேற்கொள்ளும் கட்டுப்பாடு ஆகியவற்றை பால்நிலையும் சமூகமுமே தீர்மானிக்கின்றன. இதை வேறு வார்த்தைகளில் சொல்வதானால் பால்நிலை என்பது நியமங்கள், பெறுமானங்கள், வழமைகள் செயற்பாடுகள் ஆகியவற்றைக் குறிக்கும் சமூகக் கட்டமைப்பாகும். இதன் மூலம் உயிரியல் ரீதியான வித்தியாசங்கள் பரந்த சமூக முறைமைக்குள் உருமாற்றம் செய்யப்பட்டும் பெருப்பித்தும் காட்டப்படுகின்றன. இன்றைய உலகில் தந்தைவழி ஆதிக்கமுறைமையே நிலவுவதால் பால்நிலை அசமத்துவமே காணப்படுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*பால்நிலை தொடர்புகள்*

*பால்நிலைத் தொடர்புகள் என்பவை பால்நிலையை அடியாகக் கொண்ட பெண்களுக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஆண்களுக்கும் இடையே நிலவும் தொடர்புகளாகும். தந்தைவழி ஆதிக்க கோட்பாடு முறைமை ஆகியவற்றின் காரணமாக எல்லா இடமும் பால்நிலை உறவுகள் என்பது சமனற்ற அதிகாரப்படி நிலைக்குட்பட்டதாகவே இருக்கிறது. பெண்கள் கீழ்நிலைப்படுத்தப்பட்ட, பாரபட்ச நிலைக்காட்பட்டவர்களாகவே இருக்கின்றனர்.*



வன்முறை மிக்க பொருதல்கள் எப்பவும் வலுச்சண்டைக்கான வன்முறையான போராண்மை ஆண்நிலை இயல்புகளை அனுமதித்து ஊக்குவிக்கும் அதேவேளை அதற்கு மாற்றானவற்றை ஓரங்கட்டி, கேலிபண்ணி தண்டிக்கிறது. யுகோஸ்லேவியா, உகண்டா இஸ்ரவேல் இன்னும் தெற்காசியா போன்ற இடங்களில் இருந்துவரும் ஆய்வுகள், வன்முறை மிக்க பொருதல்கள் நிகழும்போது, தீவிரப் போக்கிற்கு பதிலாக அமைதியைப் பேணுகின்ற மாற்று ஆண்நிலை இயல்புகளைத் தழுவுவோர் மிகக் கடுமையான அழுத்தங்களையும் கண்டிப்புக்களையும், பெறுகின்றனர் எனச் சொல்கிறது. இன்னும் ராணுவ சேவைக்கு மறுக்கும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைக்கும் முகங் கொடுக்கவும் செய்கின்றனர்

*Dubravka Zarkov*

Sangat Report, 2002 பிரசுரிக்கப்பட்டது

ஆண்நிலை இயல்பு என்பது பெண்நிலை இயல்பிலிருந்து தனிமைப்பட்டு இருப்பதில்லை. ஒருவிதத்தில் பெண்நிலை இயல்பு என்பது எதிர்மறையான ஆண்நிலை இயல்பே. பெண் என்பது எது ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாததோ அதே. அனேக சமூகங்களில் ஆண்நிலை இயல்பும் பெண் நிலை இயல்பும் ஒன்றையொன்று பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். ஆண்கள் பெண்கள் மேல் ஆதிக்கம் செலுத்தி கட்டுப்படுத்த எதிர்பார்க்கும் போது பெண்கள் கீழ்ப்படிபவர்களாக இருக்க வேண்டும். ஆண்கள் கட்டளை இடும் பட்சத்தில் பெண்கள் அக்கட்டளைகளை ஏற்க வேண்டும். அண்கள் சினங்கொள்ளும் தருணங்களில் பெண்கள் பொறுமை காக்க வேண்டும். இப்படிப்பாக ஒருவர் மற்றவர் இல்லாமல் வேலை செய்ய முடியாது. ஆண்கள் ஆதிக்கம் செலுத்த பெண்கள் அதற்கு கீழ்ப்படிய மறுக்கும் பட்சத்தில் அமைதியும்"ஒத்திசைவும்" குழம்பிப் போகின்றன. "அமைதியான" குடும்பங்கள் பிளவுண்டு போகின்றன, ஆனால் ஆண்களது தோற்றமும் அந்தஸ்தும் பண்புகளுமே சட்டமாக நிற்கின்றன.

சாதியமைப்பு முறையில் கீழ்சாதியினருக்கு எவ்வாறு மேற்சாதியினர் இருப்பார்களோ அவ்வாறே தந்தைவழி ஆதிக்க முறைமையில் பெண்நிலை இயல்பினருக்கு ஆணநிலை இயல்பினராகும். ஒருவர் ஆள மற்றவர் ஆளப்படுபவராக, ஒருவர் மேன்மைக்குரியவராகவும் மற்றவர் கீழ்மைக்குரியவராகவும் இருக்கின்றனர்.

பின்வரும் பந்தியில் ரொனி மொறிஸன் (*Toni Morrison*) என்னும் கறுப்பினப் பெண் ஆபிரிக்கத் தன்மையையும் அமெரிக்க "நானை"யும் பற்றிக் கூறுவது, தந்தை வழி ஆதிக்க முறைமையில் பெண்நிலையியல்புக்கும் ஆண் நானுக்கும் சரியான பொருத்தமாகவே இருக்கிறது.

*"ஆபிரிக்கத்தன்மை என்கிற அமெரிக்க நான், தான் அடிமைப்பட்டவனல்ல சுதந்திரமானவன், வெறுக்கப்படவில்லை, விரும்பப்படுபவன், அனாதரவானவனல்ல, அனுமதியுடையவனும் ஆற்றல்மிக்கவனும் வரலாற்றவனல்ல, வரலாறுடையவன். கண்டனதுக்குள்ளானவனல்ல, ஒன்றுமறியாதவன். பரிணாமத்தில் நேர்ந்த குருட்டுவிபத்தல்ல விதியின் முற்போக்கான நிறைவேற்றம் என்பதை கண்டடைகிறது."*

Playing in the Dark P-52

யாராவது ஆணாயினும் பெண்ணாயினும் ஆணநிலை இயல்பு அல்லது பெணநிலை இயல்பு என்கிற தனிக்குணக்கூறு உடையவர், ஆண்நிலை இயல்பினர் அல்லது பெண்நிலை இயல்பினர் என அழைக்கப்படுகிறார். மென்போக்குடைய ஆண்கள் பெண்நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பினர் என ஏளனமாக அழைக்கப்படுகின்றனர். மறுபுறத்தில் பலமானவர்களாகவும் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையவர்களாகவும் இருக்கும் பெண்கள் ஆண்தன்மையுடையவர்களாகவும் ஆண்பால் சார்ந்தவர் எனவும் அழைக்கப்படுகின்றனர். உடையை மாற்றி அணிவோர் உயிரியல் ரீதியாக ஆணாயிருந்தாலும் தோற்றத்திலும் நடத்தையிலும் பெண்களாய் இருக்கின்றனர். ஆண்நிலை இயல்பும் பெண்நிலை இயல்பும் அதனால், உயிரியல் ரீதியான பிரிவுகள் அல்ல, அனேக சந்தர்ப்பங்களில் அவைகள் உயிரியல் ரீதியான ஆண்களோடும் பெண்களோடும் தொடர்புடையவையாக இருந்தபோதும்.

### தந்தைவழி ஆதிக்க முறைமை

*இது ஒரு சமூக கோட்பாட்டு ரீதியான முறைமை. இங்கு ஆண்கள் பெண்களுக்கு மேலானவர்களாகவும் ஆண்கள் வளங்களைப் பாவிப்பதற்கும் தீர்வு எடுப்பதற்கும் அதிகாரம் வாய்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். தந்தை வழி ஆதிக்க முறைமை வரலாற்று ரீதியாகக்கட்டமைக்கப்பட்டதாக இருப்பதோடு அதனுடைய உருவம் உள்ளடக்கம் பரப்பு வெவ்வேறு பின்னணியிலும் காலத்திலும் வெவ்வேறாக நிற்கின்றன.*

*எல்லாவித சமூக முறைமைகள் மாதிரி தந்தை வழி ஆதிக்க முறைமை ஒரு கோட்பாட்டையும் ஒரு அமைப்பையும் கொண்டிருக்கிறது. இதுவே ஆண்களே குடும்பத்தின் தலைவர்களாகவும் குடும்பத்தின் பெயரையும் சொத்துரிமையையும் பேணுபவர்களாகவும் இருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துகிறது. எல்லாச் சமூக ஸ்தாபனங்களும் ஆண் ஆக்கிரமிப்புக்கு உரியனவாய் உள்ளன.*

**நீங்கள் சொல்கிறீர்கள் ஆண்நிலை இயல்பு என்பது காலத்துக்கு காலம் சமூகத்துக்கு சமூகம், வித்தியாசப்படுகின்றது என்று. ஆனால் எங்குபார்த்தாலும் இது பலம். சக்தி. கட்டுப்பாடு. வலுச்சண்டை என்பவற்றோடு ஒத்துப்போகிறவையாகவே எங்கும் இருக்கின்றன. இதை விளக்க முடியுமா?**

நீங்கள் சொல்வது சரி. ஆண்நிலை இயல்புகள் எவ்வளவோ இருந்தாலும் வழமையாக ஆண்நிலை இயல்பு என்பது பலம், தன்னை நிறுவுதல், பயமின்மை, சுதந்திரம், அதிகாரத்துவம், லட்சியம் என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாகும். ஆற்றல், மற்றவர்களைக் கட்டுப்படுத்துதல், தலைமைத்துவம் ஆகியவை ஆண்நிலை இயல்பின் முக்கிய அம்சங்களாக அகில உலகெங்கும் கருதப்படுவன. "பொதுவாக ஆண்கள் வலுச் சண்டைக்காரர், தம்மை நிறுவுவோர், போட்டி போடு-வோர் சுதந்திரமானவர், நுண்ணுணர்வற்றவர் என்று விபரிக்கப்படுபவர். ஆண்களிடம் இருக்கும் ஒரு தன்மை என்னவெனில் அவர்கள் வாழும் உள்ளகச் சூழலையும் கடந்து செல்லத்தக்க ஒன்று உள்ளது என்ற அடிப்படையிலேயே இப்பண்புகள் பேசப்படுகின்றன. எல்லா நிலை-களிலும் தமது நடத்தைகளைத் தீர்மானிக்கும் குணஇயல்புகளை கொண்டவர்கள் ஆண்கள் என்றே பார்க்கப்படுகிறது"[1]

ஆண்நிலை இயல்பு பற்றிய கருத்துக்கள் மாறலாம், ஆண்கள் வித்தியாசமான உடைகளை அணியலாம். "குடும்பத்திற்கு உழைத்து தரும் தலைமகன்" என்ற ஒழுக்கம் அடிபட்டுப் போகலாம். ஆனால் இது ஆண் ஆதிக்கம் என்ற ஒன்றை மாற்றப் போவதில்லை. ஆண்நிலை இயல்பு என்கிற உருவம் அதை வழங்கும் முறை அல்லது அதன் பொதி மட்டும் மாறலாம்.

எப்பவும் ஆணநிலை இயல்பு என்பது எப்பொழுதும் உள் வட்டத்திற்கும் மாற்றத்திற்குமுரியது. ஆர்தர் பீறிற்றன் (Arthur Brittain) என்பவர் கூறுகையில், "எது மாறாதிருக்குமென்றால் ஆண்பால் கோட்பாட்டை நியாயப்படுத்துவதும் இயல்புநிலைப்படுத்துவதுமே"என்கிறார்.

***அப்படியானால் ஆண்நிலை இயல்பு என்பதற்கு உயிரியலோடோ ஆண் (ஹோமோன்) சுரப்பி நீர்வகையோடு தொடர்பில்லை என்றாகுமா?***

ஆண்நிலை இயல்பு என்பது உயிரியலோடு சம்பந்தமுடையதென்றும் அது ஆண்களின் பிறப்போடுவருவதென்றும் சிலர் நினைக்கிறார்கள். ஆண்களின் வலிந்த ஆக்கிரமிப்பு, பாலியல்பு, இன்னும் ஏனைய நடத்தைகளின் பண்புகள் யாவும் உடல்கள், உயிரியல் இரசாயனம், ஆண் ஹோர்மோன்ஸ் ஆகியவற்றோடு தொடர்புடையன என்றும் இன்னும் சிலர் மனிதனுடைய பால் வேட்கை தானாக இயங்கும் சுதந்-திரமுள்ள ஆண்குறியை அடிப்படையாகக் கொண்டதென்ற அளவுக்-கும் போயிருக்கிறார்கள். இக்கூற்றுக்கள் மனிதனை உயிரியலுக்கு அடிமைப்படுத்துகிறது. இதை நாங்கள் ஏற்றுக் கொண்டால் இதனோடு தொடர்புடைய ஏனையவற்றையும் நம்பவேண்டும், அதாவது எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களும் வலுச்சண்டைக்காரர்கள் ஆதிக்கம் செலுத்துவோர் வன்முறையாளர். இவற்றில் எதுவும் வித்தியாசமாக இருக்க முடியாது. ஏனெனில் ஒருவனது உயிரியல் உருவாக்கம் மாற்றமுடியாதது.

நாங்கள் இந்தப் பார்வையை ஆதரிப்பவர்களல்ல. நாங்கள் ஆண் நிலை இயல்பு பெணநிலை இயல்பு ஆகிய இரண்டும் சமூகரீதியாகக் கட்டமைக்கப்பட்டதென்பதை நம்புகிறோம்.

ஆண்களின் உயிரியலோ, உயிரியல் ரசாயனமோ அவர்களை ஆதிக்கவாளர்களாகவும் வலுச்சண்டைக்காரர்களாகவும் போட்டி போடுபவர்களாகவும் செய்வதில்லை.

பால்நிலை பற்றி கற்றறிந்து அது பற்றி எழுதிய பிரித்தானிய பெண்-நிலைவாதியான ஆன் ஒக்லி (Ann Oakley) என்பார் பின்வருமாறு கூறுகிறார். "(உயிரியல்) பால் வேறுபாட்டையும் (Sex) (சமூக கலாசார ஆணநிலை இயல்பு பெண்நிலை இயல்பு) என்கிற பால்நிலையையும் (Gender) பிரிவுபடுத்திச் சொல்லும் போது, பால் என்பது (sex) உயிரியலுக்குரிய வார்த்தை. பால் நிலை என்பது (gender) உளவியல், கலாசார ரீதியான ஒன்று. பொதுப்புத்தியின் படி பார்க்கும் போது இது ஒரே பிரிவை இரண்டு விதமாகப் பார்ப்பதாகும். ஆதாவது ஒருவர் பெண்பாலுக்குரியவரானால் அவர் இயல்பாகவே அதனோடு தொடர்-புடைய பெண்பால் நிலைக்குரியவராகவே இருப்பார். ஆனால் யதார்த்-

---

*"பாலும் பால் நிலையும்" என்ற தனது நூலில் றொபேர்ட் ஸ்ரோலர் (Robert Stoller) என்பவர் இவையிரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பை பின்வருமாறு விளக்குகிறார்.*

*ஒரு சில புறநடைகளோடு கூறுவதனால் இரண்டு விதமான பால்நிலைகளே உண்டு: ஒன்று ஆண். மற்றது பெண். பால்நிலைபற்றி தீர்மானிப்பதற்கு ஒருவர் பின்வரும் உடற்கூற்று நிலைகள் பற்றி ஆராய வேண்டும். இன மரபுப் பண்புகளைக் கொண்டிருக்கும் பகுதி, பிறப்புறுப்புகள், ஆண், பெண் கருப்பை இரண்டுக்கும் பொதுவான உயிர்மம், சுரப்பி நீரவகை நிலைமை அத்தோடு இரண்டாம் நிலைப் பால் வெளிப்பாடு பற்றிய பண்புகள். ஆகவே ஒருவருடைய பால் வெளிப்பாடு என்பது மேலே கூறப்பட்ட அனைத்துக் குணங்களினதும் குறிக்கணக்-கியல் தொகையினால் தீர்மானிக்கப்படுவதாகும். இன்னும் வெளிப்படையானது என்னவெனில் அனேக மக்கள் "ஆண்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தில் இது அப்படியல்ல. ஒரு ஆணாகவோ பெண்ணாகவோ ஒரு சிறுவனாகவோ ஒரு சிறுமியாகவோ இருப்பதானது பால் உறுப்புகளை கொண்டிருப்பதளவு முக்கியமானது ஆடை, நடையுடை, பாவனை, தொழில், சமூகத்தொடர்பு முறைமை, ஆளுமை ஆகியவற்றை கொண்டிருப்பதாகும்.(2)

சிறுவர்கள் முரட்டுத்தனமானவர்களாகப் பிறப்பதில்லை. இந்தச் சமூகம் மட்டும் அவர்களிடமிருந்து இக்குணங்களை திட்டமிட்டபடி அகற்றியிருக்காவிட்டால் அவர்கள் சிறுமிகளைப் போலவே இரக்கமானவர்களாகவும் அன்புடையவர்களாகவும் உணர்வு பூர்வமான வெளிப்பாட்டுடையவர்களாகவும் இருக்கக் கூடியவர்களே. ஆண்கள் மென்மையானவர்கள், பிறரைக் கவனிப்பவர்கள் போட்டி போட முனையாதவாகள் என்று நாம் எல்லோரும் அறிவோம். சண்டைக்காரர்களாக, அதிகாரம் செலுத்துபவர்களாக இருக்கும் கணவன்மார் தமது முதலாளிமார் முன்னே பயந்த பிராணிகளாக நடந்து கொள்கின்றனர். இது எதைக்காட்டுகிறதெனின் ஆண்கள் ஆண்தன்மைக்குரிய (சண்டை பிடித்தல், அதிகாரம் செலுத்துதல்) குணபாவத்தை அவர்களுக்கு அதிகாரம் செலுத்தும் வாய்ப்புள்ள இடங்களிலேயே பயன்படுத்துகிறார்கள் என்பதையே. அதேவேளை இவர்கள் பெண் தன்மையுள்ள நடத்தையுடையவர்களாக, (கட்டளைகளை நிறைவேற்றுதல் கீழ்ப்படிதல்) அதிகாரம் செலுத்த முடியாத கீழ்மட்ட

---

*"பெண்" என்கிற இந்த இரண்டு தனியான வளைவுகளான ஒன்றுக்குள் தம்மை இணைத்துக் கொள்கின்றனர். பால்நிலை என்கிற வார்த்தைப் பிரயோகமானது உயிரியல் அர்த்தங்களுக்குரியதாய் இருப்பதைவிட உளவியல் பண்பாட்டியல் தொடர்புடையதாகவே இருக்கிறது. பால் தன்மைக்கு சரியான வார்த்தைப் பிரயோகம் "ஆண்" "பெண்" என்றால் அதனோடு சம்பந்தப்பட்ட பால்நிலைக்குள்ள வார்த்தைப் பிரயோகங்கள் ஆண்பால் பெண்பால் என்பவையே. பின்னே குறிப்பிடப்பட்ட இவை பால் தன்மைக்குட்படாத சுதந்திரமானவை. பால்நிலையானது ஒருவரிடம் காணப்படும் பெண்நிலை இயல்பு ஆண்நிலை இயல்பின் அளவு பற்றியது. மனிதர்களில் இருவகைத் தன்மையின் கலவையானது வெளிப்படையாக இருக்கும் போது வழமையான ஒரு ஆணிடம் ஆண்நிலை இயல்பு விஞ்சிநிற்பதாகவும் ஒரு வழமையான பெண்ணிடம் பெண்நிலை இயல்பு விஞ்சி நிற்பதாகவும் அமையும்.(3)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நிலையானது வெவ்வேறு சமூக மட்டங்களில் இயங்குகிறது

1. அகவயப்பட்ட அடையாள மட்டம்: ஒரு சமூகத்தில் அது கொண்டிருக்கும் அனைத்தினதும் மத்தியில் ஒரு ஆணாகவோ அல்லது ஒரு பெண்ணாகவோ இருப்பது என்னவென்று நாம் கற்றுக் கொள்கிறோம். (அல்லது கற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தபடுகிறோம்)
2. ஸ்தாபன ரீதியான பயிற்சி மட்டம்: கல்வி புகட்டும் முறை (பெண்கள் மனையியல் கற்க ஆண்கள் கணிதம் கற்பது) தொழிற் சந்தை (ஆண் குடும்பத்தை போசிப்பவன் என்ற கருத்தில்) இராணுவம் (ஆண் ராணுவச் சிப்பாயே பெண்களையும் பிள்ளை-களையும் பாதுகாப்போன் என்ற ரீதியில்) அரசியல் வாழ்வை கட்டமைத்தல். (அரசியல்வாதி ஆண் என்ற அனுமானிப்புடன்)
3. கருத்தியல் கோட்பாடுகள் மட்டம்: சிந்தனை முறைமை - அதாவது சமய, அரசியல் கோட்பாடுகள், தேசிய இனத்துவக் கோட்பாடுகள், (அவற்றின் நியமனங்கள் பெறுமானங்கள்) அத்தோடு பெண்கள், ஆண்கள், பெண்நிலை இயல்பு, ஆண்நிலை இயல்பு பற்றிய அவற்றின் அனுமானங்கள் (உ-ம் பெண்கள் மரபையும் இனக்கூட்ட அடையாளத்தையும் பேணுபவர்களாகவும் ஆண்கள் பிரதேசங்களையும் எல்லை-களையும் பாதுகாப்பவர்களாகவும்)
4. குறியீட்டு மட்டம்: ஆண்நிலை இயல்பும், பெண்நிலை இயல்பும் எல்லாவகையான நியமனங்கள் குணங்கள், ஒழுக்கம், தீயொழுக்கம், சுதந்திரம், ஜனநாயகம், தாய்நாடு, தந்தை-நாடு ஆகியவற்றைக் காட்டும் குறியீடுகளில் பொதிந்துள்ளன (அறிவு ஆணுக்குரியதாகவும் உணர்ச்சி பெண்ணுக்குரிய-தாகவும் சக்தி ஆணுக்குரியதாகவும் சக்தியின்மை பெண்-ணுக்குரியதாகவும் கொள்ளப்படுகிறது).

*Dubravka Zarokov*
Sangat Report 2002

நிலையில் இருக்கும் போது மாறுகின்றனர். இதிலிருந்து தெரியவருவது என்னவெனின் ஆண்நிலை இயல்பும் பெண்நிலை இயல்பும் உயிரியல் ரீதியானது என்பதை விட ஆதிக்கம் செலுத்துவதற்கான சக்தி வாய்க்கப் பெறும் நிலைமைகளிலேயே தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புள்ளிவிபரப்படி பெண்களை விட ஆண்களே அதிகளவு கொலை பலவற்றை செய்கிறார்கள் என்பதற்காக எல்லா மனிதரும் வன்முறையாளர் என்று முடிவுக்கு தள்ளப்பட்டு விடக்கூடாது. ஆனேகமாக எல்லா சிப்பாய்களும் ஆண்களே. ஆனால் அனேகமான மனிதர்கள் சிப்பாய்கள் அல்லர், அனேகமான கொலைகாரர்கள் ஆண்களாய் இருந்தபோதும் அனேக ஆண்கள் கொலையோ தாக்குதலோ செய்வதில்லை. திகைக்கவைக்கிற தொகையினரான ஆண்கள் பாலியல் வன்புணர்வில் ஈடுபடுகின்றனர். ஆனால் அனேக ஆண்கள் செய்வதில்லை.*[4]

நமது மனப்பான்மை, நடத்தைகள், குணக்கூறுகள் என்பவை சமூக-ரீதியாக சொல்லிக் கொடுக்கப்பட்டவை என்பதை நாம் நம்புகிறோம். குடும்பத்தில், பாடசாலைகளில், சமய ஸ்தாபனங்களில் இடம்பெறும் சமூகமயப்படுத்தல் பால் நிலைப்படுத்தல் என்பவற்றின் போது இதை நாம் உள்வாங்கிக் கொள்கிறோம். நாங்கள் பிறந்த உடனேயே (சிலவேளை இன்னும் முன்னர்) இந்த பால்நிலைப்படுதலும் சமூகமயப்-படுத்தலும் ஆரம்பிக்கின்றன. ஆண்நிலை பெண்நிலை இயல்புகள் என்பவை பிறப்போடேயே வருவனவாகவும் இயற்கையானவையாகவும் பார்க்கப்படுகின்றன. இது தான் உண்மையெனின் எந்த ஒரு ஆணும் மென்தன்மை உடையவராகவும் மற்றவர்களுக்கு உதவுபவராகவும் இருக்க முடியாது. அவ்வாறே எந்தப் பெண் ஒருத்தியும் சண்டைக்காரி-யாகவும் வீறாப்புடையவராகவும் இருக்க முடியாது. இருந்தாலும் அவ்வாறான ஆண்களும் பெண்களும் இருக்கவே செய்கின்றனர். முக்கியமானது இங்கே என்னவெனில் எல்லாவகையான பால்நிலை-களும் காலத்தோடு ஒட்டி நடை பெற்றபோதும் ஆண்களுக்கும் பெண்-களுக்குமுள்ளே இந்த வித்தியாசங்கள் இருக்கவே செய்கின்றன. கோட்பாட்டு ரீதியானதும் பொருளாதார ரீதியானதுமான அழுத்தங்-கள் சிறுவர்களையும் சிறுமியரையும் ஆண்களையும் பெண்களையும் எற்கனவே வடிவமைக்கப்பட்ட நடத்தைக்குள்ளும் வகிபாகங்களுக்-குள்ளும் தள்ளியிருக்காவிடில் எவ்வளவு வகையான பன்முகத்தன்மை வந்திருக்குமென நினைத்துப்பாருங்கள்!

பால்நிலை குணக்கூறுகள் என்பவை இயற்கையானவையும் பிறப்போடேயே வருவனவாயும் இருந்திருந்தால் பிள்ளைகளுக்கு அவர்களுடைய பால்நிலை வகிபாகங்கள் பற்றி அவர்களுக்கு படிப்பிப்பதற்கு சமூகங்களும் கலாசாரங்களும் ஏன் இவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தையும் சக்தியையும் வளங்களையும் செலவிட வேண்டும்? ஏன் பெற்றார் தமது பிள்ளைகளை ஆண்பால் சார்ந்தவராகவும் பெண்பால் சார்ந்தவராகவும் வளர்த்தெடுக்க வேண்டும்? இந்த வேறுபாடுகளை ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் வெவ்வேறு சட்டத்தொகுப்புகளில் ஏன் சமூக சமய ஸ்தாபனங்கள் தொடரவேண்டும்?

**ஆண் நிலை இயல்புவாதம் மேலோங்கிய ஆண்நிலை இயல்பு என்கின்ற வார்த்தைகள் எதைக் குறிக்கின்றன?**

தந்தைவழி ஆதிக்க முறைமைக் கோட்பாட்டில் ஆண்நிலை இயல்பு வாதம் என்பது ஆண்களும் ஆண்நிலை இயல்பும் பெண்களுக்கும் பெண்நிலை இயல்புக்கும் மேலானது என்பதாகும். ஆண்நிலை இயல்பு வாதம் அதை நம்புகிறது. அத்தோடு ஆண் மேன்மையையும் ஆதிக்கத்தையும் அது நியாயப்படுத்துகிறது. ஆண்நிலை இயல்பை இயற்கைக்குரியதாக்கிறது. அதனால் இது தவிர்க்க முடியாததெனவும் பேச்சு வார்த்தைக்கு இடமில்லாததெனவும் செய்துவிடுகிறது.

மேலோங்கிய என்பது எல்லாவற்றையும் இணைகின்ற தலைமைத்துவம் அல்லது மேலாதிக்கம் ஆகும். ஆகவே மேலாதிக்க ஆண்நிலை இயல்பு எல்லாவற்றையும் அடக்கியாளும் ஆண்நிலை இயல்பாகும். இந்தவகையான ஆண்நிலை இயல்பு உண்மையாகவே அதிகாரம் பற்றியது. ஏனையவர்கள் மேல் அதிகாரத்தை மேற்கொள்வது. ஆதனால் ஆண்நிலை இயல்பு பெண்நிலை இயல்பிலிருந்து வேறுபட்டது. ஏனெனில் அது கட்டளையிடுவது கட்டுப்படுத்துவது. மேலோங்கிய ஆண்நிலை இயல்பு பணிதலைக் கோருவது.

**உண்மையில் பண்டைய சீன மெய்யியல் எண்ணக்கருக்கள் எனச் சொல்லப்படும் யின் — யாங் இந்திய புருஷ — பிராகிருதி என்பவற்றில் சில பயன்பெறுமதி இருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.**

ஆண் (புருஷ) பெண் (பிராக்கிருதி) என்று இந்திய மெய்யியல் மட்டும் பிரிக்கவில்லை, சீன மெய்யியலாளர்களும் யின் (பெண்) யாங்க (ஆண்) என்ற கோட்பாடுகள் பற்றியும் குணக்கூறுகள் பற்றியும் பேசியுள்ளனர். வெகு அண்மையில் உளவியலாளரும் உளவியல் பகுப்பாய்வாளருமான கார்ல்யுங் அனிமா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பெண்) அனிமஸ் (ஆண்) என்ற பிரிவுகள் பற்றிப் பேசியுள்ளார். இவையெல்லாம் சிலவகையான ஜீவ ஆற்றல்களை, குணக்கூறுகளை, சிந்தனை முறைகளை, நடத்தையை ஆண்களுக்குரியவை இன்னவையெனவும் பெண்களுக்குரியவை இன்னவையெனவும் குணவகைப்படுத்துகின்றன. உள்ளுணர்வு, கருத்துக்களை உள்வாங்குதல், உணர்ச்சிவசப்படல், ஜீவகாருண்யம் ஆகியவை பெண்மைக்குரியவை. பெண் இயல்பானது, அறிவு, அன்பு, தெளிவான பார்வை ஆகியவற்றால் ஆக்கப்பட்டது. ஆண் என்பது பகுத்தறிவு, செயல், கட்டுபாடு, பலம் ஆகியவற்றைக் குறிப்பது.

எவ்வாறாயினும் இந்திய சீன மெய்யியலாளர்களும் ஏன் கார்ல்யுங் உட்பட ஆண், பெண் ஆற்றல் சக்தியை ஆண்பால் பெண்பாலுக்குரிய உடலோடோ அல்லது உயிரியலோடோ சமப்படுத்தவில்லை. ஆண்பால், பெண்பால் என்பவை உள்ளீடற்ற எண்ணக்கருக்கள். உயிரியல் வகைப்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய குணங்களோ குணக்கூறுகளோ ஆற்றல்களோ அல்ல. ஆண் அல்லது பெண் ஆகிய எவராலும் யின்-யாங் ஆற்றல்களை அல்லது குணக்கூறுகளைக் கொண்டிருக்க முடியும். உண்மையில் மெய்யியலாளர்கள் எப்போதும் இந்தச் சக்திகளின் ஆக்க ரீதியான இணைவையே வேண்டி நின்றிருக்கிறார்கள். இவ்விரண்டும் ஒரே ஆளில் ஒத்திசைவையும் சமூகத்தன்மையையும் ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் விரும்பினர். யின் அல்லது யாங் ஆகிய இவற்றில் ஒன்று மட்டும் ஒருவரில் தலைகாட்டினால் பூரணமற்ற, சமத்தன்மையற்ற ஆளுமைகள், செயல்களைக் கொண்டவர்களையே உருவாக்குகிறது. இதனால்தான் இந்து சமயத்தில் அர்த்தநாரீஸ்வரர் என்ற எண்ணக்கரு ஒன்று உள்ளது. (அரைப்பகுதி ஆண், அரைப் பகுதி பெண்) இவ்வாறே மேற்கிலும் ஆணும் பெண்ணும் ஒன்றிணைந்த கருத்துருவாக்கம் ஒன்றுள்ளது. (Androgymy)

ஆண்வழி ஆதிக்க சமூகங்களோ, எவ்வாறாயினும், யின் - யாங், அனிமா – அனிமஸ், பிரக்கிருதி – புருஷ ஆகியவற்றை உயிரியலோடு தொடர்புபடுத்தும் ஆண்கள் பெண்களோடேயே சமப்படுத்த முற்பட்டது. இதன் மூலம் ஆண்கள் பெண்கள் மட்டும் பாதிப்படையவில்லை, குடும்பங்களும் சமூகங்களும் பாதிப்படைகின்றன. எங்களுடைய சமூகங்கள், சிறுவர்களுக்கும் ஆண்களுக்கும் தங்களுக்குள் இருக்கும் "பெண்ணை"மறுக்கும்படியும் சிறுமியருக்கும் பெண்களுக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் தங்களுக்குள் இருக்கும் "ஆணை"கொல்லும்படியும் கற்பிக்கின்றன. இதனால் ஆணோ பெண்ணோ ஒத்திசைவுடைய சமப் பார்வையுடைய மனிதராய் இல்லை. "ஆண் தன்மையைத்"தொடரும் ஆண்கள் பொதுவாக செயற்பாடுடையவர்களாகவும் வலுச்சண்டை புரிவோராகவும் ஆதிக்கம் செலுத்துவோராகவும் உள்ளனர். அதே வேளை பெண்களோ எதையும் ஏற்றுக் கொள்வோராகவும் கீழ்ப்படிவுடையோராகவும் பராமரிப்பவர்களாகவும் இருக்கின்றனர். ஏனெனில் மனிதருக்கும் சமூகங்களுக்கும் ஆண்பால் தன்மையினதும் பெண்பால் தன்மையினதுமாகிய இரண்டு சக்திகளும் தேவைப்படுகின்றன. ஒரு பக்கம் மட்டும் கொண்ட ஆண்கள் அடுத்த பக்கத்துக்காக பெண்கள்மேல் தங்கியிருக்க வேண்டியுள்ளது. அவ்வாறே பெண்களும் தமது அடுத்த பக்கத் தேவைக்காக ஆண்களில் தங்கியுள்ளனர். "இந்த உலகில் எமக்கு, ஆண் நிலை இயல்பினதும் பெண் நிலை இயல்பினதும் முழு அளவிலான சக்தியில்லாமல் வாழ முடியாதென்பதால், தம்மைத் தக்க வைப்பதற்காக இருசாராரும் கையறு நிலையில் ஒருவர்மேல் ஒருவர் தங்கியிருக்கின்றனர். இந்த பார்வையில் தம் இருப்பை பேணிக்கொள்வதற்காக ஒவ்வொருவரும் மற்றவரில் தங்கியிருக்கும் அரைமனிதரே. தமது பராமரிப்புத் தேவைக்காகவும் உள்ளுணர்வு சார்ந்த அறிவுக்காகவும் உணர்வுபூர்வமான ஒத்துழைப்புக்காகவும் ஆண்களுக்கு பெண்கள் பரிதாபகாரமாகத் தேவைப்படுகின்றனர். அவர்கள் இல்லாமல் தாம் இறந்து விடுவோம் என்பதை தங்களை அறியாமலே தெரிந்து வைத்திருக்கின்றனர். இந்தப் பௌதீக உலகில் தம்மைக் கவனிக்கவும் போசிக்கவும் பெண்கள் ஆண்கள் மேல் தங்கியிருக்கின்றனர். அவர்களுக்கு தம்மை தாமே கவனித்துக் கொள்வது என்பது தெரியாது"[(5)]

***கடைசி தெற்காசியாவிலாவது பழுதாக்கப்பட்டுக் கொண்டிருப்பது சிறுவர்களின் முக்கியமான அனுபவமில்லையா?***

ஆம், இது ஒருவகையில் தர்க்கரீதியானதும்தான். ஆண்வழி ஆதிக்க முறைமை வழிவரும் குடும்பங்கள், ஆண்பிள்ளைகளே மேலானவர்கள் எனக் கருதும் பட்சத்தில், ஆண் பிள்ளைகளையே எந்த வகையிலாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்று முயல்கின்ற நிலையில் (கோயிலில் தேவாலயங்களில், பள்ளிவாசல்களில் இறைவனிடம் மன்றாடி, ஆண்பிள்ளைகளுக்காக விரதமிருந்து பெண் கருக்களைச் சிதைவுறச் செய்து ஒரு ஆண்பிள்ளை பிறக்கும்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேக கர்ப்பதரிப்புகளூடாகச் சென்று) ஆண்பிள்ளைகளுக்கு விசேட கவனமும் உபசரிப்பும் நடைபெறுவது வெளிப்படை. அவர்களுக்கும் தாம் விரும்பியவற்றைச் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. ஆண்பிள்ளைகள் எப்போதும் பழுதாக்கப்படுகிறார்கள். நாட்டார் பாடல் அவர்கள் வளர்ச்சியடைவதில்லை என்றே சொல்கிறது. பின்வரும் பகிடியை படியுங்கள்:

**கேள்வி: ஆண்களுக்கும் நிதிப்பிணை ஆவணங்களுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?**

**பதில் : நிதிப்பிணை ஆவணங்கள் முதிர்ச்சி அடைகின்றன.**

ஆண்நிலை இயல்பானது மேலான மனப்பான்மை ஆற்றல் ஆகியவற்றோடு சமப்படுத்தப்படுவதற்குமப்பால், வெட்கமின்மை, நற்பண்பின்மை, நல்நடத்தையின்மை ஆகியவற்றோடும் சம்பந்தப்பட்டதாக நிற்கிறது. அனேகமான தெற்காசிய ஆண்கள் எந்தவித வெட்கமும் இல்லாமல் எந்த இடத்திலும் நின்று சிறுநீர் கழிக்கிறார்கள். இந்த வெட்கமின்மை அவர்கள் பகிரங்க இடங்களில் நின்று தமது ஆண்குறிகளை தேய்த்து சொறிவது, வெறும் நெஞ்சோடு ஒரு சிறிய உள்ளாடையோடு அலைவது போன்றவை இதற்கு சாட்சி. தனியாகவோ பொது இடங்களிலோ ஆண்களின் உடலசைவுகளும் நடையுடை தோற்றமும் எதைப்பற்றியும் கவலைப்படாத மனப்பான்மையையே வெளிப்படுத்துகிறது.

**பெண்களைவிட ஆண்கள் பகுத்தறிவுடையவர்கள் என்றும் இயற்கையை பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்த ஆண்கள் பண்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் என்றும் சொல்வது சரியா?**

பின்வரும் இரட்டைத்தன்மைகள் பற்றி அடிக்கடி நாம் கேட்கிறோம்.

| | |
|---|---|
| இயற்கை | பண்பாடு |
| உடல் | மனம் |
| உணர்ச்சிபூர்வமான | பகுத்தறிவான |
| புறத்தன்மை | அகத்தன்மை |

இடது பக்கத்தில் இருப்பது அனைத்தையும் பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்த ஆண்கள் வலதுபக்கத்தில் இருப்பதை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். அத்தோடு வலது பக்கத்தில் இருப்பதே மேலானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சொல்லப்படுகிறது. இயற்கையை விட பண்பாடே மேலானது எனவும் ஆகவே இயற்கையோடு அண்மித்திருப்போரும் இயற்கையோடு ஒத்திசைவுற்றிருப்போரும் அநாகரிகமானவர்கள், பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள் என்று கருதப்படுவதால், அவர்கள் அபிவிருத்தியடைவதற்கான தேவையுடையவர்கள் என்றும் கருதப்படுகிறது. இதே வகையில் மனம் என்பது உடலுக்கும் மேலானது, அறிவு உணர்ச்சிக்கு மேலானது. இவையெல்லாம் ஆண்வழிச் சமூகத்தின் ஐதீகங்கள் மட்டுமல்ல மேலோங்கிய சாதி, வர்க்கம், இனம், காலனித்துவ ஏகாதிபத்திய முறைகளாலும் தொடரப்படுபவையாகும். பழங்குடி மக்கள், பெண்கள், கறுப்பர்கள் இன்னும் முழு மூன்றாம் உலகமனைத்தும் இந்த இரட்டைத்தன்மையின் இடப்பக்கத்தையே பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் மேலான பால்நிலை, வர்க்கம், சாதி, இனம், அல்லது நாடு ஆகியவற்றிலேயே ஆதிக்க ஆற்றல் தங்கியிருக்கிறது. சக்திமிக்க ஆண்தன்மை வீச்சு பலவீனமான பெண்நிலை இயல்பினரை அடிமைப்படுத்துகிறது. இதற்காதாரமாக அனேகமான பச்சையான உதாரணங்களைக் காட்டலாம்:- மேற்கத்தைய நாடுகள் தமது அணு ஆயதங்களை பசுபிக் கடலில் பரிசோதிக்கப்படக் கூடியதாய் இருப்பது, தமது தொழிற்சாலை "ரொக்ஸிக்" கழிவுகளை மூன்றாம் உலக நாடுகளிலேயே தள்ளிவிடுவது, மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மருந்து வகைகள் அவர்களது நாடுகளில் தடை செய்யப்பட்டவையாய் இருப்பது, இனக்குழுக்கள் (ஆதிவாசிகள்) வாழும் இடங்களுக்கு அருகிலேயே வீடுகளும் அணைக்கட்டுகளும் கட்டுவது, செல்வம் மிக்கவர்களின் வீடுகளும் பண்ணைகளும் நகரங்களும் மின்சாரத்தைப் பெற, ஆதிவாசிகளின் வீடுகளும் நிலங்களும் கோவில்களும் நீரில் அமிழ்ந்து போகின்றன. இயற்கை (ஆதிவாசிகள்) இயற்கையோடேயே அமிழ்ந்து போகிறது. நாகரிகமுற்றவர்கள் வாழ்ந்து கொண்டே இயற்கையையும் அதனோடு வாழ்பவர்களையும் தம்வசப்படுத்துபவர்களாக்கும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றனர். அடிப்படையில் இந்த இரட்டைத் தன்மையென்பது அதிகாரத்தின் தொடர்புகளையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இன்னும் உயிரியல்தான் பெண்களின் விதியாக அமைய, ஆண்கள் இயற்கையையும் அவர்களது உடலையும் தாண்டக் கூடியவர்களாக இருக்கிறார்கள். பெண்கள் மாதவிடாய்க்குட்படுகிறார்கள், கருத்தரிக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள், பிள்ளைகளைப் பிரசவிக்கிறார்கள், அதனால் அவர்கள் உயிரியல் அல்லது இயற்கையால் ஏவப்படும் தொழிற்பாடுகளுக்கு இலக்காகின்றனர் என்பது உண்மை. இந்தவகையான உயிரியல் ரீதியான தொழிற்பாடுகளைத் தவிர்த்தால் பெண்கள், ஆண்களை விட தமது உடல் மேல் கட்டுப்பாடுடையவர்களாக இருக்கிறார்கள். அனேகமான ஆண்கள் தமது உயிரியல் ரீதியான, உணவு, பாலுறவு, மதுபாவனை போன்ற வேட்கைகளுக்கு விட்டுக் கொடுப்பவர்களாக அல்லது அவ்வேட்கைகளைக் கட்டப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர். ஆண்கள் தமது பசியை சொல்லுக்கு சொல்லான முறையிலோ வேறுவிதத்திலோ தீர்ப்பதற்குப் பயிற்றப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். அத்தோடு சமூக பண்பாட்டு நியமங்கள் அவர்களை இத்தகையவற்றில் அளவுக்கு மிஞ்சியவாறு ஈடுபட உற்சாகப்படுத்துகின்றன. மற்றவர்கள் மேல் அவர்கள் பாவிக்கும் கட்டுப்பாடு என்பது கட்டுப்பாட்டில் ஒருவகையே.

**இவ்வாறான ஆண்நிலை இயல்பு பெண்நிலை இயல்பு பற்றிய கருத்து எவ்வாறு எங்களுக்குள் வேரூன்றியது?**

**ஏ**னெனில் ஆண்நிலை இயல்பும் பெண்நிலை இயல்பும் உயிரியல் ரீதியாகத் தீர்மானிக்கப்படுபவையல்ல, அவைகள் சமூகரீதியாக கட்டமைக்கப்பட்டு கற்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு கலாசாரமும் பெண்பிள்ளைகளையும் ஆண்பிள்ளைகளையும் பெறுமதிப்படுத்த தனக்குரிய விதத்தில் அவர்களுக்கென வெவ்வேறு நடத்தை முறைகள், மனப்பான்மைகள், குணவியல்புகள், வகிபாகங்கள், உரிமைகள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை கொடுத்துள்ளது. பெண்பிள்ளைகளுக்கும் ஆண்பிள்ளைகளுக்கும் பிறப்பிலிருந்தே செய்யப்படும் சமூக கலாசார "பொட்டலந்தான்""பால் நிலைப்படுத்தல்" என அழைக்கப்படுகிறது. உயிரியல் ரீதியான பால் தன்மை போலில்லாது பெண்களதும் ஆண்களதும் பால்நிலை அடையாளங்கள் உளவியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் கட்டமைக்கப்பட்டவை. அதாவது அவைகள் வரலாற்று ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் தீர்மானிக்கப்படுபவை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நடத்திய ஒவ்வொரு பால்நிலைப் பட்டறையிலும் ஆண்கள், தம் குடும்பங்கள் தம்மை கடுமையாகவும், ஆக்கிரமிப்பாளர்களாகவும் எந்நேரமும் கட்டுப்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும் என்றே எதிர்பார்த்தாகச் சொல்லியுள்ளனர். அவர்கள் தமது பலவீன உணர்வுகளையோ தாக்கப்படக்கூடிய நிலையினையோ வெளிப்படுத்த அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் அழவோ உதவியை தேடவோ கூடாது என்ற நிலையே வேண்டப்பட்டது. அவர்கள் ஆண்பிள்ளைகளாக இருப்பதால் அவர்களுக்கு அவர்கள் குடும்பத்தால் செய்து தரக்கூடிய சிறந்த உணவு, சிறந்த கல்விவாய்ப்புகள் எல்லாம் கொடுக்கப்பட்டன. அவர்கள் எந்தவித குடும்ப வேலையை செய்யவோ சூரியன் மறைவதற்கு முன்னரே வீட்டக்கு திரும்பவோ எதிர்பார்க்கப்படவில்லை.




பெண்கள் இதற்கு நேர் எதிர்மாறானதை சொன்னார்கள். ஏனெனில் அவர்கள் பெண்களாய் இருந்தனர். சிலவேளைகளில் அவர்களது பிறப்பே வரவேற்கப்படாத ஒன்றாகவே இருந்தது. அவர்கள் அவர்களையொத்த ஆண் சிறுசுகளுக்கு வழங்கப்பட்டது போலல்லாமல் அன்பு, கவனிப்பு, உணவு, கல்வி வாய்ப்புகள் ஆகியவற்றிலும் குறைவாகவே பெற்றனர். அத்தோடு மற்றவர்களுக்கு பரிமாறுவது பற்றியே படிப்பிக்கப்பட்டனர், எதையும் பெறுவதற்கு அவர்கள் கடைவரிசையையே பின்பற்ற வேண்டப்பட்டனர்.

இவ்வாறு நிஜவாழ்க்கையின் ஆண்-பெண் பால்நிலை, தந்தைவழி ஆதிக்க முறைமைக் கோட்பாட்டினால் பல மூடப்பட்டதன் அடிப்படையிலேயே இருப்பதால் அது ஆண்களை மேலானவர்களாகக் கொள்கிறது. அவர்களே குடும்பத்தலைவர்கள், பரம்பரையும் சொத்துக்களும் அவர்களுக்குரியதே. அதனால் பால்நிலை அடையாளம் என்பது ஆண்களுக்கு மிகுந்த யதார்த்தமாகவும் முக்கியமாகவும் இருப்பது போலவே பெண்களுக்கும் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையாளப்படுவதற்கு மிகவும் நொய்தலான குடும்பங்கள் உணர் திறனற்றவர்களும் பலத்துக்கு முதன்மை தரும் ஆண்களும்.

ஆண்கள் தங்கள் பெண்களைத் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது எதிர்பார்க்கப்படுகிறது.

கணவனுக்கு 'husband' என்று ஆங்கிலத்தில் பாவிக்கப்படும் சொல் தோழமையையோ சமத்துவத்தையே குறிப்பதல்ல, இது கட்டுப்பாட்டாளரை அல்லது பொறுப்பாளரை குறிப்பது. (animal husbandry என்ற சொல்லை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்) வரைவிலக்கணப்படி ஒரு மனிதனை ஒரு பெண் மணஞ்செய்தால் அவள் அவனுக்கு உரியவளாகிறாள். அப்படியானால், அவன் அவளுக்கு தன் ஆத்திரத்தைக்காட்டவோ, அவளை அடித்து கட்டுப்படுத்தவோ தன்வசப்படுத்தவோ உரிமையுடையவனாகிறான், என்பதில் என்ன ஆச்சரியம் வேண்டிக்கிடக்கிறது? இத்தகைய கோட்பாட்டினால் இப்படிச் செய்வதற்கு தாங்கள் உரிமையுடையவர்கள் என்று ஆண்கள் மட்டும் நினைக்கவில்லை அனேக பெண்களும் ஆண்களின் வன்முறை தொடர்பாக எதுவும் பிழையில்லை என்றே நினைக்கின்றனர். அண்மையில் இந்தியாவில், தேசிய குடும்ப நலன் பேணும் மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்ட்ட ஆய்வின்படி, மதிப்பீடு செய்யப்பட்ட 56 வீதமான பெண்கள், கணவன்மார் மனைவியரை அடிப்பது தவறல்ல என்றே சொல்லியுள்ளனர்.

**பரவலான வீட்டு வன்முறை இடம்பெறுவது நம் எல்லாரையும் சுற்றி வன்முறைத்தன்மை கொண்ட ஆண்நிலை இயல்பு நிலவுகிறது என்பதன் நிரூபணமல்லவா?**

உண்மை அதுவே. தெற்காசியா, அமெரிக்கா, ஐரோப்பா இன்னும் பல நாடுகளில் மேற்கொண்ட மதிப்பீடுகளின்படி பரவலான அளவில் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் எதிரான வீட்டு வன்முறை இடம் பெறுவது புலனாகியுள்ளது. அனேக நாடுகளில் பெருந்தொகையினரான மனைவிமார் (30-50 வீதம் வரை) கடைசி ஒரு முறையாவது அடிவாங்கியுள்ளனர். இன்னும் சிலர் தொடர்ந்து அந்நிலைக்குள்ளாகின்றனர்.

சர்வதேச பெண்கள் பற்றிய ஆய்வு மன்றம் (ICRW) இந்தியாவில் நடாத்திய ஆய்வு, வீட்டு வன்முறை உயர்ந்துள்ளதாக நிறுவியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீடு செய்யப்பட்ட கிட்டத்தட்ட 50 வீதமான பெண்கள் தங்கள் திருமணத்தால் உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் வன்முறை அனுபவித்தாகக் கூறியுள்ளனர். சர்வதேச ரீதியாகவும் எல்லா வயதுப் பெண்களும் படித்தமட்டத்திலும் அத்தகைய நிலைகளிலும் வன்முறை அனுபவித்ததாக அறிவித்துள்ளனர்.) தரப்படுத்தல் ரீதியாகவும் (கிட்டத்தட்ட 58 வீதமான பெண்கள் வன்முறை என்பது திருமணத்தினால் ஏற்படும் வழமையான ஒன்றெனச் சொல்லியுள்ளனர்.) இன்னும் ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள கவலைக்கிடமான விஷயம் என்ன-வெனில், வீட்டு வன்முறை என்பது தனிப்பட்ட விஷயமாக இல்லாமல் பிறந்த குடும்பங்கள் இன்னும் விவாகஞ் செய்த குடும்பங்களோடு அயலில் உள்ள குடும்பங்களுக்கும் தெரிந்த ஒன்றாக மாறியிருப்பதே.[6]

விவாகத்தின் மூலம் நடைபெறும் பாலியல் வன்புணர்வு, அவ்வாறே சிறுமியர், சிறுவர் துஷ்பிரயோகமும் பரவலாக இடம்பெறுகிறது. முறைதகாப் புணர்ச்சியும் குடும்பங்களிடையே காணப்படுகிறது. தந்தைமார், தயாரின் கணவன்மார், மூத்தசகோதரர்கள், தந்தை மனைவி மகன்மார் (step brothers) ஆகியோரால் உறவினரான பெண்பாலார் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்படுவது பற்றி இந்தியா-விலுள்ள சகல ஊடகங்களும் அறிவித்துள்ளன. மனப்பாதிப்பு, உணர்வு-ரீதியான அதிர்ச்சி, அவமானம் கட்டுக்கடங்காது போகிறது. இந்த வன்முறையெல்லாம் பெண்கள்மேல் ஆண்களாலேயே மேற்கொள்-ளப்படுகிறது. இது பரவலாக இடம் பெறுவதற்கு ஒரேயொருகாரணம், ஆணின் மேலாண்மையும் ஆற்றலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு சகித்துக் கொள்ளப்படுவதே. ஆண்கள் பெண்களை மதிக்காமல் போவதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று அதனால் அவர்கள் நன்மை பெறுகிறார்கள். இரண்டாவது அதற்கான எந்த தண்டனையுமின்றி தப்பிவிடவும் முடிகிறது. வன்முறை அல்லது வன்முறைக்கான அச்சு-றுத்தல் பெண்களை கீழ்ப்படிந்தவர்களாகவும் ஆண்களுக்கும் சமூகக் கட்டுப்பாட்டுக்கும் அடங்கியவர்களாகவும் இருக்கச் செய்கிறது.

## குடும்பங்களுக்கு தேவை கூட்டாளிகள் பிரபுக்களும் - எஜமான்களும் அல்ல

வீட்டு வன்முறையானது பெண்பிள்ளைகளையும் ஆண்பிள்ளைகளையும் பால்நிலைக்குட்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இரு சாராரும் தமது பெற்றாரிடமிருந்து பெற்றாரினது நடத்தை முறையையும் ஆற்றலையும் கற்றுக் கொள்கின்றனர். ஆண்பிள்ளைகள் தாம் வளர்ந்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் என்ன செய்ய முடியும் என்பதைக் காண்கின்றனர். பெண்பிள்ளைகள் தாம் பெண்களாகி எவையெவற்றையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டும் என்பதை கணித்துக் கொள்கின்றனர்.

பிரபலமான பின்வரும் பாடல் ஆண் காதலனின் வன்முறை நடத்தையை போற்றுவதைப் பாருங்கள்:-

"என் அன்பே என் கைகளைத் திருகாதே
என்னோடு முரட்டுத்தனமாக இருக்காதே
எனது கைவளையல்கள் உடைகின்றன"

## விவாக விலக்கலுக்குரிய முக்கிய தனிக் காரணம் விவாகமே

தந்தைவழி ஆதிக்க சமூகங்களில் தந்தைவழி ஆதிக்க முறைமை நோக்கிலிருந்து பார்க்கும் போது, ஆண்களிடம் இருக்கும் வன்முறை நியாயப்படுத்தப்படுகிறது, ஏனெனில் அதிகாரம், கட்டுப்பாடு, ஆற்றல், தலைமைத்துவம் என்பவையே ஆண்நிலை இயல்பை உருவாக்குவனவாகும். ஆண்களே சகலவற்றையும் அழிப்பவர்களாகவும் பாதுகாப்பவர்களாகவும், இருக்க எதிர்பார்க்கப்படுகின்றனர். பாதுகாப்பாளர்கள் என்பது வெறுமனே அவர்களது பெண்களையும் பிள்ளைகளையும் மட்டுமல்ல குடும்பங்களினதும், சமூகங்களினதும். தேசியங்களினதும் கௌரவத்தையும், நல்லிருப்பபையும் பாதுகாப்பவர்களாக இருப்பதாகும். உணவளிப்போர்களாகவும் பாதுகாப்பாளர்களாகவும் இருக்கும் அவர்கள், தமது குடுபங்களினதும் சமூகங்களினதும் அங்கத்தவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக்குவது தமது கடமை என எண்ணுகின்றனர். இந்த ஒழுக்கப்படுத்துதல் வன்முறையைக் கோருமானால், அது அவ்வாறே அமைவதாக. ஆனேகமாக ஆண்கள் பிரச்சனைகளைக் கையாளுவதற்கான வழியாகவும், ஒழுங்கை மீள நிலைநாட்டுவதற்கான ஒன்றாகவும் யார் அதிகாரத்தில் இருக்கிறார் என்பதை தெளிவுபடுத்துவதற்காவும் வன்முறையை பார்க்கின்றனர். சில ஆண்கள் வன்முறையைப் பாவிப்பதை தெரிவாக அல்லாமல் தமது கடமையாக காண்கின்றனர்.[7]

## அமைதி வலயம். வீட்டில் வன்முறை இல்லை.

ஏற்கனவே குறிப்பிட்ட சர்வதேச பெண்கள் பற்றிய ஆய்வு மையத்தின் ஆய்வின்படி, "எந்த வன்முறை பற்றியும் சொல்லவரும் ஆண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய வன்முறைப் பாவனை பற்றி எந்தவித எதிர்மறையான கருத்தும் காண்பதில்லை. பாலியல் வன்முறை பற்றியோ உடல்ரீதியான வன்முறை பற்றியோ தகவல் தரும் பெரும்பான்மையினரான ஆண்கள் தமது கட்டுப்பாட்டை மீறி அது நடந்ததாகவோ, அல்லது தமது மனைவிமாரோடு சண்டையிட நேர்ந்த பின்னணி பற்றி கவலைப்பட்டதாகவோ இல்லை. ஒரு பொருதலைத் தீர்ப்பதற்கு வன்முறையே சட்டரீதியான ஒன்றாகவும் அல்லது தமது தேவையைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தையை மேற்கொள்வதற்கு உகந்த ஒன்றாகவும் கணிக்கப்படுவதை இது மேலும் உறுதிப்படுத்துகிறது."[8]

குடும்பத்திற்குள் சமத்துவமின்மை இருந்து கொண்டிருப்பதோடு அது உலகின் ஓர் அம்சமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. மேற்கிலுள்ள குடும்பங்களை குறிப்பிட்டு, ஆன் ஒக்லே கூறுகையில் தொழிற்புரட்சியின் காலத்தில் பரிணமதித்திருந்த குடும்பமானது, சமத்துவமின்மை வேற்றுமை இன்னும் சமகாலத்து ஸ்தாபனங்களுள் மிகக் குறைந்த ஜனநாயகத் தன்மை என்கின்ற மூநிலைக்குரியதாகவே இருந்தது. இந்த வகையில் எங்கும் சமத்துவமின்மையைப் பரப்பும் பலம் வாய்ந்த சர்வாதிகாரியாகவும் இது இருந்தது.[9] குடும்பத்திற்குள் சமத்துவத்தில் நம்பிக்கையின்மையும் அதை நடைமுறைப்படுத்த முடியாமையும் பால்நிலையில் அசமத்துவத்தை செயல்படுத்தி படிப்பிக்கும்போது நாங்கள் வேறிடங்களில் எவ்வாறு பால்நிலைச் சமத்துவத்தை எதிர்பார்க்க முடியும்?

### சமய போதனைகள் ஆண்நிலை இயல்போடு எவ்வாறாவது சம்பந்தம் உடையனவாய் உள்ளனவா?

பால்நிலை, ஆண்நிலை இயல்பு, சமயம் ஆகியவற்றிடையே தொடர்பு இருப்பது தெளிவு. கலாசார மட்டத்தில் குடும்பம், திருமணம், பாலியல் ஆகியவற்றை கட்டமைத்து அறிவிப்பதன் மூலம் பால்நிலையை கட்டமைப்பதில் சமயம் மிக முக்கிய பங்காற்றுகிறது. மேலும் வழமையான பெண்கள் ஆண்களுக்குரிய வகிபாகங்கள், நடத்தைகள் கணவன், மனைவி, மகன்மார், மகள்மார் ஆகியோருக்கான அந்தஸ்து, உரிமைகள், பொறுப்புகள் ஆகியவற்றை தீர்மானித்து அறுதியிட்டுக் கூறுவதிலும் அது முன்னிற்கிறது. திருமணம், திருமண விலக்கல், பரம்பரைச் சொத்துரிமை பாதுகாவலர் உரிமை, ஆகியவை தொடர்பாக எல்லாச் சமயங்களும் சட்ட விதிகளைக் கொண்டுள்ளன. இன்னும் உலகாய, சிவில் சட்டங்கள் இல்லாத நாடுகளில் சமயச் சட்டவிதிகளே ஆண் பெண் இருபாலருக்குமிடையிலான அசமத்துவத்தை ஸ்தாபனப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுள்ள எல்லாச் சமயங்களும் பெண்களைவிட ஆண்கள் மேலானவர் என்றே கருதுகின்றன. இதற்கு பின்வரும் ஒரு சான்று போதும். அதாவது எந்தச் சமயமும் தனது தலைமைக்குரியவராக பெண்ணை ஏற்பதில்லை. வரைவிலக்கணப்படி எந்தப் பெண்ணும் பாப்பாண்டவராகவோ, ஒரு சங்கராச்சாரியராகவோ, இமாமாகவோ தலைலாமாவாகவோ முடியாது.

கடவுள் ஆண்தான் என்பதை காட்டும் படிமங்களும் மொழியும் வெளிப்படையாக இல்லவிட்டாலும் பிரதான கடவுளின் சீடர்கள் ஆண்களாகவே இருந்துள்ளனர்.

பெரும்பாலான சமயங்கள் ஆண்களையே குடும்பத் தலைவர்களாகக் கொள்கிறது. – தந்தைவழி ஆதிக்க தலைவன் - ஆண்களுக்கே மகன்மார் எனவும் கணவன்மார் எனவும் மேலான உரிமைகளை வழங்குகிறது. சிலசமய ஏடுகள், மனைவியானவள் கணவனின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்றும் சரியான வழியிலிருந்து அவள் தவறிப்போகும் சந்தர்ப்பத்தில் அவளைத் தண்டிக்க கணவன் உரிமையுடையவன் என்றும் தெளிவாகக் குறிக்கின்றன. இதனோடு தொடர்புடைய உரிமை, கணவன் மேல் பிரயோகிக்க மனைவிக்கு இல்லை. ஆணுடைய மேன்மைத்துவம் என்பது சமயத்தினால் கலாசார ரீதியாக மட்டும் உண்டாக்கப்பட்டு தொடரப்படும் கருத்தல்ல. இது தந்தைவழி ஆதிக்க முறைமையை கொண்டிருப்பதால் அதை எதிர்த்து சவால்விடுவது கஷ்டமானது. காரணம் ஆண்களே சமய ஸ்தாபனங்கள் கொள்கைகள் சமய ஏடுகளின் வியாக்கியானங்கள் அனைத்தையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

சமயத்தினால் எதுவோ ஒன்று கட்டளையிடப்படும் பட்சத்தில் அதை எதிர்ப்பது கஷ்டமாகிவிடுகிறது. தர்க்கம், அறிவு, மனித சட்டம் ஆகியவற்றால் அறிவையும் தர்க்கத்தையும் கடந்து நிற்கும் ஒன்றோடு செயல்பட முடியாது.

**எங்களுடைய ஊடகங்களும் தந்தை வழி ஆதிக்கமுறைமையைக் கற்பிக்கும் ஆண்நிலை இயல்பை உருவாக்க வில்லையா?**

ஆம், கல்வியும் சமயமும் போலவே ஊடகங்களும் ஆண்பால், பெண்பால் இயல்புகளினது கற்பிதங்களை திணிக்கின்றன. சக்திமிக்க, கடினமான மோட்டார் சைக்கிளுக்கான இந்திய விளம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வருமாறு கூறுகிறது: "இது நிச்சயமாக ஒரு ஆண்". இதன் மூலம் பெண் எனப்படுபவள் கடினமானவளோ சக்திமிக்கவளோ அல்ல என்பதே பெறப்படுகிறது. "ஆண்" பற்றிய வரைவு இயல்பாகவே அதன் எதிர்ப்பாலரை வரைவுபடுத்துகிறது.

ஊடகங்கள் சண்டைக்கார, யாருக்கும் அடங்காத ஆண்களை தீவிரமாக முன்வைப்பதன் மூலம் வலுச்சண்டைக்கார, வன்முறை மனப்பான்மையை முன்னெடுக்கின்றன. மிகவும் வன்முறைமிக்க, மல்யுத்தம் ஆகியவற்றை தொலைக்காட்சியில் காட்டுதல், விளையாட்டுக்காக மற்றவர்களை ஈவிரக்கமற்று அடிக்கும் அல்லது காயப்படுத்தும் மல்யுத்தக்காரர்களின் படங்களைச் சிறுவர்கள் சேகரித்து அவர்கள் போல் தாங்களும் இருக்க முயற்சிப்பது, தங்கள் கதாநாயகர் மாதிரி அபிநயிக்கும் ஆண்பிள்ளைகள் தங்களைவிடப் பலவீனமானவர்களை அடித்துவதைப்பது வழமை – பலவீனமான ஆண் சிறுவர்களும் பெண்பிள்ளைகளுமே அவர்களின் இலகுவான இலக்கு.

மோட்டார் சைக்கிளில் போவோர் பாவிக்கும் தலைக்கவசங்கள் (பாலியல் ரீதியாக கவர்ச்சியுள்ள ஆணைக்குறிக்கும்) ஸ்ரட் (stud) என்று அழைக்கப்படுகின்றன. மோட்டார் சைக்கிள்கள் சன்னம் (bullet) என்றும் அழைக்கப்படுகின்றன. இன்னும் உள்ளாடைகள் T-சேட்டுக்கள் முதலையை இலச்சினையாகக் கொண்டுள்ளன. பியர் குடிவகை உனக்குள் இருக்கும் சிங்கத்தை வெளிக்கொணர்கின்றது. சிகரட்டுகள் உங்களை உண்மையான ஆணாக்கச் செய்கின்றன. பிள்ளைகள் இவற்றை தொலைக்காட்சியில் பார்த்து இத்தகைய ஆக்கிரமிப்புடைய ஆண்தன்மையையே கருத்தாகக் கொள்கின்றனர்.

**மேலோங்கிய ஆண்நிலை இயல்பை கட்டமைத்து முன்னெடுக்கின்ற வேறு சமூக நிறுவனங்கள் உண்டா?**

ஆம், பொலிசும் இராணுவமும். வன்முறை விளையாட்டோடு தொடர்புடைய விளையாட்டுக்களான மல்யுத்தம் இன்னும் அனேக வியாபாரங்களும் தொழில்முறைகளும் இவற்றோடு உள்ளன. ஆர். டுபிள்யூ கொனலின் (R.W. Connell) கருத்துப்படி "அனேகமான ராணுவச் சிப்பாய்கள், விளையாட்டை தொழிலாகக் கொண்டோர், செயல் ஆட்சித் துறையினர் ஆகியோர் ஆண்கள் என்று காணும் போது நாங்கள் வெறுமனே தனிநபர் கூட்டங்களைப் பற்றிக் கதைக்கவில்லை, மாறாக நாங்கள் ஆண்நிலை இயல்பு மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கிறோம். உதாரணமாக நிறுவனமயக் கலாசாரத்தையுடைய ராணுவம் என்பது மிகக் கனதியான முறையில் பால்நிலைப்படுத்தப்-பட்டதாகும் அண்மையில் ஜேர்மனியிலும் அமெரிக்காவிலும் ராணு-வத்துள் நடந்த ஆய்வு, மிகவும் சிரமப்பட்டு ஒரு குறுகிய வரை-வுக்குட்பட்ட மேலோங்கிய ஆண்நிலை இயல்பை உற்பத்தி செய்கிற முயற்சியை வெளிக்காட்டியுள்ளது. இவ்வாறே அமைப்புமயமாக்கப்-படும் விளையாட்டு, இத்தகைய குறிப்பிட்ட ஆண்நிலை இயல்பை வெறுமனே பிரதிபலிப்பதல்ல, தீவரமாக உற்பத்தி செய்கிறது."[10]

இவற்றுக்கு மேலதிகமாக, அரசல்லாத, வியாபார நோக்கற்ற அமைப்புகள் போன்ற அரசுக்கெதிரான தீவிரவாத அமைப்புகள், சமய அடிப்படைவாத குழுக்கள் ஆகியன ராணுவத்தன்மையையும் வன்-முறை ஆண்நிலை இயல்பையும் முன்னெடுக்கின்றன. ஆட்சியை (அதிகாரத்தை) கைப்பற்ற முனைந்த அல்லது முனைகிற ஒவ்-வொருவராலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஆண்பால் வன்முறை அரங்கு எம்மைச் சுற்றி நடந்தேறிக் கொண்டிருக்கிறது.

***மனிதப்பண்புருவாக்கங்கள் அல்லது குணங்கள் என்பவையும் ஆண் பால் பெண்பால் வகையானவையாக எங்களுடைய குடும்பங் களாலும் சமூகங்களாலும் பிரிவுபடுத்தப்பட்டுள்ளன அல்லவா?***

**உ**ண்மையாக அவ்வாறே இடம்பெற்றுள்ளன. அனேகமான பால்பிரிவு பட்டறைகளில் பங்குபற்றுவோரிடம் நாம் அவர்களின் சமூகத்தின்படி, ஆண்பால் அல்லது பெண்பால் குணங்கள் என்னவென்று எழுதும்படி கேட்பதுண்டு. எல்லாப் பட்டறைகளிலும் வெளிக்கொணரப்பட்ட கருத்-துக்கள் பின்வரும் பட்டியலில் பரவலானவையாக உள்ளன.

| ஆண் | பெண் |
|---|---|
| அறிவான | உணர்ச்சிபூர்வமான |
| பலமான | பலவீனமான |
| எடுப்பான | அழகான |
| தன்முனைப்பான | தியாகம் செய்கின்ற |
| வெளிச் செல்லும் | ஆதரிப்பவர் |
| ஆக்கிரமிப்புடைய | ஊட்டி வளர்க்கின்ற |
| போட்டிபோடுகிற | பணிந்துபோகிற |
| வீரமான | வெட்கமுடைய |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தன்னை சுதாகரித்துக் கொள்கிற | அமைதியான |
| தவறான வழிச் செல்கிற | பண்பான |
| பயமற்ற உணர்வுக்குட்படும் | தீவிர உணர்வெழுச்சியடைகிற |
| தந்திரமுள்ள | நேர்மையான |
| வன்முறையான | காருண்யமுள்ள |
| கடின உழைப்புடைய | சகித்துக் கொள்கிற |
| சந்தர்ப்பவாத | பயந்து நடுங்குகிற |
| உணர்வற்ற | அமைதியான |
| வெளிக்காட்டுகிற | பயந்த |
| ஆதிக்கம் செலுத்துகின்ற | விட்டுக் கொடுக்கிற |
| சுதந்திரமான | தங்கியிருக்கிற |

அடுத்த கேள்வியாக இருப்பது "மேல்வர்க்கம்""தொழிலாள"வர்க்கம், "நகரையொட்டிய" "கிராமத்தையொட்டிய" "முதலாம் உலகம்" "மூன்றாம் உலகம்"ஆகிய சொற்களை ஆண் பெண் என்பவற்றுக்கு பதிலீடு செய்வோமானால் யார் எங்கே வைக்கப்படப் போகிறார்? தெளிவாகவே எது ஆண் எனப்படுகிறதோ அது "மேல்வர்க்கம்" "நகரத்தையொட்டிய" "முதலாம் உலகம்"என்றமைய, "தொழிலாளவர்க்கம்" "கிராமத்தையொட்டிய""மூன்றாம் உலகம்"என்பவை பெண்ணாகக் கொள்ளப்படுகிறது.

இந்தப் பயிற்சியிலிருந்து உடனடியாக தெரியவருவது ஆண் பெண் குணங்கள் பிரிக்கப்படுவது அதிகாரம் உள்ளோர்க்கும் இல்லாதோர்க்கும் என்ற அடிப்படையிலேயே. இவை இயற்கையாகவே ஏற்படுவதற்குப் பதிலாக உருவாக்கப்பட்டவையாகவே உள்ளன. இக் கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட உள்ளறிவு மிகவும் வெளிச்சமூட்டுவதாக உள்ளது.

**அப்படியானால் ஆண்நிலை இயல்பு பெண்நிலை இயல்பு என்பவை ஆண்கள் பெண்கள் ஆகியோரை பற்றியேயல்ல. அவையனைத்தும் ஆதிக்கம் ஆதிக்கமின்மை என்பவற்றை பற்றியவை என்றா சொல்லுகிறீர்கள்?**

**ஆ**ம், அப்படியே தான். ஆண்நிலை இயல்பு என்பது ஆதிக்க அதிகாரம் பற்றியது. மற்றவர் மேல் ஆதிக்கம் செலுத்துவது. சரணடைவோர் எல்லாம் பெண்நிலை இயல்பினர். ஆதிக்கம் செலுத்துவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்பாலர். ஆனால் இதற்காக முன்னது எப்போதும் பெண்களாகவும் பின்னது எப்போதும் ஆண்களாகவும் இருக்கும் என்பதல்ல.

ஆண்களும் பெண்களும் சாதி, வர்க்கம், இனம், தேசியம், பால்ரீதியான பிரிவு, திருமண ரீதியான அந்தஸ்து என்று பல்வகையான அடையாளங்களை உடையவர்களாய் இருக்கின்றனர். உதாரணமாக தொழிலாள வர்க்கம், தாழ்த்தப்பட்டவர், கறுப்பர்கள் பொருளாதார ரீதியாகவும் அரசியல் அதிகார ரீதியாகவும் பணக்கார, உயர்சாதி வெள்ளைப் பெண்களை விட குறைவாக உள்ளனர். ஆகவே ஆண்நிலை இயல்பு என்பது ஒருவரின் வயது, சாதி, இனம், வர்க்கம் பால் நிலை என்பவற்றால் ஆற்றுப்படுத்தப்படுகிறது. ஆனால் பால் - பால்நிலை முறைமையில் எல்லா ஆண்களுக்கும் தனியுரிமை சில உண்டு. ஏனெனில் அவர்கள் ஆண்கள். அத்தோடு தந்தை வழி ஆதிக்கமுறைமை கோட்பாடானது ஆண்களைப் பெண்களைவிட உயர்ந்தவர்களாகக் கருதுகிறது. அவர்களுக்கு சமத்துவத்தை முன்வைக்காது ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே ஒரு படிநிலை அமைப்பையே முன் வைக்கிறது.

*சமூக வாழ்க்கையை அமைக்கின்ற கொள்கையாக பால்நிலை மட்டுமே இருப்பதில்லை. வர்க்கம், உறவுகள், இனம், பாலியல்பு, இனத்துவம் சமய அடையாளங்களும் இதேயளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அதனால் எங்களுக்குத் தெரிந்த பல சமூகங்களில் ஆண்களும் ஆண்நிலை இயல்பும் தனிச் சிறப்புரிமை உடையவையாய் உள்ளன எனவும் பெண்களும் பெண்நிலை இயல்பும் ஒடுக்கப்பட்டவையாய் உள்ளன எனவும் நாம் வெகு எளிதாக சொல்லிவிட முடியாது. ஒவ்வொரு சமூகத்திலும் சில பிரிவுக்குரிய ஆண்கள் மட்டுமே தனிச்சிறப்புரிமை உடையோராய் இருக்கின்றனர். இன்னும் சில வகையான ஆண்நிலை இயல்பு மட்டுமே ஆதிக்க ஆண்களுக்குரியவையாக ஆதிக்கமுடையவையாகவே உள்ளன. மேற்கத்தைய சமூகங்களில் இயற்கையான பால் இணைவுடைய வெள்ளையின ஆண்களும் அவர்களது ஆண்நிலை இயல்பின் உருவமும் ஆதிக்கமுடையவையாய் உள்ளன. இடம்பெயர்ந்த முஸ்லிமுடன் சம்பந்தமுடைய ஆண்நிலை இயல்பு உருவங்கள் அல்லது ஓரினச் சேர்க்கையாளனோடு சம்பந்தமுடையவை எல்லாம் ஓரங்கட்டப்பட்டவை அல்லது வெளிப்படையாகவே தடைவிதிக்கப்பட்டவையாகின்றன.*

*Dubravka Zarkov,* Sangat Report



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை வழி ஆதிக்கமுறைமை ஆண்களுக்கும் பெண்களுக்கும் எதைச் செய்கிறதோ அதையே இனத்துவம் வெள்ளையருக்கும் வெள்ளையர் அல்லாதோருக்கும் செய்கிறது. சாதியும் வர்க்கமும் இதையே செய்கின்றன. உண்மையான பிரச்சினை என்பது உயிரியலிலோ, தோல் நிறத்திலோ அல்லது பாலிலோ தங்கியிருக்கவில்லை. மாறாக படிநிலை சமூக முறைமையிலியே தங்கியிருக்கிறது. மேலானவர் என கருதப்படும் எவரும் தமது அதிகார ஆற்றலை நிலைநிறுத்தி இச்சமூக முறைமைகளை நீடிக்கச் செய்யப் பயில வேண்டும். ஆகவே ஆண் நிலை இயல்பு என்பது ஆண்களுக்குள்ளேயும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையேயும் உள்ள உறவுமுறையை மட்டும் வரைவு செய்யவில்லை. சில சந்தர்ப்பங்களில் பெண்களுக்குள்ளேயும் இதைச் செய்கிறது.

ஆண்நிலை இயல்பு மயமாக்கப்பட்ட பொது இடங்களில், தலைமைத்துவ நிலையில் உள்ள பெண்கள், ஆண்களைப் போலவே போர்க்குணம் அதிகார ஆற்றல், கட்டுப்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்துகிறார்கள் என்பது பொதுவாக இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அதிகாரத்தில் உள்ள பெண்கள், ஜனநாயகச் செயல்முறைகள், உரிமைகள் ஆகியவற்றை இடைநிறுத்தம் செய்ய இராணுவத்தீர்வுகளை பின்பற்றவோ அல்லது தமது நோக்குகளை சாதித்துக் கொள்ள சூழ்ச்சியான ஒழுக்கத்திற்குப் புறம்பான உத்திகளை பாவிப்பதற்கோ பின்னிற்பதில்லை. இதிலிருந்து தெளிவாவது ஆண்நிலை இயல்பு என்பது உயிரியல் ரீதியானதல்ல என்பதே.

ஆண்நிலை இயல்பு மயப்படுத்தப்பட்ட இராணுவக் கட்டமைப்பு முறைகளையுடைய அதிகாரத்தை பெண்கள் பொறுப்பேற்பதாயின் அவர்களே ஆண்நிலை இயல்புடையவர்களாய் மாறாமல் இது முடியாது போய்விடும். பெண் தலைவர்கள் போர்க்குணமுடையவர்களாகவும் இனவாதிகளாகவும் இருப்பதற்குக் காரணம் அவர்கள் தம்முடைய நாட்டையும் ஆயுதப்படைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதே. அவர்கள் தம்மை பெண்கள் என்றோ பெண்கள் இயக்கங்களின் தலைவர்கள் என்றோ சொல்வதைவிட நாட்டின் தலைவர்களாகவே கருதுகின்றனர். ஏனெனில் சமாதானமோ பெண்கள் இயக்கமோ அவர்களின் பிரதான தேர்வுக்குரியவைகளாக இருப்பதில்லை.(11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் நாம் விளங்கிக்கொள்ள வேண்டியிருப்பது என்னவெனில் ஆண்களிடமும் பெண்களிடமும் ஆண்நிலை பெண்நிலை இயல்பு இருக்கின்றதென்றும் இது உயிரியல் ரீதியான பிரிவுக்குட்படுவதில்லை. மாறாக பிரக்ஞையின் கட்டமைப்பின் மூலம் ஆண்களிடமும் பெண்களிடமும் வந்தமைகிறது என்று அங்கீகரிப்பதே, சரி. ஆகவே ஆண்நிலை இயல்பை விளங்கிக்கொள்வதும் அதற்கெதிராக சவால்விடுவதும் அடிப்படையில் படிமுறை அமைப்பாய் இருக்கும், ஆதிக்க உறவுகளையும் முறைமைகளையும் விளங்கிக்கொள்வதும் சவால்விடுவதுமாகும்.

***இந்தப் படிமுறையமைப்பு சமூக முறைமைகளின் பார்வையின்படி. ஆண்நிலை இயல்பையும் பெணநிலை இயல்பையும் வரைவுக் குட்படுத்தி. அதை முன்வைப்பதற்கு தகுந்த காரணம் இருக்காதா?***

ஆம் நிச்சயமாக. சமய, கலாச்சார, அரசியல், பொருளாதார கோட்பாடுகள் மூலமாக மக்களை கட்டுப்படுத்துவது மிகவும் இலகுவானது. ஆண்கள் வெள்ளையினத்தவர், பிராமணர் ஆகியோரே மேலானவர் என சமயங்கள் பாடசாலைகள், ஊடகங்கள் எல்லாம் திருப்பித் திருப்பி கூறுமாயின் அவர்கள் அவ்வாறே நடந்துகொள்ள முயல்வர். அவர்களுடைய எதிரியினரான பெண்கள், கறுப்பினத்தவர், கீழ்வகுப்பினர், தொழிலாள வர்க்கத்தவர்கள் ஆகியோரும் இவ்வாறு தமக்குரியதை செய்கின்றனர். சமமற்ற, நீதியற்ற சமூகமுறைமைகளை நீடிக்கச் செய்வதென்பது இந்த வித்தியாசங்களை, படிமுறைகளை மக்கள் மத்தியில் நீடிக்கச் செய்வதாகும்.

இத்தகைய கட்டுறுதியான பிரிவுடைய பால்நிலை வகிபாகங்கள் இல்லையானால் சமூகங்கள் ஒழுங்கற்ற பாழாட்சிக்குள் விழுந்துவிடும் என்று உண்மையாகவே நம்புவோர் உள்ளனர். இதுவே அடிமைமுறை, தீண்டாமை ஒழிப்புக்கும் எதிராகச் சொல்லப்பட்டது.

ஆனால் இவ்வாறு ஆண்நிலை இயல்பையும் பெண்நிலை இயல்பையும் வரைபுபடுத்துவதற்கான வேறு காரணங்களும் உண்டு. பொது இடங்களில் அல்லது ஆண் வலயத்தில் வேலை செய்தால், பேரார்வம், போட்டி போடுதல், தன்முனைப்பு, கடுமையாய் இருத்தல் ஆகியவற்றை தேவையாக்குகிறது. சந்தைபோன்ற இடங்களில் உயிரைத் தக்க வைத்திருப்பதற்கும் இதுவே தேவை. மறுபுறத்தில் பெண் பண்புகள், ஏன், பிள்ளை வளர்த்தல், கவனித்தல், ஒருவரில் ஒருவர் தங்கியிருக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற உறவுமுறையை கட்டியெழுப்புதல் போன்றவை, தனியான வீட்டுக்குரிய அல்லது பெண் வலயத்திற்கு தேவைப்படுகின்ற விஷயங்களாக நிற்கின்றன.

வீட்டை கவனிக்கும் ஒரு பெண்ணுக்கு அதுவே ஈவிரக்கமற்ற சந்தைப்பகுதியிலிருந்து அடைக்கலம் தருவதாய் அமைதியும் இயைபும் கொண்ட சொர்க்கமாக, "பொருளாதார"மனிதனுக்கு எதிரானதாக இருக்கிறது. அமெரிக்க பெண்ணியல்வாதியான நன்சி சொடொறொ (Nancy Chodorow) கூறுகையில் "சிறுவர்கள் சாதனை நோக்குடைய ஆண்களாய் நன்றாக வீட்டுக்கு வெளியே வேலை செய்ய நன்கு பயிற்றப்பட்டவர்களாய் வளர்கின்றனர். அதேவேளை பெண்பிள்ளைகள் உணர்வுபூர்வமான வேலைகளை வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் செய்ய பயிற்றப்பட்ட அகப் பண்புடையவர்களாய் வளர்கின்றனர்"என்றார்.[12]

பொதுவான, தனியான வேலைகள் என முறையே ஆண்களுக்கும் பெண்களுக்குமென தரம் பிரித்து கொடுக்கப்படுகின்ற இந்த பிரிவினையில் ஒரு தர்க்க நியாயம் உண்டு. ஆனால் இன்று, பொதுவான ஆண் வலயம் எனச் சொல்லப்படும் இடங்களில் பெண்கள் பெரிதளவில் பங்கேற்கும்போது இந்த தர்க்கம் அடிபட்டுப்போகிறது.

**ஆண் மேலானவன் பெண் கீழானவள் என்ற இந்தச் சிந்தனை இனிமேல் ஏற்றுக்கொள்ள முடியாதென நீர் சொல்லுகிறீரா?**

இது ஏற்றுக்கொள்ள முடியாதது மட்டுமல்ல இத்தகைய ஆண் ஆதிக்கமுறைமைச் சிந்தனை இன்றைய சட்டங்களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் எதிரானதும் கூட. அனேக நாடுகளின் அரச யாப்புப்படியும் ஐக்கிய நாடுகளின் சம்பிரதாயங்களின்படியும் ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்றே கருதப்படுகின்றது. இதன் அர்த்தத்தில் அனேக சமயத்தலைவர்களால் உறுதிசெய்யப்பட்டும் அனேக குடும்பங்களிலும் அமைப்புகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டும் வரும் அசமத்துவம் சட்டத்திற்கு விரோதமானது. இன்று ஒரு நாட்டின் சுதந்திரப் பிரஜையான கணவன், அதேவகையில் ஒரு நாட்டின் சுதந்திரப் பிரஜையான அவனுடைய மனைவியை சொந்தமாகக் கொள்ள முடியாது. இதிலிருந்து தெரியவருவது என்னவெனில், ஒரு இந்து அல்லது கிறிஸ்தவ தந்தையானவர் ஒரு மகளையோ மணப்பெண்ணையோ பரிசாக கையளிக்க முடியாது. ஏனெனில் எல்லா மகள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரும் வயது வந்தவர்களாகவும் முழுப்பிரஜைகளாகவும் இருப்பதே. அவர்கள் ஒரு ஆணினால் இன்னொருவருக்கு கையளிக்கப்படமுடியாது. இது முற்காலத்தில் சாத்தியமாகி இருந்தது. ஏனெனில் பெண்களும் அடிமைகளும் பிரஜைகளாக இருக்கவில்லை. அவர்களுடைய எஜமான்கள் அல்லது சொத்துடையோர் மட்டுமே பிரஜைகளாக இருந்தனர். அவர்களுக்கே வாக்களிக்கும் உரிமை இருந்தது. எங்களுடைய சட்டங்கள் மாற்றமடைந்திருக்கலாம். ஆனால் எங்களுடைய தந்தை வழி ஆதிக்கமுறைமை, வர்க்கம், சாதி, காலனித்துவ கோட்பாடுகள், செயற்பாடுகள் நடைமுறைகள் இன்னும் நீடிக்கின்றன. யாராவது பெண்ணோ அல்லது ஆணோ சமத்துவத்தில் நம்பிக்கை உடையவராகவும் தன்னுடைய நாட்டினது யாப்பையும் ஐக்கிய நாடுகளின் சம்பிரதாயங்களையும் கௌரவிப்பராகவும் இருப்பாரானால் அவர் ஆணினது ஆக்கிரமிப்பையும் மேலாதிக்க ஆண்நிலை இயல்பையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

**எவ்வாறாயினும் ஆண்களும் பெண்களும் ஒரேமாதிரி இருக்க வேண்டும் என்று சொல்வீர்களா? அவர்களுக்கிடையில் எவ்வித வித்தியாசங்களும் இருக்கக்கூடாது என்று?**

இல்லை. அவர்களுக்கிடையில் இருக்கும் பன்முகத் தன்மை அல்லது வித்தியாசங்கள் அகற்றப்பட வேண்டும் என்று நாம் கூறவில்லை. இதற்கு எதிர்மாறானதே எமது நிலை. நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் எல்லா ஆண்களும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல, அவ்வாறே எல்லாப் பெண்களும் ஒரேமாதிரியானவர்கள் அல்ல என்பதை அங்கீகரிக்க வேண்டும் என்பதே எமது நிலை. அவர்களுக்கிடையில் நிலவும் இறுக்கமான வித்தியாசங்களும் இடைவெளிகளும் செயற்கையாக உற்பத்தி செய்யப்பட்டவை. இவை அவர்கள் இரு சாராரையும் பாதித்துள்ளன. இருசாராரது உறவுகளையும் பாதித்துள்ளன. அலிசன் எம். ஜாகர் (Alison M. Jaggar) இது பற்றி அழகாகச் சொல்கிறார்:

*இன்றைய சமகால சமூகத்தில் ஆண்கள் செயலுக்குரியவர்கள் பெண்கள் அடங்கிப்போவோர். ஆண்கள் புத்திஜீவிகள், பெண்கள் உள்ளுணர்வுடையோர், ஆண்கள் தம்மை வெளிப்படுத்துவோர். பெண்கள் உணர்ச்சிவசப்படுவோர், ஆண்கள் பலமானவர்கள், பெண்கள் பலவீனமானவர்கள், ஆண்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மேலாதிக்கம் செலுத்துவோர், பெண்கள் பணிவுடையவர்கள், இவ்வாறு பல. எவ்வளவுக்கெவ்வளவு ஆண்களும், பெண்களும் இத்தகைய வரைவுகளுக்கு தம்மை ஆட்படுத்திக் கொள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் ஒருவருக்கொருவர் அந்நியப்பட்டவர்களாக மாறுகின்றனர். ஏனெனில் அவர்கள் ஒருவருக்கொருவர் பொருந்தாத விஷயங்களில் அக்கறையுடையவர்களாய் இருக்கின்றனர். ஆண்கள் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டுபவர்களாகவும் பெண்கள் அதை எதிர்ப்பவர்களாகவும் உள்ளனர். எவ்வளவுக்கெவ்வளவு பெண்களும் ஆண்களும் மனித இன பால்நிலை வரைவுகளுக்கு கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு தமக்குள்ளே அந்நியப்பட்டவர்களாய் இருக்கின்றனர். ஆண்நிலை இயல்பு பெண்நிலை இயல்பு என்னும் எண்ணக்கரு, ஆண்கள், பெண்கள் ஆகிய ஒரு சாராரையும் தங்களது செயலாற்றலை மற்றவர்கள் செலவில் அத்துமீறி வளரச் செய்ய இடமளிக்கிறது. உதாராணமாக ஆண்கள் போட்டி போடுபவர்களாகவும் மற்றவர்களிடமிருந்து விடுபட்டவர்களாகவும் இருக்கின்றனர். பெண்கள் பராமரிப்போராகவும், பிறர்க்கென வாழ்வோராகவும் இருக்கின்றனர். ஒருவர், தாராண்மை பெண்நிலை வாதநிலையில், பெண்களை களைவிட ஆண்கள் தமது பெரிதளவான மனிதச் செயல் திறனை வளர்க்க அனுமதிக்கப்படுவதாய் நம்பினாலும் சரி, ஒருவர், தீவிர பெண்நிலை வாத நிலையில், பெண்கள் ஆண்களைவிட முழுமையான மனிதத்தன்மையுடையோராய் இருக்கின்றனர் என்று நம்பினாலுதம் சரி இருபாலாரும் தமது உற்பத்தித் திறனின் முழு வளர்ச்சியையும் அடைய முடியாது தடுக்கப்படுகின்றனர் என்பதே உண்மையாகும். இருபாலாரும் மனிதச் சாத்தியப்பாட்டின் துண்டு துண்டாக்கப்பட்ட திரிபுகளே.*[13]



ஒரே விதமாக எல்லா ஆண்களையும் நடந்துகொள்ள உந்தித் தள்ளுதல் யதார்த்தத்திற்கு மாறானது. நடுநிலையற்றது, துன்பமானது. இது பெண்களுக்கும் சரியானதே. நாங்கள் எல்லாருக்கும் பெரியளவிலான பன்முகத்தன்மைக்கும் அதிகளவிலான தெரிவுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமளிப்பவர்கள். இத்தெரிவுகள் உயிரியலையும் பிறப்பையும் விட மனச்சாய்வையும் திறமையையும் அடிப்படையாகக் கொண்டவை. ஆண்கள், பெண் தன்மையுடையவர்களாயும் மென்னுணர்வு மிக்கவர்களாகவும் எல்லாருக்கும் இடமளிப்போராகவும் ஜனநாயகத் தன்மையும் மற்றவர்கள் நலனைக் கவனிப்போராகவும் இருக்க முடியும், அவர்கள் இத்தகைய குணங்களை வளர்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டால் என்பதை நாங்கள் நம்புகிறோம்.

மக்களை, ஆண் பெண்ணாகப் பிரிப்பதையிட்டு நாம் முன்வைக்கும் இரண்டாவது மறுப்பு அதனோடு சம்பந்தப்பட்டுவரும் படிமுறை கட்டமைப்புபற்றியதாகும். தந்தைவழி ஆதிக்க சமூகம் ஆண்களும் பெண்களும் வேறானவர்கள் என்று வெறுமனே சொல்லிவிடுவதில்லை. அது அவர்களை வேறு வேறாகவே எடைபோடுகிறது. அது படிமுறைக் கட்டமைப்புகளையும் அசமத்துவங்களையும் உருவாக்குகிறது. இதனால் சிறுமியரும் பெண்களும் மட்டும் பாதிப்படைவதில்லை. குடும்பங்களையும், முழுச் சமூகத்தையும் பாதிப்படையச் செய்கிறது. மனித குலத்தின் அரைவாசித் தொகையை இவ்வாறு பெறுமதி இழக்கச் செய்வதையே நாம் எதிர்க்கிறோம்.

ஆண் ஆதிக்கம் இல்லாமல் பால்நிலைப் பிரிவு வித்தியாசங்கள் இருப்பது எமக்கு உடன்பாடானதே. பிரச்சினை எல்லாம் வித்தியாசங்களால் வருவதல்ல. மாறாக அவை அசமத்துவத்தாலும் வளங்களும் அதிகாரமும் நியாயமற்ற முறையில் விநியோகிக்கப்படுவதாலுமே வருகிறது.

**ஆண்நிலை இயல்புக்கும் பாலியல் தன்மைக்கும் உள்ள தொடர்பு என்ன?**

இயற்பண்புகள், மனப்பான்மைகள், வகிபாகங்கள் என்பவற்றைப் போலவே ஆண்-பெண் பாலியல் பண்புகளும் பாலியல் நடத்தைகளும் வேறுவேறானவையாக வரைவுபடுத்தப்பட்டுள்ளன. 'ஆண்நிலை இயல்பு என்பது மேலாதிக்கம் செலுத்துதல், சண்டைக்கிழுத்தல், தன்னை நிலைநிறுத்தல் என வரைவு செய்யப்பட்டால் இது பாலியல் உட்பட்ட எல்லாவித உறவுகளையும் பாதிப்படையச் செய்கிறது. ஆன் ஒக்லே என்பவர் இதனை நுணுக்கமாக பின்வருமாறு சுருக்கித் தருகிறார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மற்றைய துறைகளில் ஆண் கைக்கொள்ளும் பெரியளவிலான ஆக்கிரமிப்புகளோடு பாலியல் துறையிலும் அவனது ஆக்கிரமிப்பு இடம்பெறுகிறது. ஆணே முதலில் பாலியல் தொடர்பை ஏற்படுத்துகிறான். மேலாதிக்க முன்னெடுப்பின் குறியீடாக அல்லது, உண்மையான செயற்பாடாகவே யோனியை ஊடுருவல் நிற்கிறது. இச்செய்கையானது ஒரு "இருளி"யான பெண்ணுடனும் சாத்தியமானதே. அவர்கள் உடலுறவு கொள்ளும் போது மேலாதிக்க தன்மையை மேற்கொள்கின்றனர். ஆண்கள் பெண்களை தம்மோடு படுக்கைக்கு வரும்படியும் அல்லது தம்மை மணம் முடிக்கும்படியும் அல்லது இரண்டையும் கேட்கின்றனர். ஆனால் மறுவளமாக இது நடைபெறுவதில்லை. பெண்ணுடைய பாலியல்தன்மை என்பது ஏற்றுக்கொள்ளும் தன்மைக்குரியதாய் நிற்கிறது. இது வெறுமனே திறந்த யோனியாய் இருப்பதோடு முடிவதல்ல. இது தங்கியிருக்கிற அடங்கிப்போகிற ஆக்கிரமிப்பற்ற அர்ப்பணிப்புடைய பெண்ணுடைய ஆளுமையின் முழுக்கட்டமைப்பெங்கும் வியாபித்திருக்கிறது.*[14]

அனேகமான பாலியல் உறவுகளில் ஆண்களே தலையானவர்கள். அவர்களுடைய வேட்கைகள், விருப்பு வெறுப்புகள், அவர்களுடைய திருப்திகள் என்பவையே பிரதானமானவையாக நிற்கின்றன. அதிகக்கூடியதான பெண்களின் சிறப்பு நிலையில் அவர்கள் தாழ்ந்த அடங்கிப் போகும் கூட்டாளிகளாகவும் அதிகக்கூடிய சிறப்பற்ற நிலையில் ஆண்களின் வேட்கையை காம இச்சையை தீர்க்கும் வெறும் பண்டங்களாகவும் இருக்கின்றனர். டெல்லியில் சேரியொன்றில் வாழும் பெண்ணிடம் ஒரு சமூக சேவையாளர் அவள் எப்போதாவது தன் கணவனிடம் பாலியல் உறவை தானாக ஆரம்பித்திருக்கிறாளா என்று கேட்ட போது அவள் அந்தக் கேள்வியால் ஆச்சரியமடைந்தவளாய் பின் வருமாறு சொன்னாள்: "ஒரு பாண்துண்டு தன்னைச் சாப்பிடும்படி கேட்குமா?"

ஆண்-பெண் ஆகியோரது பாலியல் தன்மைகள், அவர்களது வித்தியாசமான உயிரியல் ஹோர்மோன் தன்மைகளால் வித்தியாசமானவை என நம்புவோர் உள்ளனர். ஆனால் அத்தகைய வித்தியாசங்களுக்கு உடல் உள்ளமைப்பியல் ரீதியானதோ அல்லது உடல்நூல் ரீதியானதோ ஆதாரங்கள் இல்லை என பல ஆய்வுகள் காட்டியுள்ளன. பாலியல் நடத்தைகள், தேவைகள் கற்பனைகள் என்பவற்றிலும் இன்னும் பலவற்றிலும் வித்தியாசங்களை சமூகமயப்படுத்தலே ஏற்படுத்துவதாய் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்காசியாவில் பெண்கள் பூப்பெய்தியதும் குடும்பங்கள் அவர்கள் மேல் கட்டுப்பாட்டை அதிகரிக்கின்றன. அவர்களது போக்குவரத்து குறைக்கப்படுகிறது. ஆண்பிள்ளைகள், ஆண்களோடான அவர்களது ஊடாட்டம் கட்டுப்படுத்தப்படுகிறது. அவர்களது உடைகள் கட்டுப்பாட்டு வரையறைக்குள்ளாக்கப்படுகின்றன. அதேவேளை ஆண்பிள்ளைகளுக்கு பருவமெய்தும் காலம் எழுச்சி கொண்ட, பெருமளவு விடுதலை, போக்குவரத்து, மிகுந்த தனித்துவம் கொண்ட காலமாக மாறுகிறது. இது ஆண்பிள்ளைகளால் ஆண்நிலை இயல்பையும் ஆண்பருவத்தையும் பற்றி அறியத் தொடங்குகிற காலத்தின்போது இடம்பெறுகிறது.

## உண்மையான மனிதர்கள் பாலியல் வன்புணர்வில் ஈடுபடுவதில்லை

ஆணின் பாலியல்பு, ஆக்கிரமிப்பு, வன்முறை ஆகியவை பலவழிகளில தொடர்புபட்டவையாய் உள்ளன. இதற்கு உதாரணமாக நிற்பது ஆணின் மொழியும் வெளிக்காட்டு முறையுமாம். ஆங்கிலத்தில் உள்ள அனேக நான்கெழுத்து சொற்கள் பாலியல் அர்த்தமுடையவை. சாதாரண உரையாடல் நேரத்திலும் பாலியல், வன்முறைச் தூஷணங்களை கக்காது இரண்டு வசனங்கள் பேசமுடியாத ஆண்கள் இருக்கவே இருக்கின்றனர். தெற்காசியாவில் உள்ள ஆண்கள், தாங்கள் விரும்பாத, தாங்கள் கோபப்படும் அனைத்துக்கும் (ஆங்கிலத்தில் தூஷண வார்த்தைகளைக் குறிக்கும்) "F" என்ற சொல்லில் தொடங்கும் வார்த்தையைப் பாவிப்பது வழக்கம்.

வட இந்தியாவில் உள்ள இளம் ஆண்கள், பெண்களோடு நட்புறவில் அக்கறை கொள்ளும்போது அவர்களை (Cheez) ஒரு பொருளாக அல்லது ("மால்") ஒரு பண்டமாகவே கண்டனர். இத்தகைய மனப்பான்மையில் பாலியல் உறவுமுறையில் சமத்துவத்தையும் பரஸ்பரத்தையும் எதிர்பார்க்க முடியாது. மற்றவர்கள் "பலிப் பொருளை தேடியே போகின்றனர்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாலியல் வன்புணர்வில் ஈடுபடும் மனிதர்கள்"என்னும் தன்னுடைய நூலில் ரிமோதி பெனீக் (Timothy Beneke) பாலுறவு சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஆண்பிள்ளைகளும் ஆண்களும் பாவிக்கும் சொற்களை எமக்கு மீட்டளித்து பகுப்பாய்வு செய்துள்ளார். "முதன்முதலாக ஒரு பெண்ணோடு பொருதும் பாலுறவு கலப்பை தேடுகின்ற இளம் ஆண்களின் மையப்பொருள் குறிப்பாக பின்வருமாறு அமைகிறது. உடலுறவு வைத்துக்கொள்வது என்பது ஒரு சாதனை. ஒரு பெறுமதி மிக்க பொருளை தமக்குரியதாக்கிய சாதனை. இங்கே பெண் தான் பெறுமதிமிக்க பொருளாகிறாள்".[15] இவ்வகையில் பெண்ணோடு தொடர்புகொள்ளும் ஆண்கள் இதுபற்றிக் கதைக்கும்போது பாலுறவை ஒரு சாதனையாக அல்லது பெண்ணை ஒரு பண்டமாகவே காண்கின்றனர். ஆணின் பாலுறவு பற்றிய வெளிக்காட்டல்கள் சம்பந்தமாக அவர் உதாரணங்கள் காட்டுகையில் பாலுறவை ஒரு வேட்டையாக, ஒரு விளையாட்டாக, சூதாட்டமாக, ஒரு பொருளாகக் கொள்வது தெரிகிறது. பாலுறவு ஒரு வெற்றியாகவும் யுத்தமாகவும் கொள்ளப்படுகிறஃது.

இந்நிலையில் பெனீக் பின்வருமாறு கேள்வி எழுப்புகிறார்: பாலுறவை ஒரு சாதனையாகக் கொண்டால் அந்தச் சாதனை ஒரு பெறுமதி மிக்க பொருளை தனக்குரியதாகக் பெற்றுக் கொள்வதாக இருந்தால் அந்தப் பெறுமதி மிக்க பொருள் ஒரு பெண்ணாக இருந்தால் அத்தகைய மனிதர்களின் செயற்பாட்டின் குணாம்சம் என்ன? அவனைப் பொறுத்தவரையில் பாலியல் செயற்பாடென்பது திருப்தியைவிட அந்தஸ்து, பகைமை, கட்டுப்பாடு, மேலாதிக்கம் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகவே இருக்கிறது. அவனது ஆய்வும் கற்றலும், பெண்ணோடொருத்தன் பாலுறவு வைத்துக்கொள்வதற்கும் பெண்ணை ஒருத்தன் பாலியல் வன்புணர்வு புரிவதற்கும் இடையே ஒரு சிறிய வித்தியாசமே இருப்பதான முடிவுக்கு வரச் செய்கின்றன.

தெற்காசியாவிலுள்ள, தமது உடலை கணவனின் காம இச்சையின் திருப்திக்காக அர்ப்பணிக்கும் பெண்கள் மிக அரிதாகவே புணர்ச்சி உச்சத்தையும் பரஸ்பர ஈடுபாட்டையும் அடைகிறார்கள். இவர்கள் ஒருவிதத்தில் உடலுறவு என்பது தமது கணவன்மாரின் அந்தஸ்து, கட்டுப்பாடு, ஆதிக்கம் ஆகியவற்றுக்காகவும் அவர்களுக்காகவுமே இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் ஆண்களின் மனதில் பாலுறவு என்பது ஒரு யுத்தமாகவே பார்க்கப்படுகிறது. எந்தப் பெண்ணாவது ஆண்களின் பாலுறவு வேட்கைக்கு மறுத்தாலோ விட்டுக் கொடுக்காவிட்டாலோ பாரதூரமான விளைவுகளுக்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாகிறார்கள். தம்மை நிராகரிக்கும் பெண்களுக்கு அசிட் வீசுபவர்கள் இருக்கிறார்கள். இன்னும் "அவளை நான் பயன்படுத்தாவிட்டால் வேறு யாருக்கும் அவள் கிடைக்கக்கூடாது"என்று கூறி கொலை செய்பவர்களும் இருக்கிறார்கள். அல்லது அவளை பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கி "எனக்கு எவரும் மாட்டேன் என்று சொல்ல முடியாது"என்று சொல்பவர்களும் உண்டு.

தெற்காசியாவிலும் வேறிடங்களிலும் உள்ள வீதிகளில், பஸ்களில், தொடருந்துகளில், பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில் பாலியல் ரீதியாக பெண்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களுக்கெல்லாம் வன்முறையான ஆண்களின் பாலியல் நடத்தையே காரணம். நியூயோர்க்காய் இருந்தாலென்ன புதுடெல்லியாய் இருந்தாலென்ன எந்த இடத்திலும் பெண்களுக்கு பாதுகாப்பு உணர்வு கிடைப்பதில்லை. ஆண்களின் பாலியல் வன்முறை அல்லது அத்தகையவற்றின் அச்சுறுத்தல் எல்லாப் பொது இடங்களிலும் பெண்கள் புழக்கத்திற்கு விரோதமான சூழலையே ஏற்படுத்தியிருக்கிறது. தெற்காசியாவில் இருந்தும் கிடைக்கும் சில உதாரணங்கள் இதை விளக்க உதவும்.

2002 ஜுலை மாதம், 13 அல்லது 14 வயது மதிக்கத்தக்க மூன்று பங்களாதேஷ் சிறுவர்கள் நான்காம் வகுப்பு மாணவியான ரிறிஷா என்பவளை பாலியல் ரீதியாக வதை செய்த பின்னர் அவளைக் குளத்திலே தள்ளிவிட்டு கொலை செய்தனர். பரதம் அலோ (Prathom Alo) என்ற பங்களாதேஷ் பத்திரிகை 2002 ஜுலை மாதம் நடந்த இன்னொரு சம்பவத்தை அறிவித்திருந்தது. ஜமீலா என்ற பத்து வயதுச் சிறுமியை 12லிருந்து 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் கூட்டம் பாலியல் வன்புணர்வு புரிந்த பின்னர் கொலை செய்தது. அந்தச் சிறுமி மீது இந்தப் பிசாசு பிச்சைக்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட பாதகச் செயல் பின்வருமாறு: ஜமீலா மயக்கமுற்றதும் அவளது கண்களைத் தோண்டி எடுத்தனர். கைவிரல்களை வெட்டியெறிந்தனர். அவள் இறந்துவிட்டாள் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்ட பின்னர் அவர்கள் அந்த இடத்தை விட்டகன்றனர். எல்லாரையும் அதிர்ச்சிக்குள்ளாக்குவது என்னவெனில் இத்தகைய பாலியல் வன்முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது கிராமங்களிலும் இடம்பெறுவதே. முன்னர் இது அங்கே அரிதான ஒன்றாகவே இருந்தது.

90களின் மத்தியில் பிகாரில் (இந்தியாவில்) உள்ள நான்கு வசதியான குடும்பத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் திறந்த ஜீப்பொன்றில் கல்லூரிக்கு சென்று அங்கிருந்த மாணவி ஒருத்தியை தம்மோடு வரும்படி அழைத்தபோது அதற்கவர் மறுக்கவே ஜீப்பை அவள்மேல் ஏற்றிக் கொன்றனர்.

ஜுன் 2002ல் பாகிஸ்தான் கிராமம் ஒன்றைச் சேர்ந்த முதியவர்கள் அங்குள்ள பெண்ணொருத்தியின் சகோதரன் பிறிதொரு பெண்ணுக்கு செய்த தவறுக்காக அவளுக்குத் தண்டனையாக அங்கிருந்த ஆண்கள் பலரை அவள்மேல் பாலியல் வன்புணர்வு மேற்கொள்ளும்படி ஏவிவிட்டனர்.

பெண்ணாக ஒருத்தி பிறந்துவிட்ட பெரும் பாவத்துக்காக எல்லா-ருடைய பாவத்துக்கும் அவளையே பலிக்கடாவாக்கும் வன்முறை மிக்க ஆண்நிலை இயல்பே இது.

எங்களுடைய கவனம், பலிப்பொருளில் இருந்து பலிபொருள் ஆக்கு-வோர், வன்புணர்வுக்குட்படுவோரில் இருந்து வன்புணர்வை மேற்கொள்-வோர் பக்கம் திரும்பும் காலம் வந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். நாங்கள கேட்க வேண்டிய கேள்வி, எந்தவித தூண்டுதலுமின்றி சித்திரவதை செய்து வன்புணர்வு மேற்கொண்டு, கொலை செய்கின்ற - கேளிக்கைக்காக கொலை செய்கின்ற - இத்தகைய காட்டுமிராண்-டித்தனமான, காட்டுமிராண்டியாக்கப்பட்ட சிறுவர்களை ஏன் எவ்வாறு எமது சமூகம் உருவாக்குகிறது என்றே.

ஹிமாசல் பிரதேசத்தில் நான் அண்மையில், "வீரியம்மிக்க ஆண் தன்மைக்கு கொமாண்டோ கூட்டுக்குளிசைகள்"என்ற ஒரு விளம்பரத்-தைப் பார்த்தேன். நான் நினைக்கிறேன் இதுதான் வயகராவுக்கு பதிலான உள்ளூர் தயாரிப்பு என்று. இங்கே மீண்டும் பாவிக்கப்பட்டுள்ள சொற்கள் ஆக்கிரமிப்புக்கும் ராணுவத்தன்மைக்குரியதுமாய் உள்-ளன. படையணி போர்வீரன் (கொமாண்டோ) போன்று பாலியல் தன்மை-யுடையவன் ஒரு பெண்ணுக்கு கூட்டாளியாக, மென்மைப் போக்குடைய காதலனாக முடியுமா? அத்தகைய மனிதனின் பாலுறவு என்பது, தனது பாலுறவுத் தொடர்புடைய கூட்டாளியை ஆக்கிரமிப்பதைத் தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறேதாவதாக இருக்க முடியுமா? இத்தகைய சிந்தனையே பாலியல் வன்புணர்வைச் சாத்தியப்படுத்துகிறது. ஒரு மனிதனின் ஆண்குறியே மற்றவரை நிராகரிக்கும் ஆயுதமாக மாறுகிறது. ஆனால் அத்தகைய மனமும் உடலும் மற்றவரை நிராகரிப்பதற்கு முன்னர் அவையே அவர்களை மனிதத் தன்மையற்றவர்களாக்கி விடுகின்றன.

பாலியல் வன்புணர்வு புரிந்து தமது விதையை எதிரியான பெண்களில் நடுபவர்கள் ஒரு புதுமையான உறவு முறையை தமது வம்சவித்தோடும் வைத்துக்கொள்கின்றனர். தங்கள் உடலுறவால் வந்த பிள்ளையை அந்தப் பெண்ணுக்கு தண்டனையாக கருதுகின்றனர். பிள்ளை முறைமை பிறழ்ந்ததாக இருக்க, இந்த பிள்ளையைப் பெற்றதால் அவள் களங்கப்படுத்தப்படுகிறாள். அதேநேரத்தில் இதற்குகாரணமானவர் எதிரிப் பெண்ணை கர்ப்பம் தரிக்கச் செய்தமைக்காக வீரனாக மெச்சப்படுகின்றான். இத்தகைய ராணுவ மயப்படுத்தப்பட்ட தந்தை வழி ஆதிக்கமுறைமை வழிவரும் தர்க்கம் விளங்குவதற்கு கஷ்டமானதாக இருப்பதோடு இதற்கேற்ப நடந்து கொள்வோரையும் விளங்குவது கஷ்டமானதே.

உலகம் முழுவதும் பரவலாக இடம்பெறும் பாலியல் வன்புணர்வு (இதற்குப் புறநடையாக சில இனக்குழுச் சமூகங்கள் உள்ளன. அங்கே பாலியல் வன்புணர்வு சுதந்திரமாக இடம்பெறுகிறது) ஆண்நிலை இயல்புக்கும் பாலியல் தன்மைக்கும் வன்முறைக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுவதற்குரிய இன்னொரு உதாரணமாகும். இது பற்றி தகுதி மிக்க முதலாவது நூலொன்றை எழுதிய சுசான் பிறவுண்மிலர் (Susan Brownmiller) என்பவர், பாலியல் வன்புணர்வே எல்லாவற்றினதும் அடிப்படை செயலாக இருக்கிறது. இதன் மூலம் ஒரு ஆண் ஒரு பெண்ணுக்கு தனது மேலான பலத்தினதும் அதிகாரத்தினதும் மூலம் அவளை ஆக்கிரமித்து முறியடித்துவிடுவேன் என்பதைக் காட்டுகிறான். பாலியல் வன்புணர்வு பற்றி ஆய்வு நடத்திய பலர், அதை வன்முறை ஆக்கிரமிப்பு என்பவற்றின் குற்றச்செயல் எனச் சொல்கின்றனரேயன்றி உணர்ச்சி வசப்பட்ட செயலின் குற்றம் என்று சொல்லவில்லை.

யுத்தம், பேரழிவு, இனக்கலவரம் ஆகிய சந்தர்ப்பங்களில் பாலியல் வன்புணர்பு ஒரு ஆயுதமாகப் பாவிக்கப்படுகிறது. சண்டை பிடிக்கும் குழுக்கள், பாலியல் வன்புணர்வை எதிர்ப்பக்கத்தவரை அவமானப்படுத்தி தமது பலத்தையும் மேன்மையையும் அவர்கள் மேல் திணிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிக்கின்றனர். அதேநேரத்தில் எதிரி- ஆண்கள் தமது பெண்களை காப்பாற்ற முடியாதவர்கள் என்றும் ஆகவே அவர்கள் சக்தியற்ற-வர்கள் கீழானவர்கள் என்றும் ஸ்தாபிக்க முயல்கின்றனர்.

சுசான் பிறவுன் மிலரின் ஆய்வு, உலகின் பல்வேறு பகுதிகளில் நூற்-றாண்டுகளாக பாலியல் வன்புணர்வு எல்லாவிதமான யுத்தத்தின் போது பாவிக்கப்பட்டு வந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. 1971ல் 20,000 லிருந்து 40,000 வரையிலான வங்காளப் பெண்கள் பாகிஸ்தான் ராணுவச் சிப்பாய்களால் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டனர் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பிறவுன் மிலர் பின்வருமாறு எழுதுகிறார். பங்களாதேஷில் பெரியளவில் நடந்த பாலியல் வன்புணர்வு ஒரு தனித்துவமான ஒன்றல்ல. 1937ல் நன்கின்ஸ் நகரில் ஒரு மாத ஆக்கிர-மிப்பின் போது நடந்த பாலியல் வன்புணர்வோடு ஒப்பிடும்போது பங்களாதேஷில் ஒன்பது மாத ஆக்கிரமிப்பின்போது இடம்பெற்ற பாலியல் வன்புணர்வு பெரியதல்ல. இது முதலாம் உலக யுத்தத்தின் போது மூன்று மாத காலத்தில் ஜேர்மன் படை பெல்ஜியத்துக்குள்ளும் பிரான்சுக்குள்ளும் தடையற்றுப் புகுந்தபோது இடம்பெற்ற வன்புணர்வைவிட பெரியதல்ல. இது இரண்டாம் உலக யுத்தத்தின் போது சோவியத் ரஷ்ஷியாவின் ஒவ்வொரு கிராமத்திலிருந்த பெண்கள் அனுபவித்த வன்புணர்வைவிட பெரியதல்ல.[16]

இந்தியா பிரிந்தபோது இவ்வாறே இந்து முஸ்லிம் சீக்கியப் பெண்கள், இந்து முஸ்லிம் சீக்கிய ஆண்களால் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டனர். சுதந்திரம் பெற்ற இந்தியாவில் இந்து வெறியர்களால் முஸ்லிம் பெண்கள் பல தடவை வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டனர். சுதந்திரம் பெற்ற பங்களாதேஷின் முஸ்லிம் வெறியர்களால் இந்துப் பெண்கள் பலதடவை வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டனர். பிறவுண் மிலர் யுத்தகால வன்புணர்வுக்கும் யுத்தகால விபச்சாரத்திற்கும் பெரிய வித்தியாசம் இல்லை என்று நிறுவுகிறார். ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் வீரநாயக-னுக்கும் காலம்காலமாக செய்யப்படும் கௌரவமரபாக, விடுதலையை ஏற்படுத்துவோருக்கு பெண்களது உடல்கள் அன்பளிக்கப்படுகின்றன. இது ஒரு வெறும் வெகுமதியாகவோ அல்லது ஒரு வீரதீர செயல் என்ற முறையிலோ அல்லாது யதார்த்த பூர்வமானதும் அவர்களுக்கே உரியதுமான பொருளாதாரத் தேவையின்பால் செய்யப்படுவதே. இத்தாலி சரணடைந்ததன் பிற்பாடு றோம் நகரில் நிலவிய நிலவரம் குறித்து இரண்டு வரலாற்றாசிரியர் எழுதியபோது "இத்தாலியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் உணவுக் கவளத்துக்காக எந்தச் சேவையையும் செய்யக் கூடியவராக இருந்தனர்"என நுட்பமாக எழுதினர்.

பலேர்மோவிலிருந்து (Palermo) ஒரு வயதுபோன பெண் சமூகவியலாளர் டனிலோ டொல்கி (Danillo Dolci)யிடம் பின்வருமாறு கூறினாள். "பெண்கள் பெருக்கெடுத்து வந்ததை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். அமெரிக்கரும் வெள்ளையரும் கறுப்பர்களும் இருந்தபோது வியாபாரம் பெரிதாக வீங்கிப் பெருத்தது. அமெரிக்கப் படைகள் தங்களது முகாம்களை பூங்காப் பகுதிகளில் அமைத்தன. கணவன்மார் தமது மனைவிமாரை அவர்களிடம் கொண்டுவந்து கொடுத்து காசைப் பெற்றுச் சென்றனர். ஒருவன் வெளியே வந்தவுடன் மற்றவன் உள்ளே சென்றான். அவர்கள் வரிசையில் நின்றிருந்தனர். பூங்காவின் காவலர்கள், அமெரிக்கர்கள் சௌகரியமாக இருப்பதற்காக மெத்தைகள் வழங்கினர்.



யுத்தகால வன்புணர்வையும் யுத்தகால விபச்சாரத்தையும் சுதந்திரமான வியாபார முறை என்கிற மங்கலான கோட்டினால் தெளிவாக பிரித்துக் காட்ட முடியவில்லை.[17]

வியற்னாம் யுத்தத்தின்போது, பாங்கொங்கில் அமெரிக்க ராணுவத்தினரின் ஓய்வுக்கும் பொழுதுபோக்குக்குமாக நிறுவப்பட்ட விபச்சார தொழிற்சாலை இன்னும் செழிப்பாக நடந்துகொண்டிருக்கிறது. இன்றுள்ள ஒரேயொரு வித்தியாசம் அது தற்போது பொருளாதார வளமுள்ள நாடுகளான ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளின் பொருளாதார வளமுள்ள போர்வீரர்களுக்கு சேவை செய்வதாக மாறியுள்ளது. பொருளாதாரப் போரில் பெண்களும் பாவிக்கப்படுகின்றனர். அவர்கள் அங்கே கையூட்டாக அன்பளிப்புகளாக அல்லது சந்தோசப்படுத்தலுக்காக கொடுக்கப்படுகின்றனர். நவீன பொருளாதார வீரர்கள் அவர்களை நுகர்ந்து வெற்றிபெற்றோராகவும் ஆண்மை உடையோராகவும் உணர்கின்றனர்.

ஆக்கிரமிப்பாளர்களாக இருக்கும் ஆண்கள் வெறுமனே பெண்களை மட்டும் அடக்குவதில்லை. அவர்கள் மற்ற ஆண்களையும் அடக்கி ஒடுக்குகிறார்கள். இதிலிருந்து ஆண்களும் ஆதிக்கம் செலுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்நிலை இயல்பின் கைகளில் பாதிப்படைந்து வருந்துகிறார்கள். இல்லையா?.

**உ**ண்மை. மென்தன்மையுடைய ஆண்கள், ஆதிக்கம் செலுத்தும் ஆண்களால் கேலி செய்யப்படுவதுடன், பாலியல் ரீதியாகவும் சுரண்டப்பட்டு கொடுமைப்படுத்தப்படுகின்றனர். நம்பமுடியாத அளவுக்கு மென்போக்குடைய ஆண்கள், ஆதிக்கம் செலுத்தும் ஆண்களால் விடுதிகளிலும் பாடசாலைகளிலும் வேலை செய்யுமிடங்களிலும் இன்னும் ஆண்கள் மட்டுமே உள்ள ஸ்தாபனங்களிலும் அடக்கியொடுக்கப்பட்டு பலவிதத்தில் துன்புறுத்தப்படுகின்றனர்.

அமெரிக்க உளவியலாளர்களின் கணிப்பின்படி 1,60,000 பிள்ளைகள் இவ்வாறு துன்புறுத்தல்களுக்குள்ளாகப்படுவதற்கு பயந்து பாடசாலைகளைத் தவறவிடுகின்றனர். இவ்வாறான கதைகள் இந்தியாவிலும் இடம்பெறுவதை நாம் அறிந்துள்ளோம். சிரேஷ்ட மாணவர்கள் புதிதாகப் பாடசாலைக்குவரும் மாணவர்களை துன்புறுத்துதல், உடல்ரீதியான காயங்களை ஏற்படுத்துதல், ஈற்றில் சில சமயங்களில் இது மரணத்திலும் முடிந்ததுண்டு. இத்தகைய துன்புறுத்தல்கள், பால்ரீதியான சுரண்டல்கள், ராணுவத்திற்குள்ளும் இன்னும் இளம் வயதினர் வயது வந்த ஆண்களுக்கு கீழ் வேலை பழகுவோராய் இருக்கும் இடங்களிலும் இடம்பெறுவதுண்டு. அண்மையில் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் கத்தோலிக்க மதபோதகர்களால் ஆண்பிள்ளைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ள தகவல்கள் வந்துள்ளன. ஆண்களுக்கெதிராக ஆண்களால் மேற்கொள்ளப்படும் வன்முறை பரவலாக உள்ளதோடு சேதம் ஏற்படுத்துவதாகவும் தம்மை நிலைநிறுத்துவதாகவும் உள்ளது. ஆய்வுகளின்படி சிறுபிராயத்தில் துன்புறுத்தப்பட்டு துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சிறுவர்களே பெரியவர்களானதும் வன்முறையாளர்களாகவும் குற்றம் புரிவோராகவும் மாறுகின்றனர். இந்த நச்சு சுழல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஆதிக்கம் செலுத்தும் ஆண்பால் தன்மை என்னும் கருத்தினால் பிரச்சினைப்படும் மற்றொரு வகை ஆண்களும் உள்ளனர். ஏனெனில் அவர்கள் வீரப்பிரதாபமயப்பட்ட ஆணநிலை இயல்புக்கு ஈடுகொடுக்க முடியாதவர்கள். அவர்கள் உணர்வுபூர்வமாகவும் சமூகரீதியாகவும் துன்பப்படுகின்றனர். உதாரணமாக தேவைக்கு மிஞ்சிய வீரப்பிரதாபம், ஆண்களுக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்தநிலையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் அந்தரமான மனநிலை பற்றிய ஒரு விளக்கத்தை இன்று இந்திய டொக்டர்களாலும் வைத்தியர்களாலும் பாலியல் ரீதியாக ஆண்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படுத்துவதற்காகவும் - அதாவது போதுமான ஆண்மையின்மையைப் போக்குவதற்காகவும் - கொடுக்கப்படும் ஏராளமான விமர்சனங்களில் இருந்து அறியலாம். ஆண்மை என்பது இங்கே பாலியல் நடத்தையோடு சமப்படுத்தப்படு-கிறது. அது திரும்ப அதிகாரத்தோடு சமப்படுத்தப்படும்போது அது பெண்கள் மீதானதும் மற்ற ஆண்கள் மீதானதுமான அதிகாரமாகிறது. ஒரு மனிதன் பால்ரீதியாக நன்கு செயற்பட முடியாது போனால் அவன் "பலவீனமானவன்"ஆற்றல் இல்லாதவன் ஆண் அற்றவன் எனக் கருதப்படுகிறது. இந்த அளவு கோலின்படி ஒரு ஆணினது ஆற்றல் அவனது பாலியல் உறுப்பிலேயே தங்கியிருக்கிறது. பாலியல் பலவீனம் என்பது ஒரு குறைபாடல்ல. அது ஒரு அவமானம் என்பதே, அதன் கருத்து

**இதுகாலவரை ஆண்நிலை இயல்பு என்பது உடன்பாடானதாக, சக்திமிக்கதாக ஆண்பிள்ளைகளுக்கும் ஆண்களுக்கும் உரிமைகளை வழங்கியதாக இருந்தது. ஆனால் இப்பொழுது அது அவர்களுக்கும் தீங்கு விளைவிப்பதாக இருக்கிறது. இதிலிருந்து இதை விரிவுபடுத்திச் சொல்ல முடியுமா?**

தந்தை வழி ஆதிக்கமுறைமையில் ஆண்பிள்ளைகளும் ஆண்களும் பலவகையான உரிமைகளையும் அதிகாரங்களையும் அனுபவிக்கின்-றனர். அவர்கள் எல்லா சமூக ஸ்தாபனங்களையும் எல்லா பொருளா-தார வளங்களையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். பழைய சர்வதேச சட்ட அமைப்பின (ILO) புள்ளிவிபரப்படி ஆண்கள் உலகின் மொத்த வேலையில் 33 வீத வேலை செய்து பங்கிடப்படும் வருவாயில் 90 வீத வருமானத்தைப் பெறுகின்றனர். இன்னும் 99 வீதமான சொத்துக்களை கூட்டாகத் தம்கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். ஆண்கள் நாடாளுமன்றத்தில் 90 வீத ஆசனங்களையும் பெறுகின்ற-னர். அத்தோடு அவர்களே 90 வீதமான வன்முறைக் குற்றங்களையும் 100 வீதம் எல்லாவகைப் பாலியல் வன்புணர்வுகளையும் புரிகின்றனர்.

ஆனால் அவர்களது மேலாதிக்கம், அழுத்தங்களோ பிரச்சினைக-ளோ இல்லாமல் வருவதில்லை. பால்நிலையும் மாறா நிலைத்தன்மை-யும் பெண்பிள்ளைகளினதும் பெண்களதும் தெரிவுகளை மட்டும் கட்டுப்படுத்துவதில்லை. ஆண்பிள்ளைகளினதும் ஆண்களதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுகளையும் கட்டுப்படுத்துகிறது. உணவு, உடை வழங்குவோராகவும் பாதுகாப்பாளாரகவும் இருக்கின்ற ஆண்பால் தன்மையின் முக்கிய குணவியல்பானது அவர்களுக்கு பாரிய அழுத்தங்களை ஏற்படுத்துகிறது. அதிகாரத்திலுள்ளவர்கள் எப்போதும் பயப்படுகின்றனர். தங்கள் அதிகாரத்தை தாம் இழந்துவிடுவோம் என்ற பயம். அவர்கள் சதா தமது அதிகாரத்தை காப்பாற்றுவதிலும் தாக்கப்படுவதைத் தவிர்ப்பதிலுமான அழுத்தத்தில் இருக்கின்றனர்.

சரா வைற் (Sarah White) சொல்வது போல் தந்தைவழி ஆதிக்க முறைமை என்கிற ஸ்தாபிக்கப்பட்ட படிமம் போலல்லாது, ஆண்நிலை இயல்பு என்பது நொய்தலான, தற்போதைக்கான, வென்றெடுத்து பின்னர் காக்கப்பட வேண்டிய சதா இழக்கப்பட்டுவிடும் என்ற பயத்தில் இருக்கின்ற ஒன்று. மனிதப் பருவம் என்பது தன்னில் தங்கியிருக்கின்றது போன்ற தோற்றந்தருவதாய், சுயமாய் இயங்குகின்றதாகத் தெரிவதில்லை. மாறாக, ஏளனம், வெட்கம், கீழ்மை நிலை அல்லது "மரியாதை குறைவான" பெண்பால் செயற்பாடு ஆகியவற்றின் தாக்குதலுக்கு இலக்காகுவதான ஆண்நிலை இயல்பு மிகச்சீர்கெட்டதாக மற்றவர்களின் மதிப்பீட்டில் தங்கியிருப்பதாய் உள்ளது.[18]

ஆண்களின் வகிபாகங்கள் என்பவை செயல்நிறைவேற்றம், சாதனை ஆகியவற்றைச் சுற்றி திட்டமிடப்பட்டவை. அவர்கள் வரையறுக்கப்படுவதோடு அவர்களின் தொழில், நிலைப்பாடு செயற்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தங்களையே வரையறுக்கின்றனர். இத்தகைய எதிர்பார்ப்புகளால் அவர்கள் தமது உணர்வு நிலையை அடக்குகின்றனர். கடுமையாக இருக்க முயல்கின்றனர். தமது உணர்வுகளை வெளிக்காட்டாது தமது தனிப்பட்ட அவாக்களையும் சந்தேகங்களையும் தமது நண்பர்களுக்கு எடுத்துச் சொல்லாது இருக்க முயல்கின்றனர். ஒருவகையில் இது ஆண்பிள்ளைகளுக்கும் ஆண்களுக்கும் "உணர்வுரீதியான நலம்எடுப்பதாக" அமைகிறது. அவர்கள் பலத்தினதும் கடுமையினதும் முகமூடியை அணியக் கட்டாயப்படுத்தப்பட்டு தமக்கே அந்நியர்களாகின்றனர். ஏனெனில் ஆண்கள் அதிகாரத்தோடும் அந்தஸ்தோடும் பிறந்தவர்கள். அவர்கள் அதைப் பாதுகாக்க கற்றுக்கொள்கின்றனர். அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்கள், அதைத்தக்க வைக்க விரும்புபவர்கள். தாங்கள் தாக்குப்பட அனுமதிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன் ஒக்லேயின் கருத்துப்படி ஆண்கள் குறிப்பாக சமூக அழுத்தங்களால் ஏற்படும் நோய்களால் தாக்குப்படுவதாகத் தெரிகிறது என்கிறார். மேலும் அவர், பெண்கள் தாம் இரண்டாம் தரப்பிரஜைகள் என்பதன் காரணமாக வருந்தினால், ஆண்கள் நிச்சயம் தமக்குள்ள அதிகப்படியான சலுகைகளினால் வருந்துகின்றனர் என்கிறார்.

*இன்றைய நவீன நாகரீக நிலையில் ஆண்பால் என்னும் வகிபாகத்தை கொண்டியங்குவது உடைந்து சரிகின்ற நிலையை எட்டிவிட்ட அடையாளங்களைக் காட்டுகிறது. இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இருந்ததைவிட சமூக அழுத்த நோய்கள் ஆண்களைக் கொல்லும் வீதம் இப்போது கூடியுள்ளது. 1900ல் 100,000 ஆண்களில் 177 ஆண்களும் 159 பெண்களும் அமெரிக்காவில் மாரடைப்பினால் இறந்தனர். 1953ல் இதன் எண்ணிக்கை 382ம் 225 ஆகும். 1900ல் வயிற்றுப்புண், சிறுகுடற்புண்-ஆகிய நோய்களால் 100,000 ஆண்களில் 3.2 வீதத்தினரும் 1953ல் 8.6 வீதத்தினரும் இறந்துள்ளனர். இத்தோடு தொடர்புபட்ட பெண்களின் இறப்புவீதம் 3.0ம் 1.9ம் ஆகும். ஆண்களைத் தாக்கிய குடற்புண் நோய் இரட்டித்துள்ளது. பெண்கள் இதன் தாக்கத்திற்குள்ளானது குறைந்துள்ளது. 1900ல் சாவுக்கு முக்கியமான காரணிகளாக மேற்கில் இயங்கியவை நிமோனியா, தடிமல், காய்ச்சல், இரைப்பை நோய், காசநோய் ஆகிய தொற்று நோய்களாகும். இப்போது இருதயநோயே சாவுக்கு முக்கிய காரணியாக இருக்கிறது.*[19]

## குற்றச்செயலும் ஆண்நிலை இயல்பும் தொடர்புபட்டுள்ளனவா?

ஆம். ஆவை தொடர்புபட்டுள்ளன. குற்றச்செயல், இளைஞர் புரியும் குற்றச்செயல்கள் ஆண்பால் குணவியல்பு ஆகியவற்றுக்கிடையே இருக்கும் தொடர்பை விளங்கிக்கொள்வது அவசியம். ஆண்நிலை இயல்பு பற்றிய கருத்து, ஆண்பிள்ளைகளும் ஆண்களும் தசைக்கட்டு, வீரியம், ஆகியவற்றில் உடல்ரீதியாக சுபர்மான், றம்போ போன்றவர்களைபோல் பலமுடையவர்களாக இருக்கவேண்டும் என்பதை ஊக்குவிக்கிறது. அது மேலும் ஆக்கிரமிப்பு, பிசாசுத்தன்மை, அடக்கியாளுதல் போன்றவற்றையும் ஊக்குவிக்கிறது. பலமுள்ளதே சரி என்ற ஒரு உலகில், உடல்ரீதியாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமுள்ள ஆண்கள் சிலர் மற்றவர்களைக் கட்டுப்படுத்தவும் பயமுறுத்த, சுரண்டிப் பயனடைய தமது உடலை ஆயுதங்களாகப் பாவிக்கின்றனர். உண்மையான ஆயுதங்களின் உதவியுடன் எல்லாவகையான வன்முறைக் குற்றச் செயல்பாடுகளில் ஈடுபடும் தெருச்சண்டியர் கூட்டம், பாதாள உலகத்தோர், குற்றச்செயல் குத்தகை எடுப்போர், ஆகிய ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றச்செயல்களுக்கு இந்நிலை ஒரு செய்முறையாக உள்ளது. ஒவ்வொரு நகர மையங்களிலும் பெரிய அல்லது சிறிய குற்றங்களான காசு பறித்தல், போதைவஸ்து, ஆயுதம் கடத்தல், பாலுறவு, காணிநிலம் சம்பந்தப்பட்ட வியாபாரம், அதிகாரம், களவு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சட்டத்திற்கு எதிரான பாதாள உலகினர் உள்ளனர்.

பெரியளவிலான வேலையில்லாமை, அந்நியப்படல், ஆகியவற்றோடு அடிப்படைச் சேவைகள், நலம் பேணல், நீதி ஆகியவற்றை செய்ய அரசு தவறியமை ஆகியன ஆண்களை குற்றவியல் வேலைகளில் ஈடுபட வைக்க நல்ல வளமான நிலைமையை உருவாக்கிற்று. நாட்டின் சட்டம் அவர்களுக்கு எதையும் செய்யாதபோது அவர்கள் கையில் சட்டத்தை எடுத்து, எந்தக் கௌரவத்தையும் உரிமைகளையும் எதிர்காலத்தையும் தராத சமூகத்தை திருப்பித் தாக்குகின்றனர். அனேகமாக அரசு, வர்க்கம், சாதி, இனக்கலவரம் ஆகியவற்றின் எதிர்விளைவாகவே வன்முறையான ஆண்நிலை இயல்பு மேலோங்குகிறது. இந்தவிதமான ஆண்நிலை இயல்பு அனேகமாக வறுமை, இன, மத, இனரீதியான ஒதுக்கல் அல்லது ஒடுக்குதல் பின்னணியில் வெடித்துக் கிளம்புவதையே "எதிர்ப்பு ஆண்நிலை இயல்பு"என்று அழைப்பர். இத்தகைய எதிர்ப்பு ஆண்நிலை இயல்பை எங்களைச் சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் ஹிந்தி சினிமாவிலும் காண்கிறோம். பாதிக்கப்பட்ட கீழ்மக்களுக்கு நீதியை வழங்கவே கோபங்கொண்ட இளம் ஆண்கள் சட்டத்தைத் தம்கையில் எடுக்கின்றனர்.

ஆன் ஒக்லே என்பவர் ஆண்நிலை இயல்புக்கும் குற்றச் செயலுக்குமுள்ள தொடர்பை பின்வருமாறு விபரிக்கின்றார்.

> *குற்றவியலும் ஆண்நிலை இயல்பும் இணைக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் அவை ஒவ்வொன்றோடும் சம்பந்தப்பட்டுள்ள செயல் யாவும் பொதுமையானவை. உடல் ரீதியான பலத்தை வெளிப்படுத்துதல், ஒரு வகையான ஆக்கிரமிப்பு சண்டை, சட்டரீதியானதோ அற்றதோ கண்ணுக்கு தெரியக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கூடிய, வெளிப்படையாக அத்தாட்சிப்படுத்தும் சாதனை ஆகிய இவை அனைத்தும் ஆணின் ஆளுமையைக் காட்டும் அதே-வேளை குற்றச்செயலுக்குரியவை. இந்தக் குணங்களுக்-காகவே ஆண்களும் குற்றச்செயல் புரிவோரும் அவரை ஒத்த-வயதினரால் கணிக்கப்படுகின்றனர். ஆகவே ஆணொருவனை-யும் குற்றச்செயல் புரிவோரையும் பிரிக்கும் கோடு சிலவேளை-களில் மிக மெல்லிதானதாகவே இருக்கிறது. அல்பேர்ட் கோஹென் (Albert Cohen) என்பவர் (Delinquent Boys) "குற்றச் செயலில் ஈடுபடும் ஆண்பிள்ளைகள் - கும்பல் கலாசாரம் "என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார். குற்றச்செயலில் ஈடுபடும் இளம் வயதினரும் குற்றம் புரியும் நடத்தையும் ஆண்நிலை இயல்பை உறுதிப்படுத்தும் முக்கியமான வெளிக்காட்டல்களாகும்.*[20]

**ஆண்நிலைவாதத்திற்கும் இராணுவவாதத்திற்குமுள்ள தொடர்பை தயவுசெய்து விளக்குக.**

ஆண்நிலைவாதத்திற்கும் இராணுவவாதத்திற்கும் இடையே பழையதும் மிக நெருங்கியதுமான தொடர்பு இருக்கிறது. இராணுவ-வாதம் என்பது ஒரு கோட்பாடு, அது ராணுவத்தின் பங்கை ஏற்றுக் கொண்டு முரண்பாடுகளைத் தீர்த்து வன்முறைப் பாவனையை சட்ட ரீதியாக்கி அதன்மூலம் சமூக அல்லது தனிப்பட்ட இலக்குகளை அடைவதை இலக்காகக் கொள்கிறது. இது மறுவளமாக ஆதிக்-கத்தை மேற்கொள்ளும் ஆண்நிலை தன்மையை மேலோங்க வைக்கிறது. இராணுவவாதம், தந்தைவழிச்சமுதாயம் ஆண்நிலை-வாதம் ஆகியவை எல்லாம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு ஒன்றையொன்று பலப்படுத்துகின்றன.

இராணுவப் பயிற்சி என்பது, இளைஞர்கள் தமக்குள் இருக்கும் "பெண்களைக்கொன்று "உண்மையான மனிதர்களை" ஆக்குகின்ற பயிற்சியாகும். பெண்ணிலைவாதப் பகுப்-பாளர்கள் ஆக்கிரமிப்பும் வன்முறையும் ஆண்பால்தன்மை கட்டமைப்போடு இணைக்-கப்பட்டு இராணுவவாதத்தோடு தொடர்பு-பட்டு இருக்கிறது என்பதைக் காட்டியுள்-ளனர். அவர்களைப் பொறுத்தவரை, இரா-ணுவச் சிந்தனையும் இராணுவப் பெறுமதி-களும் இயல்பில் ஆண்நிலை இயல்-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானவை. இன்னும் இருசாராரும் பெண்ணின்மேல் ஆண் மேலாண்மை செலுத்துவதை நம்புகின்றனர். ஆக்கிரமிப்பாளனின் படிமம் ஆணாகவும் அடக்கப்படுபவனின் படிமம் பெண்ணாகவும் இருக்கிறது.

பெண்ணிலைவாதத்தின் பகுப்பாய்வுகள், .எவ்வாறு பெண்களும் இராணுவச் சிந்தனைக்குள் இழுக்கப்படலாம் என்பதைக் காட்டியுள்ளன. "இலட்சியபூர்வமான"ராணுவச் சிப்பாயும் "இலட்சியபூர்வமான மனைவியும் தாயும்"ஒன்றையொன்று இட்டு நிரப்புகின்றனர். இருசாராரும் தமது வாழ்க்கையைத் தாய்நாட்டிற்காக தியாகம் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். இராணுவ ஆண்மைத்தனத்தின் அடுத்த முகந்தான் இராணுவ "பெண்மைத்தனம்." இராணுவத்தனமுடையை பெண், யுத்தத்திற்காக ஆண்வீரர்களை உண்டாக்குகிறாள். தேசத்தை பாதுகாக்கும் ஆண்வீரர்களை அவர்கள் பெருமைப்படுத்துகின்றனர். இந்தத் தாய்மார் தங்களுடைய மகன்மாரின் ஆண்நிலைவாதம் இராணுவவாதம் ஆகிய இரண்டுக்கும் ஆதரவு வழங்கி அதற்கு அர்ப்பணிக்கின்றனர்.

யுத்தத்தின் போதும் சமாதானத்தின்போதும் இராணுவ மயப்படுத்தல் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறமுடியும். பிள்ளைகளுக்கான (பிரதானமாக ஆண்பிள்ளைகளே பாவிக்கின்றனர்) விளையாட்டுப் பொருட்கள், வன்முறை மிக்க வீடியோ விளையாட்டுக்கள் என்பவை பல்கோடி டொலர் முதலிட்ட தொழில்களாகும். கால்பந்தாட்ட அரங்குகளில்யுத்தக் கூப்பாடே நியமம். ஆண்களும் ஆண்பிள்ளைகள் கூட்டமும் பெரிய அளவில் எந்தநேரமும் "யுத்தம் செய்த" வண்ணமே இருக்கின்றனர். எல்லா "புனித போர்வீரர்களும்"அவர்கள் கிறிஸ்தவர்களோ, முஸ்லிம்களோ, இந்துக்களோ அல்லது யூதர்களோ எவராயினும் ஆண்நிலைவாதம் இராணுவவாதம் ஆகிய இரண்டிலும் நம்பிக்கை வைத்து அதை முன்னெடுக்கவே பார்க்கின்றனர். தெற்காசியாவில் சமய அடிப்படை வாதத்தின் பரவல் சமயத்தின்பேரில் வன்முறை ஆண்நிலை இயல்பையும் வன்முறையையும் அதிகரித்துள்ளது. ஒரு பாகிஸ்தானிய பெண்ணியவாதியான நீலாம் ஹுசெயனின் (Neelam Hussain) கருத்துப்படி, அடிப்படை வாதந்தான் ஆண் ஒழுக்கவியலின் அதிதீவிர வடிவமாகும். அது எல்லா வித்தியாசமானவற்றினதும் "மற்றதா"யிருக்கும் எல்லாவற்றினதும் மறுப்பாகும். அடிப்படைவாதிகளின் கருத்துப்படி ஒரே பார்வை ஒரே செயலுருத்தோற்றம் ஒரே உண்மையே இருக்கிறது. முஸ்லிம் மதராஸும், ஹிந்தி அகதாஸு ஷக்ஹாஸும் வன்முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்நிலை இயல்புக்கே இடம்கொடுக்கின்றனர், உற்பத்தி செய்கின்றனர். அவர்கள் இளைஞர்களையும் ஆண்பிள்ளைகளையும் தனியான ஆண் உலகுக்கு எடுத்துச் செல்கின்றனர். இந்த ஆண்பிள்ளைகள்

## *ஆண்நிலை பெண்நிலை இயல்பும் பொருதலும்*

*ஒரு பொருதல் நிலவரத்தின்போது வர்க்கம், இனம், பாலியல் அல்லது சமயம் ஆகியவற்றோடு பின்னிப்பிணைந்துள்ள பால்நிலை, தீவிரமான சக்திமிக்க ஆயுதமாகும். ஒவ்வொரு சமூகத்திலும் எந்த நேரத்திலும் பல்வகையான வடிவங்களில் சமச்சீரற்ற அதிகார உறவுகளோடு ஆண்நிலை இயல்பும் பெண்நிலை இயல்பும் இருக்கின்றன. ஆண்நிலை, பெண்நில்ல இயல்பு பற்றிய முக்கிய கருத்து ஆழமான வேர்களைக் கொண்டது. அவை யுத்தம், பொருதல் பற்றிய எங்களது விளங்கிக் கொள்ளும் முறையை தமது அதிகாரத்துக்குட்படுத்துகிறது. நாங்கள் வெறுமனே ஆண் ராணுவப் போர்வீரர்களையும் பெண் அகதிகளையும் பார்க்கிறோம். எவ்வாறாயினும் எங்களுக்குத் தெரியும் ஒவ்வொரு யுத்தத்திலும் போர்வீரர்களாக இருப்பதற்கு தீவிரமாக மறுக்கும் ஆண்கள் இருக்கிறார்கள். அவ்வாறே அகதிகளாக மாறும் அனேக பெண்களுக்கு வேறெந்த தெரிவும் இல்லாதிருக்கிறது. அவர்களுக்கு யுத்தம் பற்றிய அறிவு, அதன் உள்கட்டுமானம், தொழில்நுட்பம் ஆகியவை அரிதாகவே கொடுக்கப்படுகிறது. இதுதான் ஆண்களை போர்வீரர்களாகவும் பெண்களையும் பலி பொருட்களாகவும் உற்பத்தி செய்கின்ற ஆண்நிலை இயல்பின் - பெண்நிலை இயல்பினது அல்ல - அத்தியாவசியமானதான போர்வீரர் மயப்படுத்தும் சமூகக்கட்டமைப்பாகும். நாங்கள் வளர்ந்த, கற்றுக்கொண்ட எங்கள் சமூகச்சூழலில் பெண்நிலை இயல்பு பற்றிய முக்கிய கருத்து, போர்வீரர் மயப்படுத்துவதோடு பெண்களையும் பெண்நிலை இயல்பையும் சம்பந்தப்படுத்தியதில்லை.*

*பொதுவாக, யுத்தகாலப் பின்னணியில் மரபுரீதியாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் வழங்கப்பட்ட வகிப்பாகங்களே மீளாக்கம் செய்யப்படுவதோடு மீள்வலுப்படுத்தவும்படுகிறது போல் தெரிகிறது. ஆண்கள் வீரர்களாக அல்லது வீரப்பலிப் பொருட்களாக காணப்படுவதோடு பெண்கள் மறைமுகமான பலிப்பொருட்களாகவும் தமது கணவன்மாரையும், ஆண்பிள்ளைகளையும் ஆதரிக்க வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர்.*

*Dubravka Zarkov*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மற்றவர்களை" வெறுக்கும் ஒரே வகையான கருத்தூன்றலில் வளர்கின்றனர். இத்தகைய ஆண்பாலரின் "ஒதுக்குகளில்" பெண்கள் "மற்றவர்களாகவும்" தாழ்ந்தவர்களாகவும் பார்க்கப்படுகின்றனர். பெண்கள் சமமான கூட்டாளிகளாக கருதப்படுவதில்லை. அடிப்படை-வாதங்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆண்நிலை இயல்புக்கும் பெண்நிலை இயல்புக்கும் இடையே உள்ள வித்தியாசப்படுத்தலையும் படிமுறை நிலையையும் ஆழமாக்கியுள்ளன. அத்தோடு ஆண்வழிச் சமூகம், இராணுவவாதம், சமய அடிப்படைவாதம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த ஆற்றல் பெண்களுக்கான இடைவெளிகளையும் தெரிவுகளையும் தந்தைவழிச்சமூக கோட்பாட்டையும் கட்டுப்பாட்-டையும் பலப்படுத்துவதன் மூலம் வெகுவாகக் குறைத்துள்ளன.

*வன்முறை, இராணுவவாதம், தந்தைவழிச்சமூகம் ஆகியவற்றுக்-கிடையே நெருங்கிய தொடர்பு இருக்குமானால், "அடிப்படை-வாதம்"என ஒரளவு பிழையாக தெரியப்படுவதற்கும் அந்த புனித-மற்ற முக்கூட்டுக்குமிடையே அதேயளவு சமமான பலம்பொருந்-திய இணைப்பு இருக்கிறது. கொள்கைகள் தேசியங்கள், வறிய-வர், பணக்காரர் என்பவற்றை ஊடறுத்துச் செல்லும் சமய அடிப்படைவாதிகள் உட்பட்ட சமூகத்திற்குள்ளே இருக்கும் பிற்போக்குச் சக்திகளால் முதலில் குறைக்கப்படப்போபவை பெண்களின் உரிமைகளே.*

*உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வகையான அடிப்படைவாதங்-களுக்கு எதிராக பெண்கள் இயக்கங்கள் போராடிய வரலாறு ஒரு வெறும் விபத்தல்ல. பெண்ணிலைவாதிகள், பல்வகையான அடிப்-படைவாத வடிவங்களால் முன்னெடுக்கப்பட்ட அடையாளத்தின் அரசியலை கண்டித்துள்ளனர். இவை பிரித்தாளும் மூலோ பாயங்களை அடிப்படையாக கொண்டிருந்ததால், இத்தகைய பிற்போக்கு கோட்பாடுகளுடன் இணைவதன் மூலம் பெண்கள் லாபம் பெறுவதைவிட அதிகமாக இழக்கவே வேண்டிவரும்.*[21]

- Ammu Joseph & Kalpana Sharma

பெண்ணிலைவாதிகளுக்கு இவையனைத்தும் மேலாதிக்க ஆண்-நிலை தன்மையினதும் ராணுவமயப்படுத்தப்பட்ட மனதினதும் வெவ்-வேறு அம்சங்களாகும். நாங்கள் வீட்டு வன்முறைக்கும் பொது இடங்-களில் இடம்பெறும் வன்முறைக்கும் இடையேயும் வீடு, வீதி, போர்க்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களங்களில் இடம்பெறும் வன்முறைக்கும் இடையேயும் நேரடித்தொடர்பு இருப்பதை காண்கிறோம். பாகிஸ்தானிய பெண்ணிலைவாதியான றுபினா சாய்கல் (Rubina Saigol) பின்வருமாறு கூறுகிறார்.



*சதா மட்டுப்படுத்தப்பட்ட யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற அல்லது முழு அளவிலான யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற சமூகங்கள் ஆண்நிலை இயல்பு கலாசாரத்திற்கு மித மிஞ்சிய அழுத்தம் கொடுக்கவும் "பெண்நிலை இயல்பு" என்கிற ஏனைய அனைத்தையும் கீழ்மைப்படுத்தவும் செய்கின்றன. எல்லாருக்கும் நன்கு தெரியும் அத்தகைய சமூகங்கள், உடல் வீரியம், சண்டையிடும் திறன், தியாகம், வீரத்தன்மை, ஆண்மை அதாவது வழமையாக அதனோடு சம்பந்தப்படுத்தப்படும் பெறுமதிகள் அனைத்தையும் புகழ்ந்தேற்றுகின்றன. அதேவேளை சமாதானம், அமைதி, மென் போக்கு, உரையாடல் - அதாவது பெண்ணோடு அனேகமாக சம்பந்தப்படும் அனைத்தும் கீழ்மைப்படுத்தப்படுகின்றன. இவற்றில் எவையும் உண்மையில் ஆணினதோ, பெண்ணினதோ பண்பாக இல்லாதிருக்கும் அதே நேரத்தில், யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் சமூகங்கள் ஆண்/ பெண் என்ற தடத்தில் பெறுமதிகளை (Values) பிரித்து, போரிடும் குணக்கூறுகளை ஆணுக்கும் பலவீனம், பயம் ஆகியவற்றை பெண்களுக்கும் கொடுக்கும் ஒரு போக்கைக் கொண்டுள்ளன. தீவிர பால்நிலைப் படுத்தப்பட்ட யுத்தத்தொழில் பிரிவு பெண்கள் இயல்பாகவே "பலவீனமானவர்கள்" சமூகத்திற்கு பெறுமதி குறைந்தவர்கள் ஏனெனில் அவர்களால் சண்டை செய்ய முடியாது என்பதை வலியுறுத்துகிறது.*[22]

## யுத்தத்திற்கு எதிர்காலம் இல்லை. சமாதானமே எதிர்காலம்

நீங்களும் சொல்லுவீர்களா, இன்றைய பொருளியல் முறைகளுக்கும் ஆண்நிலைவாதம் ஆண்நிலை இயல்பு ஆகியவற்றுக்குமிடையே தொடர்பு இருக்கிறதென்று?

ஆம், எங்களுடைய அபிப்பிராயப்படி மேற்குறித்த விஷயங்களுக்கிடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இன்றைய பொருளியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமை போட்டியை, பேரார்வத்தை, சாதனையை முன்னெடுத்து தீவிரப்படுத்துகிறது. ஆகவே ஆண்நிலைவாதம் முதலாளித்துவத்தின் ஒழுக்க நிலைக்கு தன்னையே மிக அழகாகா அர்ப்பணிக்கிறது.

தொழில்புரட்சிக்கு முன்னர் உற்பத்தி என்பது வீடுகளில் இடம்பெற்றபோது பெண்களே அதன் மையமாய் இருந்தனர். அவர்களுடைய அறிவு, உழைப்பு, முகாமைத்துவத்திறன் ஆண்களுடையதைப்

பெண்கள் ஆயுதங்கள் செய்து ராணுவத்துக்கு உதவியளித்திருந்தபோதும் - அணு ஆயுதங்களையே அதேயளவு குறி வைக்கப்படும் இன்றைய காலத்தில் - வரலாற்று ரீதியாக பெண்கள் போரில் ஈடுபட்டது குறைவே. உலகில் உள்ள 30 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட போர்ப்படையில் பெருமளவிலானவர்கள் ஆண்களே. அனேக நாடுகளில் எல்லா போர்வீரர்களும் ஆண்களே. இன்னும் பெண்களை ராணுவத்திற்கு அனுமதிக்கும் நாடுகளின் அனேகமான தளபதிமார் விசேடமாக ஆண்களே. மேலும் நடைமுறைப்படுத்தலுக்குரிய ஏனைய தொழிற் துறைகளிலும் ஆண்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். உதாரணமாக பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை காவலர்கள் என்கிற அரச உத்தியோகங்களிலும் சரி கூட்டுத்தாபனங்களில் உள்ள பாதுகாப்பு வழங்கும் முகவர் உத்தியோகங்களிலும் சரி ஆண்களே உள்ளனர்.

தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஆண்கள் ஆயுததாரிகளாகவோ வன்முறையாளர்களாகவோ இருப்பது சாத்தியம். அமெரிக்காவில் குற்றவியல் ஆய்வாளர்களின் (சிமித் - சிமித் Smith & Smith) கவனமான ஆய்வின்படி துவக்குச் தொழிற்சாலை பெண்களை துவக்குகளை வாங்கும்படி ஊக்குவித்தும் ஆண்கள் நான்கு மடங்கு பெண்கள் துவக்கு வைத்திருப்பதிலும் பார்க்க கூடுதலாக வைத்திருக்கின்றனர். (1980 லிருந்து 1994வரை அமெரிக்கர்கள் சராசரியாக 40 வீதம் சொந்தமாக துவக்குகள் வைத்திருக்கின்றனர்) இதே நாட்டில் 1993ன் உத்தியோக ரீதியான புள்ளி விபரப்படி ஆண்கள் 91 வீதமான கொலைகளுக்கும் 84 வீதமான தாக்குதலுக்கான கைதுகளுக்கும் இலக்காகியுள்ளனர். (நீதி திணைக்களம் 1994) அவுஸ்திரேலியாவில் 1992-3 வரை 90 வீதமான ஆண்களுக்கு கொலைக்குற்றத்திற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டன. (அவுஸ்திரேலியா குற்றவியல் அமைப்பு 1995) இந்த எண்ணிக்கைகள் புறநடையானவையல்ல.[23]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே மிக அத்தியாவசியமாக இருந்தது. தொழில்புரட்சி குடும்பத்தை வெளியுலக பொருளாதார உலகிலிருந்து பிரித்தது, இந்தப் பிரிவு பெண்களை ஓரங்கட்டியது. "புதிய யுகத்தின் எழுந்து கொண்டிருக்கும் உலகப் பார்வையானது உண்மையில் மிகத் தெளிவாகவே ஆணுக்குரியதெனலாம். இது சந்தை, பொருளாதார ராஜ்ஜியம் அல்லது பொதுவாழ்க்கை ஆகியவற்றிலிருந்து தொடர்ந்து வரும் உலகப்பார்வையாகும். இது இயல்பாகவே பெண்களுக்கு புறம்பானது. அவர்களை மற்றவர்களாக அல்லது அந்நியர்களாக பார்க்க வைக்கக்கூடியது."(24)

சந்தையை மையப்படுத்தும் முதலாளித்துவ உல்கில் பெண் என்பவள் "மற்றவள்" "ஓரங்கட்டப்பட்டவள்" மட்டுமல்ல அவள் தாழ்மைப்பட்டவ-களாவும் இருக்கிறாள்.

*ஆண்ணிலை நோக்கத்திலிருந்து பெண் என்பவள் ஆணின் மிகப் பண்டைய வடிவமே. இதற்கான உண்மையான அத்தாட்சி இருப்-பதால் இப்படி அவள் கொள்ளப்படவில்லை. மாறாக அவளுடைய அன்புகாட்டும், கொடுக்கும் இயல்புக்காகவே. இந்தப் பண்பே அவளின் புத்திக்குறைவுக்கு அத்தாட்சியாக காட்டப்படுகிறது. றூசோவுடைய மேன்மைக்குரிய காட்டுமிராண்டி, அவருடைய இலட்சியபூர்வமான பெண்ணைப்போலவே ஜீவகாருண்யமும் பராமரிப்பும்மிக்கவன். டார்வின் பின்வருமாறு கூறுகிறார்: "பெண் என்பவள் ஆணின் மன அமைப்பிலிருந்து, அவளுடைய மென்-தன்மையாலும் சுயநலமின்மையாலும் வித்தியாசப்படுகிறாள் என்று தெரிகிறது. உள்ளுணர்வு ஆற்றல், வேகமான உள்வாங்கல், இன்னும் அபிநயித்தல் ஆகியவை ஆண்களிடம் இருப்பதைவிட பெண்களிடம் மிகவலுவுடையதாக இருப்பதாக பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் இவற்றில் சில குணவியல்புகள், சிறிதளவாவது கீழான இனங்களின் பண்புகளாகக் கொள்ளப்-படுவதால் இது பண்டைய காலத்தினதும் கீழ்நிலை நாகரிகத்துக்-குரியதாகவும் கொள்ளப்படுகிறது.(25)*

இன்றைய வலதுசாரி பொருளாதார அரசியல் அமைப்பு முறைகளில் ஆண்நிலைவாதம் மேலோங்கி வருவது மிகவும் சாத்தியமாக உள்ளது. இந்த அமைப்பில் தம்மை தக்க வைப்பதற்கு ஆண்கள் "கொலைச் சுபாவத்தை"வளர்த்தெடுக்க, "பொருளாதாரப் போராளி-களாக" மாற ஊக்குவிக்கப்படுகிறார்கள். இவ்வகையான பொருளா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார முறைகளுக்கு பிள்ளைகளைப் பயிற்றுவிக்க, ஆரம்பத்திலிருந்தே பாடசாலைகள் போட்டி போடுதலைப் படிப்பிக்கின்றன. பகிர்ந்தளித்தல், கூட்டுறவாய் வாழ்தல் என்பவற்றைவிட எல்லாச் செயற்பாடுகளிலும் - அதாவது விளையாட்டு, கலாச்சாரம், கல்விச்செயற்பாடுகள் ஆகியவற்றில் - போட்டிபோடுதலே ஊக்குவிக்கப்படுகிறது. ஒருவனை உயர்த்துதல் என்கிற இந்த தொற்றுநோய்க் கிருமி "நல்ல"பாடசாலைகளிலெல்லாம் ஒரு தொற்றுநோயை ஏற்கனவே பரப்பிடக் காரணமாய் இருந்துள்ளது. தனிமனிதவாதமே எங்கும் குடும்பங்களுக்குள்ளும் ஒரு மந்திரமாக மாறியுள்ளது. தனிமனிதவாதமே போட்டி, ஆக்கிரமிப்பு, தன்மையைப்படுத்தல், தன்னை வளப்படுத்துதல், நாயை நாய் சாப்பிடுதல் ஆகிய மனப்பான்மைக்கு இட்டுச்செல்கிறது. முதன்மையாக நிற்பவன், மற்றவனை விட பிரகாசிப்பவன், மிடுக்குடையவன் ஆகியோரே பகிர்ந்தளிப்பவன், உதவுபவன், சமூகக் கூட்டுவாழ்க்கையை கட்டியெழுப்புபவனை விட பெரிய வீரனாகப் பார்க்கப்படுகிறான். இன்றைய பொருளாதார உலகம் பலமும் வெற்றியும் உடையவனுக்கே வெகுமதி அளிக்கிறது.

*இன்றைய கோள மயப்படுத்தப்பட்ட உலகில் ஆண்நிலை இயல்பும் கோள மயப்படுத்தப்படுகிறது. MNCS யின் கூட்டுக் கலாச்சாரம் ஆண்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அது மிகவும் ஆண்நிலை இயல்புக்குரியதாய் உள்ளது. ஆர். டபிள்யு. கொணல் (R.W. Connell) பின்வருமாறு கூறுகிறார்: "புதிய உலக ஒழுங்கில் மேலோங்கிய வடிவ ஆண்நிலை இயல்பு என்பது உலகச் சந்தையில் செயல்படும் வியாபார செயலாட்சித் தலைவரின் பால் நிலைச் செயற்பாடாகும். இன்னும் இவற்றோடு ஊடாடி இவற்றோடு பல சந்தர்ப்பங்களில் இணைந்துவிடும் அரசியல் செயலாட்சித் தலைவர்கள், ராணுவ தலைமைத்துவம் என்பவையும் அடங்கும். இதை நான் நாடுகளுடே காணப்படும் வியர்பார ஆண்நிலை இயல்பு என்பேன். நாடுகளுடே காணப்படும் ஆண் நிலை இயல்பு என்பது அதிகரித்துவரும் தன் முனைப்பு (கூட்டுத்தாபனத்திற்கும் கூட) நிபந்தனையுடனான விசுவாசங்கள், மற்றவர்களையிட்டு (சுயபிம்பத்தை கட்டியெழுப்பும் காரணங்கள் தவிர்ந்த) எந்தவித பொறுப்புமின்மை ஆகியவற்றால் குறிக்கப்படுவதாகும். அது கட்டுப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப (முகாமைத்துவ) அறிவினால் விளக்கப்படுகிறது. அது அதிகளவு விஞ்ஞானத்திலிருந்து வேறுபடுகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்தோடு தாராள பாலியலில் ஈடுபடுதலின் அதிகரிப்பானது பெண்களுடனான உறவை பண்டமயப்படுத்துகின்ற வளர்ச்சிதன்மைக்கு இட்டுச் சென்று இன்று ஆபாசக்காட்சிகளாக வெளிப்படுத்தப்படுகிறது. பொதுவாக இவை வர்த்தகர்களின் ஹோட்டல்களிலும் பாலியல் வியாபார உல்லாசப் பயணத் தொழிலிலும் வழங்கப்படுகிறது. சர்வதேச அரசியலும் நாடுகளுடே காணப்படும் வியாபாரமும் இன்னும் ஆண்களாலேயே மேலாளப்படுவதோடு கலாச்-சார ரீதியாகவும் ஆண்பாலருக்குரியதாக காட்டப்படுகிறது.*[26]



இன்றைய பொருளாதார முறையில் முன்னுக்கு நிற்பவை உயிரியல் ஆண்களல்ல, மாறாக மேலாட்சி செய்கிற ஆண்நிலை இயல்பும் ஆண்நிலைவாதமுமே. யாருக்கு அதிகாரத்தை கையிலெடுத்து தமது ஏற்றத்துக்கும் தமது உற்பத்தி பொருட்களின் முன்னேற்றத்திற்கும் கோட்பாட்டுக்கும் அதைப்பாவிக்க முடியுமோ அவர்களே வியக்கப்படு-கின்றனர். இந்தப் பொருளாதார நம்பிக்கையில், லாபமே கடவுள், சுதந்திர சந்தைக்குள் பிரவேசித்தலே வழிபாடாகும். அவர்கள் உமக்கு ஒப்பந்தங்கள், சந்தைகள், முதலீட்டாளர்கள், உத்தியோகம் ஆகியவற்றைத் தந்தால் பொய்கள், பொய்க்கணக்கு வைப்புகள், லஞ்சம், ஊழல் ஆகியவை அனைத்தும் சட்ட ரீதியானவையாகின்றன. கூட்டான குற்றங்கள் எல்லாம் மலிந்துவிடுகின்றன. அண்மைக்கால (Enron) என்றோன், வேர்ல்ட்டுகாம் (World com) செறொக்ஸ் (Xerox) மோசடிகள் யாவும் பனிப்பாறையின் வெறும் முனைகளே.

பொருளாதார யுத்தங்கள் அரசியல் யுத்தங்களாக வெடித்துச் சிதறுகின்றன. அங்கு பொருளாதார ஆக்கிரமிப்புக்காக மற்றவர்-களை சூறையாடுதல், அவர்கள் மேல் மேற்கொள்ளப்படும் இராணுவத் தாக்குதலை நியாயப்படுத்துகிறது.

இராணுவ ஆற்றலே பொருளாதார ஆற்றலை பெறவும் பாதுகாக்கவும் ஒரு கருவியாக அமைகிறது. ஆப்கானிஸ்தான், ஈராக், பலஸ்தீனம் ஆகிய நாடுகள் மேல் அமெரிக்கா, இஸ்ரேல் அரசாங்கங்கள் மேற்கொண்ட தாக்குதல்கள் இதற்கு உதாரணமாகும். அனேகமான ஆய்வாளர்கள், உலகிலேயே பெரிய பயங்கரவாதி அமெரிக்கா தான் என நம்புகின்றனர். காரணம் அதனால் மேற்கொள்ளப்பட்ட எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தமும் அதனது பொருளாதார நோக்குகளை பாதுகாக்கவும் முன்னெடுக்கவும் செய்யப்பட்டதே. "புஷ்வயப்பட்ட"சிந்தனை ஆண்பால் சிந்தனை - அதாவது பேச்சில்லை, பேச்சுவார்த்தை இல்லை, சும்மா போய் குண்டுகளை போடு, "எதிரியை உயிருடனோ சாகடித்தோ கொண்டுவா." இஸ்ராலும் இதையே செய்கிறது. இந்தியாவில் வலதுசாரி இந்து இதையே செய்கிறார். முஸ்லிம் அடிப்படைவாதிகள் இதையே செய்து கொண்டிருக்கின்றனர். அதிகாரம் உள்ளவர்கள், அதிகாரத்திலேயே தம்மை நிலைப்படுத்த விரும்புபவர்கள் தமது பேச்சுக்களை துவக்குகளாலும் குண்டுகளாலுமே செய்கின்றனர்.

இந்த மாதிரியான அமைப்பு முறையில் கறுப்பர்கள், தலித்துக்கள், மூன்றாம் உலகு, வயது போனவர்கள், பெண்கள் ஆகிய வரலாற்று ரீதியான, கட்டமைப்பு ரீதியான காரணங்களால் பலவீனப்பட்டவர்களுக்கு சிறிய இடமே கிடைக்கிறது அல்லது சிறிய அளவிலேயே உள்வாங்கப்படுகின்றனர். அவர்கள் அனுதாபம், தானம், நலம்பேணல் போன்றவற்றுக்குரிய பொருட்களேயன்றி அவர்கள் இலக்குகளை அமைப்பதற்கோ தீர்வுகள் எடுப்பதற்கோ உரிய கூட்டாளிகள் அல்லர். அவர்கள் தள்ளி வைக்கப்பட வேண்டியவர்களாகவே கருதப்படுகின்றனர்.

**இத்தகைய பொருளாதார. அரசியல் முறைமையானது பெண்களையும் ஏற்புடைய "பெண்பால்" குணங்களையும் மட்டுந்தான் ஓரங்கட்டுமென சொல்கிறீர்களா?**

**ஆ**ம், இது தான் நடந்து கொண்டிருப்பதாக தெரிகிறது. ஒவ்வொருவரும் பேரவா உடையவர்களாக போட்டி போடுபவர்களாக இருக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். போட்டி போடலுக்கு தன்முனைப்பு ஆக்கிரமிப்புத்தன்மை இன்னும் வீறாப்புக்குணம் ஆகியவை தேவைப்படுகிறது. இந்தவகையில் இன்றைய அபிவிருத்தி முறையானது கூட்டுவாழ்க்கைக்கும் சமாதானத்திற்கும் தேவையான குணங்களான பராமரிப்பு, ஒருவருக்கொருவர் உதவியாய் இருத்தல் ஆகியவற்றிலிருந்து உலகை அப்பால் தள்ளிக்கொண்டு போகிறது. பேரவாவும் போட்டியும் கொடுமையான வறுமை, துன்பம், சுற்றுச்சூழலை நாசமாக்குதல் பயங்கர யுத்தம், பொருதல் இன்னும் சமூக வாழ்க்கையை அழித்தல் ஆகியவற்றின் மத்தியில் உலகில் அசமத்துவத்தையும் வீணான அளவுக்கதிகமான நுகர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌதம புத்தரின் வாழ்க்கையிலிருந்து வரும் இக்கதையை நான் நம்புகிறேன். இது ஆண்பால் பெண்பாலுக்கிடையிலான சண்டையைக் காட்டுகிறது.

ஒருநாள் இளவரசன் சித்தார்த்தன் தன்னுடைய அரண்மனையின் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென ஒரு வெள்ளைப் பறவை வானிலிருந்து விழுந்தது. அதனுடைய மார்பை அம்பு துளைத்திருந்தது. இளவரசன் பறவையை எடுத்து அதில் தைத்திருந்த அம்பை எடுத்துவிட்டு பறவையை மீட்டெடுக்க முனைந்தார். அப்பொழுது அவருடைய உறவினரான தேவதத்தன் அங்கே வந்து "என்னுடைய பறவையைத்தா" என்றான். "இது எப்படி உன்னுடைய பறவையாகும்"என்று சித்தார்த்தன் கேட்டார், தேவதத்தன் அதற்கு "ஏனென்றால் அதை நானே என்னுடைய அம்பினால் அடித்து வீழ்த்தினேன்"என்றான். அதற்கு சித்தாத்தர் "இது உன்னுடைய பறவையாகாது, ஏனென்றால் நீ அதைக் கொல்ல விரும்பினாய். அது எனக்கே சொந்தமானது. ஏனெனில் நான் அதற்கு அன்பு செலுத்துகிறேன்" என்றார்.

எங்களுக்கு இக்கதை வன்முறை மூலம் கட்டுப்பாடுகள் போடுவோருக்கும் பராமரித்து குணப்படுத்த விரும்புவோருக்கும் வளங்களையெல்லாம் வன்முறை மூலம் தமதாக்கிக் கொள்வோருக்கும் ஒருவரில் ஒருவர் தங்கியிருப்பதிலும் உடனிருந்து வாழ்வதிலும் நம்பிக்கை வைப்போருக்குமிடையே ஏற்படும் பொருதலை குறியீடாக கொண்டிருப்பதையே காட்டுகிறது.

***இந்தியாவில் வளர்ந்து வரும் ஆண்நிலைவாதத்திற்கும் அதிகரித்துவரும் பெண்களுக்கெதிரான வன்முறைக்கும் குறைந்து வரும் ஆண் — பெண் வீதத்திற்கும் தொடர்பு இருப்பதாக கருதுகிறீர்களா?***

இந்தத் தொடர்பை நிருபிப்பது கடினம். ஆயினும் இவை இருக்கின்றனவா என்பதைப் பார்ப்பது நிச்சயமாக அவசியம். தெற்காசியாவில் அண்மைக்காலமாக குறைந்துவரும் ஆணுக்கான பெண்களின் வீதம் பற்றி அதிக அக்கறை காட்டப்பட்டு வருகிறது. பெண்பிள்ளைகளும் பெண்களும் எங்கள் சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டு அதிகாரம் குறைக்கப்பட்டு மட்டும் இருக்கவில்லை. லட்சக்கணக்கானோர் தப்பிப் பிழைத்திருக்க கூட அனுமதிக்கப்படுவதில்லை. பத்து வருடங்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு முன்னர் 10 கோடி பெண்கள் குறிப்பாக தெற்காசியாவிலும் சீனாவிலும் காணாமல் போயுள்ளனர் என்று (Amartya Sen) அமர்தியா சென் என்பவர் எழுதினார். இந்தியாவில் மட்டும் இருக்கவேண்டிய பெண்பிள்ளைகளில் 36 மில்லியன் குறைவாகவே இருக்கிறது. 1901ல் இந்தியாவில் 1000 ஆண்களுக்கு 975 பெண்களே இருந்தனர். நூறு வருடங்களுக்குப் பின்னர், 1000 ஆண்களுக்கு 930 பெண்களே இருக்கின்றனர். இன்றைய இந்தியா 1901ல் இருந்ததைவிட எவ்வளவோ கல்வியிலும் அபிவிருத்தியிலும் மேலானதாக இருக்கிறது. அப்படியானால் இதிலிருந்து எழும் கேள்விகளாவன - இன்றைய கல்விமுறையும் அபிவிருத்தியும் அதிகரித்துவரும் பாதுகாப்பின்மையும் வன்முறையும் ஏதோ விதத்தில் பெண்பிள்ளைகளினதும் பெண்களது சாவுக்கும் இட்டுச் செல்கின்றவா? பலவீனமான பால்பிரிவினர் தேவையில்லையா? ஏனெனில் எங்களுடைய சுதந்திர சந்தைக் காட்டில் ஆண்களைப் போல் அவர்களால் போட்டிபோட முடியாது என்பதனாலா? பெண்கள் ஒரு சுமையாகக் கருதப்படுகின்றனரா? காரணம், முதலாளித்துவ மயப்படுத்தப்பட்ட உற்பத்தியில் பெரியளவு அசமத்துவம் நிலவும் பொருளாதாரத்தில் அவர்களின் பங்குபற்றல் அற்பமானது என்பதாலா? அவர்கள் விருப்பத்திற்குரியவர்கள் அல்ல ஏனெனில் அவர்கள் ஒரு பொருளாதாரச் சுமை? அப்படியா?



என்னைப் பொறுத்தளவில் பணமும் சந்தையும் முதல் இடத்தைப் பெற்று தந்தைவழிச் சமூகம் பலமாக இருக்கும்போது பெண்கள் மேலும் மேலும் ஓரங்கட்டப்படுகின்றனர். மணமகளின் விலையை சீதனமே தனதாக்கிக் கொள்ளும் சமூகங்கள் உள்ள சேலம் மாவட்டம், தமிழ் நாட்டில் சிசுக்கொலை பெரியளவு உள்ளது என்பதற்குச் சான்றாய் உள்ளது. ஹர்யானா பஞ்சாப் ஆகிய மிகவும் அபிவிருத்தியடைந்த இந்த இரண்டு மாநிலங்களிலும் பால்நிலைப்பிரிவு வீதம் தேசிய சராசரி வீதத்தோடு பார்க்கும்போது மிகவும் குறைவாகவே உள்ளது.

பஞ்சாப்பில் நடத்திய ஆண்நிலை இயல்பு வன்முறை பற்றிய ஆய்வில் பின்வரும் தொடர்புகள் காட்டப்படுகின்றன. "நிலமே சமூக வாழ்க்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கு மையமாக இருப்பதால், அதன் பொருளாதார பெறுமதியோடு அதிகாரம் என்ற பெறுமதியைக் கொண்டுள்ளது. இந்த செல்வத்தின் உரித்தாளரான ஆண்பிள்ளை பெறுமதிக்குரியவராகிறான். நிலத்தைப்போலவே அவன் அந்தஸ்தின் குறியீடாகிறான். 60களின் நடுப்பகுதியில் பசுமைப்புரட்சியின் எழுச்சியோடு நிலத்தின் பெறுமதி கூடியதோடு அதனால் ஆண்பிள்ளையின் குறியீட்டு அந்தஸ்தும் கூடியது. ஆண்பிள்ளைக்கான விருப்பானது விவசாயச் சமூகங்களின் ஆண்பால் விகிதத்தில் பிரதிபலிக்கப்படுகிறது."[27]

இனக்குழுக்கள் வாழும் மாவட்டங்களில் பெண்பால் ஆண்பால் விகிதங்கள் கூடுதலாக உள்ளதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. காரணம் இனக்குழுக்களிடையே ஆண் - பெண் இருபாலரும் உற்பத்தியாளர்களாகவும், வேலை பார்ப்போராகவும் இருக்கின்றனர். அவர்கள் சுதந்தரமானவர்கள். அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கின்றனர். அனேகமான உள்ளூர்வாசிகள் பற்றிய ஆய்வுகள் அவர்கள் அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்தும் வன்முறை, ஆக்கிரமிப்பு, பால்ரீதியான பாரபட்சம் ஆகியவற்றில் மிகவும் மிதமான போக்குடையவர்களாகவே இருந்து வருகிறார்கள் என்று காட்டுகிறது. ஏனெனில் அவர்களது உற்பத்தியும் சீவிய முறைமையும் போட்டியை விட கூட்டுறவையே கோரி நிற்கிறது.

தனிமைப்படுத்துதல், பெண்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல் பாலியல்தன்மை, பால்ரீதியான பிரிவுகள் ஆகியவை இனக்குழுக்களிடையே குறைவாகவே காணப்படுகிறது.

அமர்தியா சென் (Amartya Sen) ஜீன் ட்றீஸ் (Jean Dreze) ஆகியோரின் கருத்துப்படி மிகவும் கெட்ட பால்நிலை நடைமுறைகளும் அதன் புள்ளி விபரங்களும் இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள மிகவும் கொடூரமான தந்தைவழிச் சமூக மரபைக் கொண்ட போர்குணம் மிக்க சாதிகளிலேயே காணப்படுகிறது. பெண் சிசுக்கொலை, சிறுபிள்ளை திருமணம், தனிமைப்படுத்தல், சீதனம் உடன்கட்டை ஏறுதல் பலதாரமணம் ஆகிய அனைத்தும் இந்த சாதி மக்களால் கடைப்பிடிக்கப்படுவதோடு இன்றும் ஒரு பொது வழக்கமாகவே இவை அங்கு நிலவுகின்றன.

2002ல் குஜராத்தில் முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதலின் பின்னர், கொள்ளையிடல், முஸ்லிம் வீடுகளுக்கும் வியாபார நிலைகளுக்கும் தீ வைப்பு, முஸ்லிம் பெண்களில் பாலியல் வன்புணர்வு ஆகியவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக முஸ்லிம் பெற்றார் தமது மகள்மாருக்கு காலத்துக்கு முந்திய திருமணங்களுக்கு ஒழுங்குபடுத்தினர். சீதனத்துக்கான கோரிக்கை அதிகரித்தது. இதற்குரிய காரணம் மணமகன் குடும்பத்தினருக்கு புனர்நிர்மாணம் செய்யப் பணம் தேவைப்பட்டது. அதை பெண்ணுடைய பெற்றாரே கொடுக்க வேண்டும். இத்தகைய பின்னணியில், இனிப் பெற்றாராகப் போவோர், தேர்வுமுறையில் பெண் பிள்ளைகளை தவிர்ப்பதற்கான கருச்சிதைவுகளை மேற்கொள்வார்கள் என்று நம்புவதில் என்ன கஷ்டம்? 6 வயதுடைய ஆண்-பெண் பிள்ளைகளின் வீதம் குஜராத்தில் ஏற்கனவே 879 ஆக குறைந்துள்ளது. வேறு மாவட்டங்களில் இதையும்விட இன்னும் குறைந்துள்ளது. உதாரணமாக வடகிழக்கு இந்தியாவில் கண்டடைந்த ஆரம்ப தரவுகளின்படி, நீண்டகால வன்முறையானது பால்பிரிவு விகிதத்தில் கெடுதலான பாதிப்பையே ஏற்படுத்தியுள்ளது. ஒருவர் எதிர்பார்க்கிறது மாதிரி இது பெண்களுக்கு ஆதரவு தருவதாய் இல்லாமல் எதிராகவே இருக்கிறது. மணிபூரில் வேலை செய்யும் போலா பேர்னோஜி (Paula Benerjee) யின் தகவலின்படி 1961ல் 1000 ஆண்களுக்கு 1105 பெண்களாக இருந்தது. 1990ல் 961 ஆகிற்று. நாகலாந்தில் 1000:933 ஆக இருந்து 890 ஆகக் குறைந்தது.[28]

வன்முறை, மேலோங்கிய ஆண்நிலை இயல்பு, தம்மை தக்க வைப்பதற்கான பெண்களின் வாய்ப்பு ஆகியனவற்றுகிடையேயான தொடர்பு ஆபத்தான நிலையில் உள்ளது, அவை பலவீனம் அடைவதற்கு பதிலாக வேறு பல காரணங்களால் கிளறிவிடப்படுகிறது.

## இதை இன்னும் விரிவுபடுத்திச் சொல்ல முடியுமா?

மேலோங்கிய ஆண்நிலை இயல்பு அதனோடு தொடர்புடைய அடுக்குகள், வன்முறை ஆகியன பற்றி கதைப்பதற்கு பல மட்டங்களில் மாற்றங்கள் தேவைப்படுகின்றன என்று நாம் நம்புகிறோம். பொருளாதாரச் சிந்தனை ஒழுங்குமுறைகள், கட்டமைப்புகள் ஆகியவற்றில் ஒரு முறையான மாற்றம் அவசியமானது. காரணம், அவை நுகர்ச்சித் தன்மையை முன்னெடுப்பதால் மட்டுமல்ல மாறாக அவை அசமத்துவத்தைக் கூட்டி எங்களுடைய சூழலை அழிப்பதாலுமே. இன்றைய அபிவிருத்தி முறைமையானது அதனுடைய பொருளாதார வளர்ச்சி, லாபத்தைத்• தொடர்தல், தனிமனிதவாதம் ஆகியவை பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தங்களுடன் பெண்களுக்கும் ஆண்களுக்கும் செல்வந்தருக்கும் ஏழைகளுக்கும் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையேயான இடைவெளியை அகட்டியுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் நிறைய உண்டு. இவற்றினோடு சூழலின் அழிவுக்கும் இது இட்டுச் சென்றுள்ளது. யு என் டி பியின் (UNDP-Human Development Reports) மனித அபிவிருத்தி அறிக்கை உலகெங்குமிருந்து புள்ளிவிபரங்களைச் சேர்த்துள்ளது. இன்றைய அபிவிருத்தியின் வடிவம் அனேக மக்களை வேலையற்றவர்களாக, குரலெழுப்ப முடியாதவர்களாக ஈவிரக்க மற்றவர்களாக, வேரில்லாதவர்களாக, எதிர்காலம் இல்லாதவர்களாகச் செய்துள்ளது என்பதை அது காட்டுகிறது. இன்று 358 பல் கோடீஸ்வரர்கள் உலகத்திலுள்ள 2.5 கோடி ஏழை மக்களை விட அதிக பணத்தை தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். பல்தேசிய நிறுவனங்களின் பஜட்டுகள் தேசிய அரசாங்கங்களினதை விட பெரியவை. இந்த வகையான துருவமயப்படுத்தல், அதிகார மையப்படுத்தல் என்பன, மிகையுணர்ச்சி, பொருதல், வன்முறை ஆகியவற்றுக்கு இட்டுச் சென்று இந்த வகையான அபிவிருத்தி நீடித்திருக்காது என்பதைக் காட்டும்.



அபிவிருத்தியின் குவிமையம் இலாபத்திலிருந்தும் ஒரு சிலரிற்கான பெரும் இலாபத்திலிருந்தும் மக்களுக்கும் அவர்கள் பலரின் முன்னேற்றகரமான வாழ்க்கைக்குமாக மாற்றப்படவேண்டும். அதி தீவிரமான அசமத்துவமும் பொருளாதார அநீதியும் நிலவுகின்ற சந்தர்ப்பத்தில் உடனிருந்து வாழுதல் கஷ்டமானது அல்லது சாத்தியமற்றது. இலட்சக்கணக்கான மக்களும் உலக சமூக அரங்கு (world social forum) போன்ற பெரிய ஜனக் கூட்டங்களும் உலகத்தைக் காப்பாற்றுங்கள் என்கிற மாற்றும் முறைக்காக குரல் கொடுக்கிறார்கள்.

சுசான் ஹவ்தோன் (Susan Hawthorne) தன்னுடைய "பயங்கரவாதம் கோளமயப்படுத்தல், உயிரியல் பன்முகத்தன்மை, உயிர்வாழ்ந்திருத்தல் ஓர் பெண்ணிய நோக்கு"என்ற தன்னுடைய கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

*நான் கருதுவதென்னவெனில் லாபத்தை நோக்காகக் கொள்வதிலிருந்து (பொருளியலாளர் மறிலின் வோறிங் Marilyn Waring கருத்துப்படி யுத்தத்திற்காக கூச்சலிடுவதும் அதன் ஒரு பகுதியே)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உலகம் உயிரியல் பன்முகத்தன்மைக்கு மாறுமானால் அனேக-மானவற்றைச் செய்ய முடியாததோடு நினைக்கவும் முடியாது போய்-விடும். உயிரியியல் பன்முகத் தன்மை பேணுகையின் உள்ளார்ந்த அம்சமாகவுள்ள சீவிப்பு மீது குவிமுகப்படுத்துவது என்பது அளவுக்கணிப்பீட்டு முறைகளை, திசைகளை மாத்திரமல்ல சீவிப்பின் எல்லா அடிப்படை நடவடிக்கைகளை மாற்றுவதாகும். உண்மையில் உயிரியல் பன்முகத்தன்மைப்பாடே எமது உயிர்ப்பு மூச்சாக அமையுமெனில் நாங்கள் இந்த பூகோளத்தின் மறு-பாதியில் உள்ள மக்களை உடமையற்றவர்களாக்கமாட்டோம். அதாவது நாங்கள் பாவிக்கும் மலிவான T - சேட்டுக்காகவோ, நான் இப்பொழுது பயன்படுத்தும் கணிணி, இன்னும் வசதிகள் கூடிய விமானப்பணத்திற்காகவோ பல்லாயிரக்கணக்கான மைல்-களுக்கப்பால் பயிரிடப்பட்டு எனக்காகக் கொண்டுவரப்படும் பழங்-களுக்காவோ உலகில் மறுபாதியில் உள்ள மக்களை உடமை-யற்றவர்களாக்கமாட்டோம். ஆடைத்தொழிற்சாலை, இலத்திரனி-யல் தொழில், உல்லாசப்பயணத் தொழிற்சாலை, தொழில்மயமாக்-கப்பட்ட பண்ணைத் தொழிற்சாலை ஆகியவை எல்லாம் கோள-மயமாக்கலின் இடைமுகங்களே. அமெரிக்க வாழ்க்கை முறையி-னால் ஆதரிக்கப்படுவதாய் இருப்பவை "இந்த அதிகப்படி" நிலை-கள் தான். இவையே குண்டுகள், பொருளாதாரத்தடை விதிப்-புகளோடு சேர்ந்து அவலத்தின் கர்த்தாக்கள் ஆகின்றன.* [29]

அனேகமான மக்கள் அவருடன் ஒத்துப்போகின்றனர். அடுத்த நட-வடிக்கை என்னவெனில் உயிரியல் பன்முகத்தன்மையை அடிப்படையா-கக் கொண்ட கோட்பாட்டை நோக்கி பன்முகத்தன்மையோடு முன்னேறு-வதாகும் - இது பன்முகத்தன்மைக் கொள்கை சமூக, அரசியல், கலாச்-சார கோட்பாட்டை உள்ளடக்கிய உள்ளூர் பகைப்புல வளங்களைக் அடிப்படையாகக் கொண்ட தத்துவமாகும். அந்த இடத்தை குண்டு-களாலோ 110 அடுக்கு மாடிக் கட்டடங்களைக் கட்டுவதாலோ அடையப் போவதில்லை. இது பன்முகத்தன்மை கொண்ட அமைப்பிலிருக்கும் வாழ்க்கையை பெரும் வளமுடையதாகப் பார்ப்போராலேயே சாத்தியப்-படக்கூடியது. மாறாக ஆண்நிலை இயல்பு கொண்ட யுத்தம், இலாபம், கோளமயப்படுத்தல் ஆகியவற்றைக் கொண்ட உலகில் வாழ்வோரால் அல்ல.

இத்தகைய அபிவிருத்திச் சிந்தனையின் பெயர்ச்சியானது எங்களு-டைய அமைப்பிலும் எங்கள் சமூக பொருளாதார அரசியல் முறை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் தீவிர மாற்றங்களோடு கூட்டுச் சேர்க்கப்பட வேண்டும். இது பெறுமானங்களிலும் பாரிய மாற்றங்களைக் கோரும். அதாவது தன்னை அழுத்துதல் போட்டி போடுதலிலிருந்து கூட்டுறவுக்கும், சமூக நீதிக்கும், விரிவாக்கத்திலிருந்து பாதுகாத்துப் பேணுதலுக்கும், பொருள் தேட்டத்திலிருந்து அகவளர்ச்சி ஆகியவற்றுக்குமாக மாற்றம் கொண்டிருக்க வேண்டும்.

**நீங்களும் வெற்றியையும் ஆற்றலையும் மிக வித்தியாசமாக பார்க்கிறோம் என்று இவையெல்லாம் கோரவில்லையா?**

ஆம், எங்களுடைய தற்போதைய வெற்றியினதும் ஆற்றலினதும் அனேக கருத்துக்கள் மாற்றப்பட வேண்டும். இன்று அதிகளவு ஆற்றல், அதிக பணம், பெரியளவிலான அமைப்புக்கள் எல்லாம் வெற்றியின் சுட்டிகளாக இருக்கின்றன. இந்த விதமான வெற்றியை சாதிப்பதற்கு ஒரு நாளைக்கு 12-16 மணித்தியாலங்கள், ஒரு கிழமையில் 7 நாட்கள் வேலை செய்ய வேண்டும். இந்த மாதிரியான விடயங்களில் வெற்றி பெறுபவர்களாக இருப்பவர்கள் பிள்ளைகளை வளர்ப்பதில், பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதில், குடும்பத்தை நடத்துவதில் பங்களிக்காது இருப்பவர்களே. இத்தகைய ஒரு உலகில் தன்னை இணைத்துக் கொண்டு இதில் வெற்றி பெறுவதற்கு பெண்கள் இதிலிருந்து வெளியேற வேண்டும் அல்லது அவர்கள் தமது குடும்பக் கடமைகளை விட்டுவிட வேண்டும். வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கும் எந்த மனிதனும் பணத்தை தன் குடும்பத்திற்காகச் சம்பாதிப்பதைத் தவிர வேறெந்த பெற்றார் பொறுப்புக்களையும் எடுத்துக்கொள்ள மாட்டான். அவர்கள் தம் குடும்பத்திற்கே பூரணமான அந்நியர்களாக ஆக்கப்படுகிறார்கள். ஏனெனில் இந்த அமைப்புமுறை அவர்கள் சொந்த வாழ்க்கைக்கு நேரம் அளிப்பதில்லை. இதில் வெற்றி பெறவேண்டுமானால் பெண்கள் இந்த ஆண் உலகில் தம்மை அதற்குள் தக்கவாறு அமைத்துக்கொள்ள வேண்டும். கூட்டுத்தாபனப் பெண்கள் ஆண்களின் பிரதிகள் மாதிரியே தோற்றுதல், சிந்தித்தல் நடந்து கொள்ளுதுல் ஆகியவற்றில் இருப்பது ஆச்சரியமான ஒன்றல்ல. கூட்டுத்தாபனப் பெட்டிக்குள் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தன்னைப் பொருத்திக் கொள்ளக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

இப்பொழுது மக்களை பெட்டிகளுக்கு பொருந்துகிற மாதிரி தயார்படுத்துவதற்கு பதிலாக மக்களின் பல்வகைக்க குணவியல்புகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றவாறு பெட்டிகளை தயாரிப்பதற்கு காலம் வந்துவிட்டது. வெற்றியென்பதை பணத்தாலும் அதிகாரத்தாலும் வரையறுக்காமல் அதை தான் வாழும் சூழலோடும் மக்களோடும் இணைந்தெழும் சந்தோசமாக, மனமும் உடலுக்குமான நல்ல ஆரோக்கியமான பெரியளவிலான சமூக சுதாகரிப்பாக மிகுந்த இசைவுடைய உறவுமுறையாக வரையறுக்க வேண்டும்.

இப்போதைய முகாமைத்துவ ஆய்வுமுறைகள் உணர்ச்சிமயமான விவேகம் பற்றிக் கதைப்பதோடு வெற்றி பெறுவதற்கு வழமையான விவேகம் IQ வை விட மேலானது என்றில்லாவிட்டாலும் அதைப் போல் உணர்ச்சி மயமானதாக இருப்பது முக்கியமானது எனச் சொல்கின்றன. ஆகவே எவ்வாறாயினும் ஒருவருடைய உணர்வுகளோடு தொடர்புடையதும் மற்றவர்களினதும் உணர்வுகளை விளங்கிக் கொள்கிறதுமான "பெண்பால்"குணங்கள் சமூக அமைப்புகளுக்கு தேவையானவையென அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பெண்களுடைய அனுபவங்களை இறுதியாக பெறுமதி மிக்கவையென உயர்வாற்றலுடைய ஆண் வல்லுனர்களால் கூறப்பட்டுள்ளன. மேலாதிக்க ஆண்பால்த்தன்மை ஆண்களுக்கும் கூட்டுத்தாபன அமைப்புகளுக்கும் தீங்குடையதாக இருப்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு என்பது போட்டியைப் போலவே முக்கியமானது. ஒரு அமைப்பில் எவ்வாறு உணர்வுக்கிடம் கொடுக்காத அறிவு அவசியமோ அவ்வாறே இதமூட்டும் வெப்பநிலையும் அவசியம். இந்தவிதமான செயற்பாடும் இன்று நாளாந்த இடத்தைப் பிடிக்கிறது. அத்தோடு நாம் எல்லோரும் ஆண்நிலை இயல்பு – பெண்நிலை இயல்பு ஆகியவற்றை தீவிரமாக மீள் சிந்தனைக்குட்படுத்த வேண்டும்.

***கடந்த பல ஆண்டுகளாக பெரியளவிலான கவனம் பால் நிலைக்கும் அபிவிருத்திக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. என்ன தொடர்புகள் ஆண் நிலை இயல்புக்கும் பால் நிலைக்கும் அபிவிருத்திக்கும் இடையில் இருக்கிறது?***

ஆண்நிலை இயல்பு பற்றிய கருத்து, விசேடமாக மேலாதிக்க ஆண்நிலை இயல்பு அபிவிருத்தியைப் பாதிக்கிறது, குறிப்பாக பெண்களின் அபிவிருத்தியைப் பெரியளவு பாதிக்கிறது. ஏனெனில் இக் கருத்துக்கள் பெண்களை கீழானவர்களாகச் செய்கிறது. அபிவிருத்தியில் அவர்கள் சமமான கூட்டாளிகளாக இருக்கவில்லை. அவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கும் உடல் நலத்திற்கும் போதுமான கவனம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு உற்பத்திச் சாதனங்களில் விசேடமாக காணி ஆகியவற்றில் எந்த உரிமையோ அதிகாரமோ கொடுக்கப்படவில்லை. பெண்களும் பெண்கள் இயக்கங்களும் தங்களுடைய விஷயதானங்கள், தேவைகள் நோக்குகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக தொடர்ந்து போராட வேண்டியிருக்கிறது.

பெண்பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் எதிரான வீட்டு வன்முறைகள் (உளவியல் ரீதியான, உடல் ரீதியான, பாலியல் ரீதியான) அவர்கள் வளர்ச்சியடைவதற்கு தம் சுயமதிப்பையும் சுயநம்பிக்கையையும் அபிவிருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்களையும் தம்மிடம் உள்ளோடியுள்ள ஆற்றலை உணர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் சூறையாடியுள்ளன. வீட்டினுள் வன்முறையும் வன்முறைக்கான

"பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் அமுக்கப்பட்ட கோபம், குற்றவுணர்வு, அவமானம் ஆகியவற்றை ஏற்படுத்த, அது மறுவளமாக நரம்புக்கோளாறு, தற்பாதுகாப்பு உணர்ச்சிநிலை திருப்தியின்மை, அச்சம் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. எரிச்சல், அவா, தொடர்ந்திருக்கும் மிகையுணர்ச்சி மனஅழுத்தம், மனச்சோர்வு ஆகியவற்றுக்கும் இட்டுச்செல்கிறது. இது இறுதியாக தொடர்ந்துவரும் தலைவலி, வயிற்றைப்பிரட்டுதல், நித்திரையின்மை, இன்னும் வேறு ஆரோக்கிய குறைவுகளை ஏற்படுத்துகிறது. அண்மைக்கால ஆய்வுகள், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களால் குறைவான சுயமதிப்பு, தவறான சுதாகரிப்பு, குறைந்துபோகும் சிருஷ்டி ஆற்றல் ஆகியன ஏற்படுத்தப்படுகின்றது என்பதைக் காட்டுகிறது.

பாலியல் ரீதியான துன்புறுத்தல்களின் நீண்டகாலப் பாதிப்புகளாக தீராத களைப்பு, நித்திரையின்மை, எடைகுறைவு, மாரடைப்பு போன்ற உளவியல் உடல்ரீதியான ஆரோக்கியக் குறைவுகள் ஏற்படுகின்றன. இந்த பிரச்சினைகள் அனைத்தும் மற்றைய வேலையோடு தொடர்புடைய மன ஒருங்கிணைப்புக் குறைவு, வேலைக்கு வராமை, தொழிலில் திருப்திக்குறைவு, அற்பவாய்ப்பு ஆகியவற்றோடு கூட்டுச்சேர்கின்றன.

Dr. A.J. Wadkar; Sexual Harassment of Women at Workplace and their Mental Health.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுறுத்தலும் பெண்பிள்ளைகளையும் பெண்களையும் ஆழமாகவும் அடிப்படை ரீதியாகவும் பாதித்து அவர்களதும் அவர்கள் குடும்பங்களினதும் அபிவிருத்தியையும் பாதிக்கிறது.

இவ்வாறே பொது இடங்களில், பாடசாலைகளில், கல்லூரிகளில், அலுவலகங்களில் இடம்பெறும் வன்முறையும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களும், பெண்களின் ஊடாட்டத்தையும் சமூக, கலாச்சார, பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் அவர்கள் பங்குபற்றுதலையும் பாதிக்கிறது. ஆண்பால் அரசியல் கலாச்சாரம் பெண்களை அரசியல் ரீதியாக விழிப்போடு இயங்குவதை கட்டுப்படுத்தும் அதேநேரத்தில் வன்முறையும் பெண்களை பொருளாதார ரீதியில் சுதந்திரமாக இயங்குவதை கடினமாக்குகிறது. இவ்வாறாக ஆண்நிலை இயல்பு பெண்களின் அபிவிருத்திக்கு எண்ணிறந்த தடைகளை உண்டாக்குகிறது. ஆயினும் ஆண்நிலை இயல்புக்கும் அபிவிருத்திக்கும் இடையே இவ்வாறு வெளிப்படையான தொடர்பு இருந்தபோதும் துரதிர்ஷ்டவசமாக பால்நிலை அபிவிருத்தி தொடர்பாக வேலைசெய்யும் மக்கள், ஆண்கள், ஆண்நிலை இயல்பு தொடர்பாக அதிக கவனத்தைக் காட்டவில்லை.

கல்வி, வேலைவாய்ப்பு, பெண்களுக்கு கடன் ஆகியவற்றைக் கொடுத்து அவர்களை பொது இடங்களுக்கு கொண்டு வருவதற்காக ஏராளமான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன. அவர்களை உள்ளூர் ஆட்சி நிர்வாகத்தில் ஈடுபட வைத்து தலைமைத்துவத்துக்கான பயிற்சி அவர்களுக்கு கொடுக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயர்கல்வியின் காரணத்தாலும் சில அபிவிருத்தி தலையீடுகளின் நன்மையினாலும் அனேக பெண்கள், வீட்டுக்கு வருவாய் தேடித்தரும் "தலைமக்களாக" "ஆண்பால்" பாத்திரத்தை தமதாக்கியுள்ளனர். ஆனால் ஆண்கள், பெண்களை ஏற்றுக்கொண்டு பெண்களுக்கு மதிப்பளித்து ஆண்களும் வீட்டில் பெண்பாலாருக்கான வகிபாகங்களை மேற்கொள்வதற்கான கல்வி புகட்டல் ஆகிய முயற்சிகள் இதுவரை செய்யப்படவில்லை. ஆண்பிள்ளைகளையும் ஆண்களையும் தங்களுக்குள்ளேயே சிந்திக்க வைத்து தங்களுக்குள்ளேயே இருக்கும் பால்பிரிவு பற்றியும் அந்த பால்பிரிவு ரீதியாக தங்கள் குடும்பங்களுக்குள் இருக்கும் வேலைபிரிவை மாற்றுவதற்கான விளக்கங்கள் பற்றியும் அவர்களுக்கு அறிவூட்டல் செய்யும் எந்தவித அபிவிருத்தி திட்டங்களும் இதுவரை தெற்காசியாவில் இடம்பெற-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை என்று எங்களுக்கு தெரியும். பெண்களுக்கு நிர்வாகத் தலைமைத்துவதற்திற்கான பயிற்சிகள் கொடுக்கப்படும் அதேநேரத்தில் அதோடு தொடர்புபடும் சமையல், பிள்ளைகள் பராமரிப்பு இன்னும் ஏனைய சமூக மீள் உருவாக்கச் செயற்பாடுகளில் ஆண்களுக்கு பயிற்சி அளிக்கப்படவில்லை.

பெண்களது "பலிபொருள் தன்மையும்""தக்கவைக்கும் தன்மையும்" முறையாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு தந்தைவழி குடும்பங்களிலும் சமூகங்களிலும் அவர்களுக்கு இருக்கும் அதிகாரக் குறைவு பகுத்தறியப்பட்ட அதேநேரத்தில் ஆண்களின் அதிகாரம் இவ்வாறு பகுத்து அறியப்படவில்லை. ஆகவே 50 வீதமான பால்நிலையும் பால்நிலை உறவுகளும் மட்டும் பேசப்பட்டுள்ளதால் அதிகளவு மாற்றம் நிகழவில்லை. உண்மையைச் சொல்லப் போனால் இதனால் எதிர்மறையான வெளிப்பாடுகளே நிகழ்ந்துள்ளன.

> பால்நிலைச் சமத்துவம் என்பது வெறுமனே பெண்களது பிரச்சினையல்ல அது மக்களின் பிரச்சினை

சிலவற்றைப் பொறுத்தமட்டில் "பெண்கள் மாறுகிறார்கள் ஆண்கள் மாறுகிறார்கள் இல்லை"என்ற நிலைப்பாடு பெண்கள் மேல் பெருஞ்சுமையைக் கூட்டியுள்ளது. அபிவிருத்தி தலையீடுகளின் காரணமாக வீட்டுக்குள்ளேயும் வெளியேயும் பெண்கள் மேலதிகப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்கிறார்கள். அத்தோடு அவர்கள் குடும்பத்தின் முழுவேலைகளையும் பிள்ளைப் பராமரிப்பையும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றனர். வேலைகள், துணிவு வினை, சந்தைகள், உள்ளூராட்சி ஆகியவற்றை நோக்கி பெண்களை முன்னெடுக்கும் இயக்கம், ஆண்களை, சமயலறை, பிள்ளை பராமரிப்பு நோக்கிய இயக்கத்தோடு இணைக்காது விட்டால் இந்தப்போக்கு இன்னும் மோசமடையும்.

பெண்கள் பொருளாதார ரீதியாக சுதந்திரம் பெற்று பால்ரீதியான உறவுகளில் மாற்றங்கள் விளைந்து கொண்டிருக்கும் இடங்களில், ஆண்கள் அச்சமுற்று பெண்களையும் அவர்களுக்கு ஆதரவு தந்து, இந்த மாற்றங்களுக்கு காரணமாய் இருந்த அமைப்புக்களையும் எதிர்த்து திருப்பித் தாக்கினர். உலகத்திலேயே அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் மிகவும் முக்கியமானதாகக் கொள்ளப்படுவதுதான் பங்களாதேஷில் உள்ள ஏழைப்பெண்களுக்கான க்றமீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியினால் (Grameen Bank savings and credit programme) மேற்கொள்ளப்பட்ட சேமிப்பும் கடன்வழங்கல் நிகழ்ச்சித்திட்டமாகும். இது ஒரு தற்காலிகமானதாக இற்றைவரை இருக்கும்போதும் வீட்டில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்தமை, இதனோடு சம்பந்தப்படுத்தப்பட்டிருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன.

வேறு பல சம்பவங்கள் பங்களாதேஷில் (இங்கே பெரியளவில் அரசசார்பற்ற நிறுவனங்கள் செல்வாக்குடன் உள்ளன) இடம்பெற்றுள்ளன. பெண்களையும் சிறுபிள்ளைகளையும் அதிகாரப்படுத்துகின்ற திட்டங்களால் சந்தோசப்படாத கூட்டத்தினால் பெண்கள் பாடசாலைகள் தீக்கிரையாக்கப்பட்டன. பெண்களுக்கெதிரான வன்முறை, பால்சமத்துவம் ஆகியவற்றை முன்வைத்து பெண்கள் பகிரங்கமாக ஊர்வலம் நடத்தியமை கண்டனத்துக்குள்ளாக்கபட்டு உடல்ரீதியாகவும் அவர்கள் தாக்கப்பட்டனர்.

நாங்கள் முன்னே குறிப்பிட்டது போல ஆண்நிலை இயல்பானது அதிகாரத்தோடும் அதிகார உறவுகளோடும் சம்பந்தப்பட்டது. ஆகவே ஆண்நிலை இயல்புக்கு சவால்விடுவது என்பது பால்நிலை உறவுகளுக்குச் சவால்விடுவதாகும். அத்தோடு சாதி, வர்க்கம், இனம் இன்னும் வடக்கு தெற்கு ஆதிக்க உறவுகளுக்கும் சவால்விடுவதாகிறது. தெற்காசியாவில் குறிப்பாக இந்தியாவில் இத்தகைய வித்தியாசமான ஆதிக்க அடுக்குகளின் ஒன்றோடொன்றான ஊடாட்டத்தை ஒருவர் காணமுடியும். ஊதாரணமாக "மேற்சாதி", மேல்வர்க்க ஆண்கள் அடிக்கடி கீழ்ச்சாதி, கீழ்வர்க்கப் பெண்களை பாலியல் வன்புணர்வு செய்கின்றனர். ஆகவே பாலியல் வன்புணர்வுக்கெதிரான பெண்களின் செயற்பாடு என்பது ஆண் ஆதிக்கத்துக்கெதிரான சவாலாக மட்டும் இருக்கவில்லை. மேல்சாதிக்கும் மேல்வர்க்கத்துக்கும் எதிரானதாகவும் இருக்கிறது. இவ்வாறே கீழ்சாதிப் பெண்கள் பெரியளவில் உள்ளூர் ஆட்சி நிர்வாகங்களில் பங்குபற்றுதலானது சாதி அடுக்குகளுக்கு சவால் விடுப்பதாக அமைய, மேல்சாதி வர்க்கம் இவர்களை பகிஷ்கரிக்கிறது அல்லது அவர்களுக்கெதிராக வன்முறையில் இறங்குகிறது. இன்னும் ஆந்திரப்பிரதேசத்தில் பெரியளவில் பெண்கள் மதுபான வியாபாரத்துக்கு எதிராக அணி திரண்டது, வெறுமனே ஆண்களின் மதுபாவனைக்கு மட்டும் எதிராக இருக்கவில்லை. மேற்சாதி, மேல்வர்க்க மதுபானக் கடைச் சொந்தக்காரர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் பொலிசாருக்கும் களவாக மதுபான விற்பனையில் ஈடுபட்டோருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் இருந்த ஊழல் மிக்க ஒட்டுறவுக்கும் எதிராக இருந்தது. இங்கு ஒரேகாலத்தில் பெண்கள் பல்வகையான ஆண்நிலை இயல்புக்கும் ஆதிக்க அடுக்குகளுக்கும் முகங்கொடுத்தார்கள்.

தெற்காசியாவின் பலபகுதிகளில் இனத்துவ சமூக வன்முறைகள் அதிகரித்துள்ளன. இனத்துவ சமூக வன்முறையும் பால்நிலை வன்முறையும் ஒன்றோடொன்று இணைந்து இடம்பெறுவதால், இந்த நிலைமைகளில் பெண்களோடு வேலைசெய்தல் என்பது பெரும்பான்மை சிறுபான்மை பிரச்சினைக்கும் அரசியல் அடையாளம் ஆகியவற்றிற்கும் முகங்கொடுக்க வேண்டியதாகிறது. ஆகவே பால்நிலை அபிவிருத்தி ஆகியவற்றில் வேலை செய்பவர்கள் பன்முக ஆதிக்க அடுக்குகளினதும் பன்முக ஆண்நிலை இயல்பினதும் இயங்குத் தன்மையையும் இவைகளுக்கிடையே உள்ள உள்ளகத் தொடர்புகளையும் விளங்கிக்கொள்ள வேண்டும். அபிவிருத்தியோடு சம்பந்தப்பட்ட அமைப்புக்கள், பால் அசமத்துவங்கள் பற்றிக் குரல் கொடுக்கும் அதேநேரத்தில் பெரியளவிலான அசமத்துவங்களையும் அநீதிகளையும் வெளிப்படுத்தி அவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்.

சரா வைற் (Sarah White) என்பவர் பின்வருமாறு சொல்கிறார்:

> *ஆண்நிலை இயல்பு தொடர்பாக ஒரு பிரச்சினையை உருவாக்குவதென்பது ஆண்கள் மேல் மட்டும் கவனத்தைச் செலுத்துவதல்ல. மாறாக இனம், வர்க்கம் என்ற வடிவங்களில் வரும் ஆதிக்கம் ஆகியவற்றோடு பால் அசமத்துவத்தை நிலைநிறுத்தும் ஸ்தாபனங்கள் கலாச்சாரங்கள் என்பவற்றிலும் கவனத்தைக் குவிப்பதாகும். இது குறியீடாகவும் யதார்த்த பூர்வமாகவும் நிற்கும் அதிகாரத்தின் பரிமாணங்களை கேள்விக்குள்ளாக்க வைக்கிறது. அதாவது இது தனிப்பட்டதிற்கும் தொழில்ரீதியானதிற்கும் ஸ்தாபனங்களின் அரசியலுக்கும் கோளமுறைமைக்கும் இடையே உள்ள தொடர்புகளை அங்கீகரித்துக் கொண்டு அதில் வேலை செய்வதாகும். இது ஆண்களும் பெண்களும் கறுப்பரும் வெள்ளையரும் செல்வந்தரும் ஏழைகளும் தனித்தனியாகவும் ஒன்றாகவும் வேலை செய்வதைக் சம்பந்தப்படுத்துகிறது. இப்படிச் செய்வதன் மூலம் வெறுமனே அவர்கள் எங்கிருந்து வந்திருக்கிறார்கள் என்பதைப் பற்றியல்லாமல் எங்கே அவர்கள் போக விரும்புகிறார்கள் என்பதன் அடிப்படையில் மூலோபாய இணக்கத்தை மேற்கொள்வதே.*[30]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி அமைப்புக்களைப் பொறுத்தவரை, ஆண்நிலை இயல்புகளோடு தொடர்புடைய வேறு பிரச்சினைகளும் உண்டு. பால்நிலை, பண்பாடு, பெறுமதிகள், அபிவிருத்தி அமைப்புக்களின் வழக்க ஒழுங்கு ஆகியவை பற்றி பெரியளவு பேசப்பட்ட போதும் அவை தந்தைவழிச் சமூகத்துக்குரியதாக ஆண்களுக்குரியதாகவே உள்ளன. இந்த அமைப்புக்கள் ஆண் ஆதிக்கம் உடையதாக மட்டும் இருக்கவில்லை. இதில் சேர்ந்து கொள்ளும் பெண்களும் ஆண்கள் போலவே சிந்திக்கவும் செயல்படவும் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். வருத்தத்திற்குரிய விஷயம் என்னவெனில், சில அரசசார்பற்ற நிறுவனங்கள், உலகவங்கியினதும் இருமுனைத் தொடர்பான முகவர்களினதும் பெரியளவிலான செயற்திட்டங்களுக்கு உப ஒப்பந்தக்காரர்களாக மாறவும் தொடங்கியதும் இத்தகைய போக்குகள் அதிகரிக்கத் தொடங்கின. இத்தகைய அரசசார்பற்ற நிறுவனங்கள் வெளித்தெரியவராத அதிக அடுக்குகள் நிறைந்தனவாக ஆண்நிலை இயல்பு பெண்நிலை இயல்பு என்கின்ற கருத்துக்களை பிரக்ஞை பூர்வமாக அல்லது அர்த்தபுஷ்டியுடன் எதிர்ப்பதை தவிர்த்து வருகின்றனவாய் உள்ளன. அவர்கள் வீட்டுக்குள் இடம்பெறும் பால்நிலைப் பிரிவு வேலைபற்றியோ அல்லது வீட்டில் இடம்பெறும் வன்முறை பற்றிய பிரச்சினை பற்றியோ பேசுவதற்கு அஞ்சுகின்றனர். அவர்கள் பெண்கள் மேல் ஆண்கள் பாவிக்கும் அதிகாரத்தை நியாயப்படுத்துகின்ற சமய கலாச்சார நம்பிக்கை தொடர்பான வழக்கங்களை எதிர்க்கவில்லை. இத்தகைய முக்கியமான பிரச்சினைகள் பற்றிப்பேசாது பால்சமத்துவத்தை நோக்கி முன்னேற முடியாது. வெறுமனே பெண்களை இன்று நடைமுறையிலுள்ள அபிவிருத்திச் சிந்தனைக்குள்ளும் நிகழ்ச்சி-திட்டங்களுக்குள்ளும் இழுத்துவிடுவதால் பால் சமத்துவமோ ஏழைகளுக்கு சமத்துவமோ நீதியோ ஏற்பட்டுவிடப் போவதில்லை.

**பால் அசமத்துவத்துக்கும் நடைமுறையிலுள்ள ஆண்நிலை இயல்பின் எதிர்மறையான குணக் கூறுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு ஆண்கள் என்ன செய்யலாம்?**

**மா**ற்றங்கள் தனிப்பட்ட அல்லது தனிமனித மட்டத்திலும் சமூகத்-திலும், அரசியலிலும் ஆகிய இருவகை மட்டங்களிலும் தேவைப்படு-கின்றன. தந்தைவழிச்சமூகம் ஒரு முறைமையாக இன்னும் தொடர்-கிறது. காரணம், எவ்வாறு இனவாதம் இனவாதிகளின் ஆதரவினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கிறதோ அவ்வாறே தந்தைவழிச்சமூக முறைமை அதை ஆதரிக்கும் ஆண் - பெண் இருசாராராலும் தொடர்கிறது. இதுவரை ஆண்கள் பிரச்சினையின் ஒருபகுதியினராய் இருந்தனர். ஆனால் இப்பொழுது அவர்கள் தீர்வின் ஒரு பகுதியினராக அழைக்கப்படுகின்றனர்.

ஆண்கள், குறிப்பாக அதிகார நிலையில் இருப்பவர்கள், பால்சமத்துவம் தொடர்பாக தமது சொந்த கடப்பாட்டைக் காட்டவேண்டும். விசேடமாக, பொதுவாக வன்முறையை இல்லாதொழிக்கவும் குறிப்பாக பெண்களுக்கெதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டுவரவும் செய்ய வேண்டும். திமூதி பெனீக் (Timothy Beneke) கூறியது போல் ஆண்களே பாலியல் வன்புணர்வு செய்கிறார்கள். ஆண்களே கூட்டாக வன்முறையை ஒழிப்பதற்கும் அதிகாரம் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆண்களின் பேராற்றல் - அறிவு, பொருளியல், அரசியல் ரீதியான பேராற்றல் - பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதற்குப் பாவிக்கப்படுவதோடு, இந்த வன்முறையை ஏற்படுத்தி, அதை நிலைத்திருக்கச் செய்கின்ற சமூக, பொருளியல் அரசியல் முறைமைகளை மாற்றுவதற்கும் பாவிக்கப்பட வேண்டும்.




அனேகமான பெண்களைப் போல், தந்தைவழிச் சமூகத்தை ஆண்கள் எதிர்கொண்டு தாம் எவ்வாறு அதனால் பயனடைகின்றனர். எவ்வாறு தாம் சலுகைகளையும் அதிகாரத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். அத்தோடு எவ்வாறு அமைப்பை மாற்றாது தாம் பால் அசமத்துவத்தை தொடர்ந்து நிலைத்திருக்கச் செய்கின்றனர் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இறுதியான ஆய்வின் முடிவில் பால் அசமத்துவம் என்பது யாருக்கும் பயன்தருவதில்லை என்பதை ஆண்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அது அவநம்பிக்கைக்கும் பாதுகாப்பின்மைக்கும் இசைவின்மைக்கும் இட்டுச் செல்கிறது. ஆண்கள் தமது தனிப்பட்ட உறவுகளிலும் வீட்டு வாழ்க்கையிலும் பாலியல் தன்மையிலும் மாற்றத்திற்கான செயற்பாட்டை தொடங்க வேண்டும். இது தந்தைவழிச் சமூக வரலாற்றை ஓர் இயக்கத்தில் இணைத்து பின்னடையச் செய்வதற்கான வரலாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பமாகும். திமோதி பினீக் கூறுகையில் "வரலாறு வேகமாக நிகழக் கூடியது. நாங்கள் அதை உடனே நிகழச் செய்ய வழிவகுக்க வேண்டும். கடந்த பல சகாப்பதங்களாக உலகெங்குமுள்ள பெண்கள், தம்மையிட்ட சமூகமயப்படுத்தலையும் ஒடுக்குமுறையையும் விளங்கிக் கொள்ளவும் அதை எதிர்த்துப் போராடவும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் குழுக்களை ஒழுங்குபடுத்தியுள்ளனர். ஆனால் தந்தைவழிச் சமூக அமைப்பும் இன்றைய பொருளாதார அமைப்புமுறையும் ஆண்களையும் துன்பப்படுத்துவதாய் உள்ளது. சிறுகால அடைவில் சில ஆண்களுக்கு கிடைக்கும் அதிகாரம் அவர்களுக்கும் அவர்களுடைய உறவுகளுக்கும் அவர்களுடைய வாழ்க்கைக்கும் கெடுதி விளைவிக்கிறது. இங்கே முக்கியமானது என்னவெனில் ஆண்கள் தங்களது சொந்த ஒடுக்குமுறைகளையும் கைதுநிலையையும் விளங்கிக் கொண்டு அதற்கெதிராக போராட முயற்சிக்க வேண்டும்.

**மேலாதிக்க ஆண்நிலை இயல்பு பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டு அதை எதிர்த்துப் போராடும் ஆண்கள் குழுக்கள் உள்ளனவா?**

நல்ல செய்தி என்னவென்றால் கடந்த பத்துப் பதினைந்து வருடங்களாக ஆண்களும் ஆண்கள் குழுக்களும் ஆண்நிலை இயல்பையும் அதன் கட்டமைப்பையும் பற்றிப் பாக்க தொடங்கியுள்ளனர். அதில் காட்டப்படும் அக்கறையும் ஈடுபாடும் செயற்பாடு, ஆய்வறிவு மட்டம் ஆகிய இருதன்மை கொண்டதாகும். பெண்களின் கற்கை நெறியைப் போல் ஆண்களுக்கு, இடையேயான கற்கை நெறியும் உள்ளது. இது ஆண்நிலை இயல்பு, பெண்நிலை இயல்பு ஆகியவற்றை விளங்கிக் கொள்ள முயல்கிறது. ஆண்களின் ஆய்வுகள் அமெரிக்காவில் மேல்நிலையில் உள்ளன. ஆனால் இந்தியாவிலும் ஆண்கள், ஆண்நிலை இயல்பு பற்றிய ஆய்வுகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. பால் சமத்துவத்திற்கான பெண்ணிலைவாதிகளின் போராட்டத்தை ஆதரிக்கும் ஆண்களை சிலவேளைகளில் பெண்ணிலைவாத ஆதரவாளர்கள் என அழைப்பதுண்டு. அவர்கள் சமூக நியமங்களையும் தந்தைவழி அமைப்புக்களையும் கண்டிப்பதன் நோக்கம் பொருளாதார அரசியல் சமத்துவத்திற்கான குறிக்கோளுடன் பெண்கள் முயற்சிகளை முன்னெடுப்பதற்காகவே.

பெண்ணிலைவாதிகள் போலவே பெண்ணிலைவாதிகளுக்கு ஆதரவான ஆண்கள், தந்தைவழிச் சமூகத்தில் ஆண்கள் அதிகாரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலுகை ஆகியவற்றோடு இருக்கும் அதேநேரத்தில் சமத்துவமின்மை, பாரபட்சம், வன்முறை ஆகியவற்றினால் பெண்கள் துன்பப்படுகிறார்கள் என்பதை நம்புகின்றனர். ஆதிக்கத்தின் மாதிரியாக விளங்கும் ஆண்நிலை இயல்பானது பெண்களை மட்டுமல்ல ஆண்களையும் அவர்களது தெரிவுகளைக் கட்டுப்படுத்தி ஒடுக்குகிறது என்பதை அவர்கள் நம்புகின்றனர். பெண்நிலைவாதிகளுக்கு ஆதரவான ஆண்கள், பாலியல் ரீதியான தமது நடத்தைகளுக்கும் மனப்பான்மைக்கும் ஆண்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நம்புகின்றனர்.

பெண்ணிலைவாதிகள் மாதிரி அவர்கள் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான உறவில் சமாதானத்தையும் சமத்தன்மையையும் நம்பிக்கையையும் சந்தோசத்தையும் கொண்ட உலகைக் காண விரும்புகின்றனர். அங்கே ஆணோ பெண்ணோ இறுகிய ஆரோக்கியமற்ற ஆத்மாவை அழிக்கின்ற வாழ்க்கை முறைக்குள் அடைபட்டிருக்கப் போவதில்லை.

அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, இந்தியா பாகிஸ்தான ஆகிய இடங்களில் பெண்கள் மேல் பாவிக்கப்படும் வன்முறைக்கு எதிரான ஆண்கள் குழுக்கள் உள்ளன. அவர்கள் ஈடுபடும் வேலைகளுக்கு மத்தியில், பாடசாலைகளில் ஆண்பிள்ளைகளோடும் இளைஞர்களோடும் வன்முறைக்கு எதிரான செயல்களில் ஈடுபடுகின்றனர். இன்னும் வேலைத்தலங்களில் பாலியல் துன்புறுத்தலை தவிர்க்கும் வேலைபட்டறைகள் நடத்துகின்றனர். சமூகத்திற்கான கல்வி பற்றிய பிரசாரங்கள் செய்தும் இன்னும் வன்முறையை மேற்கொள்ளும் ஆண்களுக்கான புத்திமதிகளை சொல்லியும் கொடுக்கின்றனர். இவற்றுக்கு உதாரணமாக அமெரிக்காவிலுள்ள பாலியல் தன்மைக்கு எதிரான ஆண்களின் தேசிய அமைப்பு, கனடாவிலுள்ள வெள்ளை நாடா பிரச்சார அமைப்பு, இந்தியாவிலுள்ள "வன்முறைக்கும்

நல்ல குணமுடைய
ஆண்கள்
சமத்துவத்திற்கு
பயப்படுவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஷ்பிரயோகத்திற்கும் எதிரான ஆண்கள்" என்பவற்றைக் காட்டலாம். வெள்ளைநாடா பிரச்சார அமைப்பின் அடிப்படைத் தத்துவம் என்னவெனில் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எல்லா ஆண்களும் பொறுப்பை ஏற்க முடியாதாயினும் எல்லா ஆண்களும் ஆண்பிள்ளைகளும் இதை முடிவுக்கு கொண்டுவர பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்பதே.

ஓரினச் சேர்க்கையாளர்களும் அவர்களது அமைப்புகளும் மேலாதிக்க ஆண்நிலை இயல்புகளைத் தானாக கண்டிப்பதிலும் எதிர்ப்பதிலும் முக்கிய பாத்திரம் வகித்துள்ளனர். அத்தோடு பால்நிலை என்பது உயிரியல் ரீதியானது அல்ல சமூக கலாச்சாரத்தினால் கட்டமைக்கப்படுகிறது என்பதை மக்கள் விளங்கிக் கொள்வதற்கு அவர்கள் உதவியுள்ளனர். எதிர்மறை ஆண்நிலை இயல்பை கேள்விக்குள்ளாக்கும் ஆண்கள், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவம் வாழ்க்கையை இருசாராருக்கும் மிகவும் பூரணப்படுத்தி வைப்பதாக இருக்கும் என நம்புகின்றனர்.

**எதிர்மறை ஆண்நிலை இயல்பிலிருந்து தப்புவதற்கு வேறென்ன ஆண்களால் செய்ய முடியும், செய்ய வேண்டும்?**

பிள்ளைகளைக் கவனித்தல், வீட்டுவேலை ஆகியவற்றில் ஈடுபடுதல் ஒரு முக்கியமான வழியாகும் என நான் நினைக்கிறேன். பெற்றோராய் இருத்தல், குடும்ப வேலை, குடும்பச் சமயலறை ஆகியவற்றை நோக்கிய இயக்கம் ஒன்று தேவை என நான் நினைக்கிறேன். எங்களுடைய ஆண்பிள்ளைகளுக்கு அகப்பைகளையும் கரண்டிகளையும் கொடுப்போம். அதனால் அவர்களுடைய கைகளுக்கு துவக்குகளைத் தூக்குவதற்கு அவகாசம் கிடைக்காமல் இருக்கும். அவர்களுக்கு பிள்ளைகளைக் கொடுத்து அவர்களைக் கவனிக்கவும் அவர்களோடு விளையாடவும் செய்வதனால் அவர்களுக்கு மரணத்தோடு விளையாட நேரமிருக்காது போய்விடும். ஆண்களை தாய்மார் ஆக்குங்கள். அதனால் அவர்கள் பாலியல் வன்புணர்வாளர்களாகவோ, கொலைகாரர்களாகவோ இராணுவச் சிப்பாய்களாகவோ பயங்கரவாதிகளாகவோ மாற நேரமிருக்காது. அவர்களை வீட்டிலிருப்போராய் ஆக்குங்கள், அதனால் அவர்கள் கரச்சல்களை உருவாக்குவோராய் இருப்பதை விட்டுவிடுவார்கள். அவர்களில் அன்பு உணர்வுகளை உருவாக்குங்கள். அதனால் கொலைகார உணர்வுகள் அமிழ்ந்து போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம், இதற்கு மேலும் யுத்தங்களையோ, வன்முறையையோ, ஆட்களை ஆட்கள் வெட்டிச் சாய்க்கும் போட்டிகளையோ, வன்முறையாளர்களையோ ஆண்நிலை இயல்புகளையோ சகித்துக் கொண்டிருக்கப் போவதில்லை.



பிள்ளைகளைக் கவனித்தல், ஆண்களை தமது குடும்பத்தோடு இணைப்பதால் அவர்களது தனிமையை இல்லாமல் செய்துவிடுகிறது. அதனால் அவர்களது கடுந்தன்மையை அவர்களை அழுத்தும் ஆண்மையப்பட்ட முனைப்பை படிப்படியாக இழந்துவிடுகின்றனர். பிள்ளையைக் கவனித்தல் பூரணமான உணர்ச்சிவயப்பட்ட அர்ப்பணத்தைக் கோருகிறது. அது ஆணவமின்மை, சகிப்புத்தன்மை, பொறுமை, நல்லமனிதர்களாக்கும் குணங்கள் ஆகியவற்றை கோருகிறது. நெருக்கமான பொறுப்பான தகப்பனாயிருத்தல் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் ஆகியோரின் வாழ்க்கையை வளப்படுத்தும். ஜீவனோபாயத்தை மேற்கொள்ளுதல் என்பது ஆண்களை வாழ்க்கையிலிருந்தே அன்னியப்படுத்தி விடலாகாது. அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும், வெறுமனே பொருளாதார அப்பாவாக இருப்பது போதுமானதல்ல. அவர்கள் சமூகரீதியான உணர்ச்சி ரீதியான அப்பாவாகவும் இருக்க வேண்டும்.

இங்கே ஒரு யப்பான் தேச அப்பாவை பற்றியதொரு கதை வருகிறது. அவர் தன் வாழ்க்கை பூராகவும் ஜீவனோபாயத்தையொட்டி வாழ்ந்தாரேயொழிய, தன் குடும்பத்தோடு காலத்தை கழிக்க அவருக்கு நேரமிருக்கவில்லை. அவருடைய பிள்ளைகள் எவ்வளவு பெரியவர்கள் என்று கேள்வி கேட்டபோது அவர் கைகளை விரித்து "அவர்களில் ஒருவன் இவ்வளவு பெரியன்"என்றும் பின்னர் இன்னும் அகல விரித்து "மூத்தவன் இவ்வளவு பெரியவன்"என்றும் சொன்னார். இவ்வாறு அவர் ஏன் செய்தார் என்றால் அவர் தனது பிள்ளைகளை எப்பொழுதும் நித்திரையில் இருக்கும்போதே கண்டுள்ளார். அப்படி இல்லாமல் அவர்களை பார்ப்பதற்கு அவர் பகல் நேரத்தில் வீட்டில் இருந்ததில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் யப்பானிய பெண்கள் தமது அதிகமான நேரத்தை தமது கணவன்மார் இல்லாமலேயே கழிக்கின்றனர். இவர்கள் "பசுமை விதவைகள்" என அழைக்கப்படுகின்றனர். வீட்டுக்கு வராமல் போகும் தந்தைமார் பற்றிய மக்கள் அக்கறைக்குரிய நெதர்லாந்து தொலைக்காட்சியகத்தில் ஒரு காட்சி இடம்பெற்றது. அங்கே ஒரு பிள்ளை தனது தாயைப் பார்த்து யார் இந்த மனிதன், ஒவ்வொரு ஞாயிறும் மதியச் சாப்பாட்டுக்கு வந்து இறைச்சி வெட்டுகிறார் என்று கேட்கிறது.

இதோ எனக்கு விருப்பமான கதைகளில் ஒன்று: இது ஆண்கள் மாறலாம் என்ற நம்பிக்கையை எனக்களிக்கிறது. இது 1942ல் காந்திஜி வர்தாவில் தன்னுடைய ஆச்சிரமத்தில் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்திக் கொண்டிருந்தார். அவர் அடிக்கடி ஒவ்வொரு சில நிமிடங்களுக்கொருக்கால், "மன்னிக்க வேண்டும் கனவான்களே நான் கொஞ்ச நிமிடங்களுக்கு உள்ளே போக வேண்டும்"என்று சொல்லிவிட்டு உள்ளே போய், எட்டு அல்லது பத்து நிமிடம் கழித்து திரும்பினார். மூன்றாவது முறையும் அவர் அப்படிச் செய்தபோது, ஒரு பத்திரிகையாளர் ஏன் தங்களுடைய நேரத்தை இப்படி இவர் வீணடிக்கிறார், தங்களுடைய மாநாட்டை முடித்து விட்டு ஒரேயடியாக அவர் உள்ளே போகலாந்தானே என்று கேட்ட போது அதற்கு காந்திஜி அன்போடு, தனது மனைவி கஸ்தூரிபாய் கடும் வயிற்றோட்ட நோயால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மலசலக் கூடத்துக்கு போவதற்கு மிகவும் பலவீனமாக இருப்பதாகவும் சொன்னார்.

இந்தக் கதை காந்திஜி தாயாக இருப்பதற்கும் பொதுக் கடமைகளுக்குமிடையே ஒரு சமப்பார்வையை வாழ்க்கையில் கடைப்பிடித்தார் என்பதைக் காட்டும். அவரைப் பொறுத்தவரை காலனித்துவத்திற்கு எதிரான முக்கியமான போராட்டத்தை முன்னெடுப்பது எவ்வளவு முக்கியமானதோ அதேயளவு முக்கியமானதே கஸ்தூரிபாய்க்கு சேவை செய்வதும் ஆச்சிரம மலசலகூடங்களை சுத்தம் செய்வதும் கைத்தறியில் நெசவு செய்வதும். இறுதியான ஆய்வின்படி தமக்குள்ளே இருக்கும் "ஆணுக்கும்""பெண்ணுக்கும்"ஒரு சமநிலையை ஏற்படுத்தும் ஆண்களே பெரியவர்கள், அழியாதவர்கள். அதிகாரத்தைப் பாவிக்கும் ஆண்கள் பயத்தை ஏற்படுத்துபவர்கள், அவர்கள் வணக்கத்துக்குரியவர்கள் அல்லர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்போடு வாழுவோம் - சமாதானத்திற்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவோம்.

பெண்கள் இயக்கத்தில் இருக்கும் நாங்கள் புதுவகையான பெண்ணை உருவாக்க (அதிகாரம் மிக்க, செயற்படும், செயற்பாட்டாளர் பலிப்பொருளாகாத மற்றப் பெண்களுக்கு ஆதரவான, கூட்டுறவுத்தன்மையுடைய) முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு இப்பொழுது தேவைப்படுவது, ஆண்களிலும் ஆண்நிலை இயல்பிலும் புதிய மாதிரிகள், இவை இன்று நடைமுறையில் தடுக்கப்பட்டுள்ள நடத்தைகளையும் உணர்ச்சிகளையும் வெளி காட்டுபவையாக, பெண்களிலும் மற்ற ஆண்களிலும் மேலாதிக்கம் செலுத்துகின்ற, அதிகாரம் மேற்கொள்கின்றவற்றை அடிப்படையாகக் கொள்ளாதவையாக இருக்க வேண்டும்.

***ஆண்களும் பெண்களும் சமமானவர்களாக இருக்க வேண்டுமென நாம் விரும்பினால், நாங்கள் ஆண்நிலை, பெண்நிலை இயல்பு பற்றி முற்றுமுழுதாக புதிய கருத்துடைய பார்வையை வைக்க வேண்டுமா?***

**ஆம்** அப்படியே. பால்நிலை சமத்துவத்தைச் சாதிப்பதென்பது மீண்டும் "ஆண்" "பெண்" நிலை இயல்புகளையும் பெறுமதிகளையும் பார்த்து பின்வருமாறு கேட்க வேண்டும்

- முன்னேற்றம் என்பது "பெண்நிலை இயல்புகளையும் பெறுமதிகளையும் கீழானதாகக் கொண்டு, ஆண்நிலை இயல்புகளை மேலானதாகக் கொள்வதா?
- முன்னேற்றம் என்பது பெண்பால் நிலையிலிருந்து ஆண்நிலை பெறுமதிகளுக்கும் நடத்தை முறைகளுக்கும் பயணம் செய்வதா?
- பால்நிலை சமத்துவம், முன்னேற்றம் என்பது பெண்கள் பொது இடங்களுக்குள் நுழைந்து ஆண்கள் மாதிரி மாறுவதா?
- இன்றுள்ள துருவமயப்பட்ட, பொருதலால் பீடிக்கப்பட்ட சுற்றுச்சூழல் அழிக்கப்பட்ட உலகிற்கு தேவைப்படுவது மிகுந்த ஆண்நிலை இயல்பும் போட்டியுமா அல்லது மிகுந்த கூட்டுறவும் மிகுந்த கவனிப்பும் வளர்ப்பு முறையைப் பேணும் இயல்புமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இன்றைய உலகிற்கு தேவைப்படுவது அதிக பெண்மைக் குணங்களா அல்லது அதிக ஆண்மைக் குணங்களா?

- இன்னும் நாம் கொஞ்சம் மேலே சென்று, எமது பெறுமதிகளும் குணவியல்புகளும் "பெண்மை"க்குரியவையா அல்லது ஆண்மைக்குரியவையா என்றே கேட்டு விட வேண்டும். இந்த பெறுமானங்கள் மனிதப் பெறுமானங்கள் இல்லையா? இந்த ஆண் - பெண் இருசாராரும் தங்களுக்குள்ளேயே நல்ல "ஆண்"குணக் கூறுகளையும் நல்ல "பெண்"குணக்கூறுகளையும் விருத்தி செய்து கொள்ள வேண்டுமா? ஆண்களும் பெண்களுமான இருசாராரும் பகுத்தறியும் தன்மைக்குரிய உணர்வுமயமான, தன்னை அழுத்துகிற, உணர்ச்சி வசப்படும், தொழில் வல்லுனர்களாக, வீட்டைப் பாதுகாப்பவர்களாக பொது இடங்களிலும் வீட்டிலும் உள்ள பிரமுகர்களாக ஏன் இருக்கக்கூடாது? பெண்கள் பொது இடங்களில் புகுந்து, அவ்வேலைகளில் பொறுப்புகளை ஏற்பது அதிகரித்து வரும் பட்சத்தில் ஆண்கள் வீட்டு வேலைகளைப் பார்ப்பவர்களாக பிள்ளைகளை கவனித்து பராமரித்தல் வீட்டை நிர்வகித்தல் போன்ற பொறுப்புகளை ஏற்று ஏன் இயங்கக் கூடாது?




பால் சமத்துவம் என்பது எங்கள் ஒவ்வொருவரையும் பலமானவர்களாக, பராமரிப்பவர்களாக, பயமற்றவர்களாக உணர்ச்சிவசப்படுபவர்களாக உணர்வுபூர்வமானவர்களாக, பகுத்தறிவுடையவர்களாக இருப்பதை எதிர்பார்க்கிறது. பால்சமத்துவம் எங்களுக்குள் இருக்கும் சாதகமான ஆண் - பெண் இருநிலைகளில் எந்தவித ஏற்றத் தாழ்வுமற்ற சமத்துவத்தை கொண்டுவருவதையே எதிர்பார்க்கிறது. ஆண் பெண் இருபாலரும் தமது அதிகாரத்துக்கான வேட்கையை கைவிடுதல், தமது ஆற்றலை தவறாகப் பாவித்தலை தவிர்த்தல், தமது ஆற்றலின்மையை, கீழ்மைப்பட்ட நிலையை, விட்டுக் கொடுத்தலை இல்லாமல் செய்தால் மட்டுமே இவற்றைச் சாதிக்க முடியும். அபிவிருத்திக்கான அமைப்புகள் போதுமான அளவு அன்பு, பிறரைக் கவனித்தல், பராமரித்தல், பகிர்தல், நீதி சமத்துவம் ஆகிய மனித பெறுமானங்களையும் கொள்கைகளையும் பேணவும் மனதில் பதியப் பயிற்றுவிக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுக்கவும் முயற்சிக்கவில்லை என்று நாம் நம்புகிறோம். நாங்கள் நிகழ்ச்சி நிரல்கள் மூலோபாயங்கள் ஆகியவற்றைச் செய்யும் போது எவ்வாறு காலத்தையும் வளங்களையும் முயற்சி-யையும் செலவழித்து செய்கிறோமோ அவ்வாறு மக்கள் இயக்கங்-களும் பெண்கள் இயக்கங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் மக்களை உயர்வான நிலைக்கு கட்டியெழுப்புவதற்கு முயலவேண்டும் என்று நாம் நினைகிறோம். மக்கள் மேலாதிக்கம் செலுத்துவோராக, ஊழல் மிக்கவராக அல்லது சுயநலம் மிக்கவராக இருந்தால் நல்ல வகையான மூலோபாயங்களைப் பயன்படுத்தினாலும் அதன் பலன் பூச்சியமாகவே முடியும். ஆத்மீகத்திற்கும் அபிவிருத்திக்கும் பொருளாதாரத்திற்கும் ஒழுக்கவியலுக்கும் அறிவியலுக்கும் சாவுக்கும் இடையே இருக்கும் இரட்டைத்தன்மை கேள்விக்குட்-படுத்தப்பட்டு அகற்றப்பட வேண்டும்.

எங்களுடைய பூமிக்கிரகமும் அதில் வாழும் மக்களும் கோளமயப்பட்ட கலாசாரப்புரட்சியினால் மட்டுமே காப்பாற்றப்பட முடியும். மாற்றம் என்பது எங்கள் ஒவ்வொருவரிலும் எங்கள் உறவுகளிலும் எங்களுடைய குடும்பங்களிலும் சமூகங்களிலும் ஸ்தாபனங்களிலும் மிக அவசியமாக இடம் பெறவேண்டும். நாங்கள் இன்னொரு உலகு அமைவதற்கா வேலை செய்தால் அது சாத்தியமாகும் என நம்புகிறோம்.

நான் கதைப்பது நம்பமுடியாத கனவாகத் தெரியலாம் என்பது சாத்தியமே. ஆனால் இது பற்றி எனக்கு கவலையில்லை, ஏனெனில்:

நான் போய்ச் சேரவேண்டிய இடத்தை அடைகிறேனோ இல்லையோ கடைசி, அந்தப் பயணிகளின் கூட்டத்தில் நானும் ஒருவன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒவ்வொரு பெண்களுக்கும்

பலமற்ற மெல்லியலாளராகக் காட்டிக் கொண்ட ஒவ்வொரு பெண்ணுக்கும் தெரியும் தான் வலுவானவள் என்று.

ஒரு ஆண் தான் பாதிக்கப்படுபவனாக உணருகின்றபோது பலமானவனாக தோற்றுவதையிட்டு சலிப்படைகிறான்.

ஒவ்வொரு பெண்ணும் தான் ஒரு உணர்ச்சி வசப்படும் பெண் என அழைக்கப்படுவதையிட்டு சலிப்படையும் போது ஒரு ஆண் தான் விம்மி அழுவதற்கும் மென்தன்மை உடையவனாக இருப்பதற்கும் மறுக்கப்படுகிறான்.

ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய பிள்ளைகளால் கட்டுப்பட்டுக்கிடக்கும் போது ஒரு ஆண் தன் பெற்றோர் தன்மையின் முழுச் சந்தோசத்தையும் அனுபவிக்க மறுக்கப்படுகிறான்.

ஒவ்வொரு பெண்ணும் தனது சொந்த விடுதலைக்காக காலடி எடுத்து வைக்கும் போது ஒரு ஆண் விடுதலைக்கான வழி சிறிது இலகுவாக்கப்பட்டதை காண்கிறான்.

*நன்சி ஆர்.சிமித்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதனால் ஏதோ ஆண்களுக்கு பிரச்சனை இல்லை என்றில்லை.

ஒரு பெண்ணை பீடத்தில் இருத்தி வைத்து அவளை அவளது வேண்டாத வாழ்க்கையையே மேற்கொள்ள பாதுகாப்பாயாயின் நீ ஒரு ஆண் ஆதிக்கவாதி

நீ வீட்டிலிருந்து வீட்டுவேலையைச் செய்தால் நீ ஒரு "பெண்ணையன்"

நீ அதிகம் வேலை செய்தால் அவளோடு செலவழிப்பதற்கான நேரம் இருக்காது. நீ வேலை செய்யாவிடில் எதுக்கும் பயனில்லாத ஊர்சுற்றி.

அவள் சலிப்புடைய, குறைந்த சம்பளமுடைய ஒரே வகையான வேலை செய்தால் அவள் சுரண்டப்படுகிறாள். நீ சலிப்புடைய குறைந்த சம்பளமுடைய ஒரே வகையான வேலை செய்தால் நீ அதைவிட்டு வேறு நல்லதாகப் பார்.

உனக்கு, அவளுக்கு முன்னர் பதவியேற்றம் கிடைத்தால் அது சலுகை வழங்கல். உனக்கு முன்னர், அவளுக்கு வேலை கிடைத்தால் அது சமவாய்ப்பு.

நீ அவள் எவ்வளவு அழகாய் இருக்கிறாள் என்று சொன்னால் அது பாலியல் துன்புறுத்தல். நீ மௌனமாய் இருந்தால் அது ஆண் ஊதாசீனம்

நீ அழுதால் நீ ஒரு அழுமூஞ்சி. நீ அப்படிச் செய்யாவிடின் உணர்ச்சி-யற்ற மூதேசி.

நீ அவளுக்கு அடித்தால் அது மனைவியை அடிப்பதாகும். அவள் உனக்கடித்தால் அது தற்பாதுகாப்பு

நீ அவளைக் கலந்தாலோசிக்காது தீர்வெடுத்தால் நீ ஒரு ஆணா-திக்கவாதி. அவள் உன்னைக் கலந்தாலோசிக்காது தீர்வெடுத்தால் அவள் விடுதலை பெற்றவள்

நீ அவள் விரும்பாததைச் செய்யச் சொன்னால் அது மேலாதிக்கம். அவள் அவ்வாறு உன்னைக் கேட்டால் அது சலுகை

நீ அவளுடைய பெண்ணுருவத்தையும் சுருக்கு வைத்த உள்ளாடை-யையும் ரசித்தால் நீ மனப்பிறழ்வுடையோன். நீ அப்படிச் செய்யாவிடில் நீ ஒரு ஓர்இனச் சேர்க்கையாளன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ ஒரு பெண் தன் கால் மயிர்களை மழித்து நல்லமுறையில் வைத்திருப்பதை விரும்பினால் நீ காமுகன். அப்படியில்லாவிடில் நீ ஒரு கற்பனாவாதியல்லாதவன்.

நீ உன்னை நல்ல முறையில் வைத்திருந்தால் நீ ஒரு பெருமை பிடித்தவன். அப்படி வைத்திருக்காவிடில் நீ ஒரு "தூங்குமூஞ்சி."

நீ அவளுக்கு பூக்கள் வாங்கிக் கொடுத்தால் நீ எதற்காகவோ காரியமாற்றுகிறாய். அப்படியில்லாவிடில் நீ சிந்தனையற்றவன்

நீ உனது சாதனைகள் பற்றி பெருமைப்பட்டால் நீ உன்னையே முழுதும் நினைக்கிறாய். அப்படி இல்லாவிடில் நீ எந்த ஆசையூக்கமுமற்றவன்

அவளுக்கு தலைவலியென்றால் அவள் களைப்படைந்திருக்கிறாள்.

உனக்குத் தலைவலியென்றால் நீ அவளில் எந்தவித அன்பும் இல்லாதவன்

உனக்கு அது அடிக்கடி தேவைப்படுமாயின் நீ ஒரு அதீத போகி. அப்படியில்லாவிடில் உனக்கு வேறுயாரோ இருக்கிறார்.



**பெண்கள் இறப்பதற்கு முன்னர்**

**ஆண்கள் இறப்பது**

**ஆச்சரியப்படுகிற விஷயமல்ல,**

**அவர்கள் இறக்கத்தான் வேண்டும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REFERENCES AND NOTES


1. Arthur Brittain, *Masculinity and Power.* Oxford: Basil Blackwell, 1989, p.4.
2. Ann Oakley, *Sex, Gender and Society.* London: Gower Publishing Company, 1985, p.158.
3. Ibid.
4. R.W. Connell, "Arms and the Man" presented at a UNESCO Expert Group Meeting on "Male Roles and Masculinities in the Perspective of a Culture of Peace," Oslo, 1997, p.2.
5. Shakti Gawain with Laurel King, *Living in the Lights: A Guide to Personal and Planetary Transition.* New Delhi: Full Circle 1998, pp. 98-99.
6. Nata Duvuury, "Men Masculinity and Domestic Violence" from "Exploring Masculinities: A Travelling Seminar."
7. See "Men Masculinity and Domestic Violence in India," in *Domestic Violence in India: Exploring Strategies, Promoting Dialogue,* Summary Report of Four Studies, New DelhiL: ICRW, 2002.
8. Ibid., p. 69.
9. Ann Oakley, op.cit., p. 207.
10. R.W. Connell, op.cit.
11. Anuradha Chenoy, *Militarism and Women is South Asia.* Delhi: Kali for Women, 2002, pp. 2-3.
12. Nancy Chodorow as quoted by Alison M. Jaggar, p. 140.
13. Alison M. Jaggar, *Feminist Politics and Human Nature.* Rowman and Allanheld, 1983, p. 316.
14. Ann Oakely, op. cit., pp. 99-100.
15. Timothy Beneke, *Men on Rape.* New York: St. Martin's Press, 1982, p 12.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. Susan Brownmiller, *Against Our Will: Men, Women and Rape.* New York: Bantam Books, 1981, pp. 86-87.

17. Ibid., p. 75.

18. Sarah C. White, "Men Msculimities and the Politics of Development," in the *Oxfam Journal of Gender and Development,* Volume 5, Number 2, June 1997.

19. Ann Oakley, op.cit.p. 209.

20. Ann Oakley, op.cit., p. 72.

21. Ammu Joseph & Kalpana Sharma (eds.), *Terror, Counter - Terror: Women Speak Out.* New Delhi: Kali for Women, 2002.

22. Rubina Saigol, "Ter-reign of Terror", in Joseph & Sharma, op. cit.

23. R.W. Connell, "Arms and the Man", op.cit.

24. Barbara Ehrenreich and Deirdre English, *For Her Own Good.* London: Pluto Press, 1979, p.17.

25. Ibid., pp. 18-19.

26. R.W. Connell, op.cit., p. 5.

27. From "Gender Violence and Consstructin of Masculinities: An Exploratory Study in Punjab" by Renuka Dagar in *Domestic Violence in India,* op. cit., p. 28.

28. Ritu Menon, "Doing Peace: Women Resist Daily Battle in South Asia," paper Presented at the International Conference on Women, Peace-Building and Constitution Making," May 2-5, 2002, Colombo.

29. Susan Hawthorne, "Terrorism, globalization, bio / diversity, survival: a feminist perspective," in Joseph & Sharma (eds.), op. cit.

30. Sarah White, op. cit., pp. 21-22.

31. Mangesh Kulkarni, "Recasting Men, Rethinking Masculinity," an abstract in "Exploring Masculinities: A Travelling Seminar," op. cit.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. Susan Brownmiller, *Against Our Will: Men, Women and Rape*, New York: Bantam Books, 1981, pp. 88-89.

17. Ibid., p. 75.

18. Sarah C. White, "Men, Masculinities and the Politics of Development," in the *Oxfam Journal of Gender and Development*, Volume 5, Number 2, June 1997.

19. Ann Oakley, op. cit., p. 200.

20. Ann Oakley, op. cit., p. 72.

21. Ammu Joseph & Kalpana Sharma (eds.), *Terror Counter-Terror: Women Speak Out*, New Delhi: Kali for Women, 2003.

22. Rubina Saigol, "The reign of Terror", in Joseph & Sharma, op. cit.

23. R.W. Connell, "Arms and the Man", op. cit.

24. Barbara Ehrenreich and Deirdre English, *For Her Own Good*, London: Pluto Press, 1979, p. 17.

25. Ibid., pp. 18-19.

26. R.W. Connell, op. cit., p. 5.

27. [illegible], "Gender Violence and Construction of Masculinity: An Exploratory Study in Punjab" by [illegible] in *Domestic Violence in India*, op. cit., p. 28.

28. Rita Manchanda, "Taking Peace: Women Wage a Daily Battle in South Asia," paper Presented at the International Conference on Women, Peace Building and Constitution Making," May 2-5, 2002, Colombo.

29. Susan Hawthorne "Terrorism, globalization, [illegible]: a feminist perspective," in Joseph & Sharma (eds.), op. cit.

30. Sarah White, op. cit., pp. 22-23.

31. Margaret [illegible], "Reconstructing [illegible]" in "Exploring Masculinities & [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்களில் எல்லோரும் ஆண் நிலை இயல்பு பற்றி ஏன் கதைக்கிறார்கள்? அதன் மூலம் நாம் எதைக் கருது கிறோம்? ஒரே வகையான ஆண்நிலை இயல்புதான் இருக்கிறதா அல்லது அனேக ஆண்நிலை இயல்பு களுக்கு நாங்கள் முகங்கொடுக்கவேண்டுமா? மிகத் துலக்கமுடன் எழுதப்பட்டுள்ள இப்பிரசுரம், ஆண் நிலை இயல்பின் கருத்து, பால் நிலைத் தொடர்புகள், சமூக ஒழுங்குகள், அரசியல் பொருளாதார முறைமை கள், சமய, குடும்பக் கோட்பாடுகள் ஆகியவை தொடர் பான அதன் முக்கியத்துவம் பற்றி ஆழமான தேடுதலை மேற்கொள்கிறது. அது மேலோங்கிய ஆண் நிலை இயல்பு, பேராண்மை ஆண்நிலை இயல்பு, தொழிலாளர் முதலாளித்துவ ஆண்நிலை இயல்பு ஆகியவற்றில் தன் பார்வையைச் செலுத்துகிறது. இது ஆண்நிலை வாதத்திற்கும் இராணுவ வாதத்திற்கும் இடையேயும் இனவாதத்திற்கும் அடிப்படைவாதத்திற்கும் ஆண்நிலை வாதத்திற்கும் இடையேயும் முதலாளித்துவத்திற்கும் ஆண்நிலை வாதத்திற்கும் இடையேயும் உள்ள தொடர்புகளை ஆய்வு செய்கிறது. ஆண்களிலும் பெண் களிலும் இரு பகுதியினரிலும் எதிர் மறை ஆண் நிலை இயல்பினதும் பெண்ணிலை இயல்பினதும் பாதிப்பை இது வெளிக்கெடுத்துக் காட்டி, பால்நிலை உறவுகளை உருமாற்றுவதற்கான மாற்றீடுகளை ஆலோசனைக்கு எடுக்கிறது.

இவையெல்லாம் இங்கே ஆசிரியரின் எவரும் பின்பற்ற முடியாத கேள்வி பதில் முறையில் தரப்படுகிறது.

கமலா பஹாசின் **(Kamla Bhasin) :** இருபது வருடங் களுக்கு மேலாக **FAO** வின் "பசியிலிருந்து விடுதலை பிரச்சார" அமைப்போடு வேலை செய்தவர். அத்தோடு நன்கு அறியப்பட்ட பால்நிலைத்துறை பயிற்றுநரும் கூட. பரந்தளவில், பங்குகொளற் பயிற்சி, பெண்கள், பேண்தகு அபிவிருத்தி பற்றி எழுதியுள்ளார். இவை சம்பந்தமாக பாடல்களும் எழுதியுள்ளார்.

ISBN 955-9102-81-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org